www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 20
ஜூன் 11-17, 1995
ரூபா 10/00

தினமுரசு வாரமலர்

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 105

## யுத்த சதுரங்கம்



## முற்றுகை எங்கே?

ஒரு சூடான ஆய்வு

அழகியாக ஆசையா?

தமிழுக்கு வரும் பம்பாய் அழகி

இதயம் கவர் இலக்கிய நயம்

## விமானத் தாக்குதலில் ஹிட்லரின் தந்திரம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## ஊதி நெருப்பாகி....!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

நாடெங்கும் நடைபெற்று வரும்
தமிழ் இளைஞர்கள் கைது விவகாரத்தில்
அரசியல் கட்சிகளால்
அடிக்கடி அரசுக்குப் பல யோசனைகள்
எடுத்துச் சொல்லப்பட்டே வருகின்றன.

ஜனாதிபதி அவர்களும்
அரசியல் கட்சிகளின் யோசனைகளை
பரிசீலிப்பதாகச் சொல்லியிருந்தார்.
ஜனாதிபதியின் கருத்துக்கள்
நம்பிக்கை தருவதற்கு
நடைமுறை செயற்பாடு அவசியம்.

ஆனால், இன்னமும்
கைது விடயங்களில்
காலதாமதச் செயற்பாடுகள்
கசப்புக்களை ஏற்படுத்தியே வருகின்றன.

கமராவோடு பிடிபட்ட
தமிழ் இளைஞர் ஒருவர்
விசாரிக்கப்படாமலேயே
விபரீத அர்த்தம் கற்பிக்கப்பட்டு
தடுப்புக் காவலில் தள்ளப்பட்டார்.

உரிய தகவலை
பெற்றோருக்குத் தெரிவிக்காமல்
இழுத்தடித்த சம்பவங்களும் நடந்தன.
இது ஒரு உதாரணம் மட்டுமே.
ஒரு பானை சோற்றுக்கு
ஒரு சோறு பதம்!

பாரிய யுத்தம்
இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை
என்று கூறுகிறார் ஜனாதிபதி.
ஆனால், பாதுகாப்புப் படையினர்
கடந்த காலங்களை விட
கடும்போக்கை இப்போதே
ஆரம்பித்து விட்டதுபோலவே நிலைமைகள்
காணப்படுகின்றன.

அரசுடன் மோதல் இல்லாத
தமிழ் கட்சிகளின் கருத்துக்கள் கூட
கைது விவகாரங்களில்
கவனத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள
தமிழ் பேசும் உறுப்பினர்கள்
கைது செய்யப்படுவோர் விடயத்தில்
உத்தரவாதம் செய்தாலும் உதாசீனம்
செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

யாரோடு பேசினால்
காரியம் நடக்குமென்று தெரியவில்லை,
எடுத்ததற்கெல்லாம் ஜனாதிபதியிடம் செல்ல முடியுமா?
என்று தமிழ் பேசும் பா.உக்கள்
அதிருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஆட்சிக்கு வர முன்னர்
மனித உரிமைகள் பற்றி
அக்கறையோடு பேசியது பொதுஜன முன்னணி.
17 வருடகாலம் எதிர்க்கட்சியாக
இருந்த அனுபவம்-
அவமானங்கள் என்றால் என்ன
அப்பாவிகள் பாதிக்கப்படுவது எப்படி
என்பதையெல்லாம் உணரப் போதுமானது.

காணாமல் போனோர்
விசாரணை ஆணைக்குழு முதல்,
விஜய குமாரதுங்க கொலை
விசாரணை ஆணைக்குழு வரை
சட்டத்திற்கு மாறாக
சட்டம் ஒழுங்குப் பிரிவு நடவடிக்கைகளை
புட்டுப் புட்டு வைத்துக் கொண்டிருக்கின்றன.

எத்தனையோ அப்பாவிகள் பலியானார்கள்
கண்டபடியெல்லாம் கைதுகள் நடந்தன;
ஆனால், கைதாகி இருந்த குற்றவாளிகள்
படு சுலபமாகத் தப்பிச் சென்றிருக்கிறார்கள்.

இந்தத் தகவல்களெல்லாம்
இப்போதுதான் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
அந்தத் தவறுகளை அம்பலப்படுத்திக் கொண்டே
அதே தவறுகள்
தொடர அனுமதிக்கலாமா?

தீவிரவாதம்-
திட்டமிட்டுத் தோன்றுவதில்லை.
சூழ்நிலைதான் தீவிரவாதத்தை
உரமிட்டு உற்பத்தி செய்கிறது

சிறு பொறியை
ஊதி ஊதி பெரு நெருப்பாக்கும்
வேலையைச் செய்வது
அப்பாவிகளை அவமானப்படுத்தும்
நடைமுறைகள்தான் என்பதை
இன்னமும் உணராமல் இருக்கலாமா?

அரசியல் தீர்வு தரத்தயார்
என்று பேசுவதெல்லாம் இருக்கட்டும்,
முதலில், அப்பாவிகள் பாதிக்கப்படுவதை
தடுத்து நிறுத்திட தகுந்த முறை வகுப்பதும்
தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும்
செயற்பாடுதான் என்பதை
அரச தலைவர்கள் உணர வேண்டும்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## மன்னிப்பு

**சா**த்தானையும் பாவ அடிமைத்தனத்தையும், மரணத்தையும் கிறிஸ்து நாதர் வெற்றிகொண்டார். இவற்றின் பிடியில் இருந்த மானிடம் விடுதலை பெற கிறிஸ்து நாதர் வழிசமைத்தார். இறைமக்கள் இந்த வெற்றியில் பங்கடைகிறார்கள். இனி அவர்கள் அடிமைகள் இல்லை. இறை மைந்தன் கிறிஸ்துவிற்குள் சுதந்திர வாளிகள். ஆனால் இன்று மனிதன் மனிதனுக்கு அடிமையாக வாழ்கின்ற பரிதாப நிலை உருவாகியுள்ளது. அதேசமயம் கிறிஸ்து நாதர் உலக மக்களின் பாவங்களை மன்னித்தார். குற்றங் குறைகளையும் மன்னித்தார்.

ஆனால் நாம் பிறரின் குற்றங் குறைகளை மன்னிப்பதில்லை. இறைவனையும் மிஞ்சிவிடுகிறோம். பிரியரே! இந்நிலை மாற வேண்டும். இறைவழி செல்ல வேண்டும். மேற்குறிப்பிட்டபடி நாம் நடப்பதால் நாட்டிற்கு நாம் ஒருவழியில் நன்மை புரிகின்றோம். நம் நாடு மனித நாடாக ஒளிர நாம் உழைப்பவர்களாக, கடமையுணர்வுள்ளவர்களாக காணப்படுவோம். இறைவழி செல்வீர் மானிடரே!

"கிருபை உங்களோடிருப்பதாக"

அருட்திரு.சாம் இராஜேந்திரன்
வை.எம்.சி.ஏ.தண்ணீரூற்று, முள்ளியவளை.

## ஆன்மீகம்



### ஐந்துவகை மனிதர்களை அனுக வேண்டாம்.

**ஹ**ஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்கள் பின்வரும் ஐந்து வகை மனிதர்களுடன் அனுகவோ பேசவோ பிரயாணத்தில் அவர்களுடன் சேர்ந்து செல்வதோ கூடாது என்று உபதேசம் செய்துள்ளார்கள்.

1. **பாவி:** அவன் ஒரு அற்ப விலைக்கோ அல்லது அதற்குக் குறைவாகவோ உன்னை விற்றுவிடலாம். அந்த அற்பப் பணம் அவனுக்குக் கிடைக்காமலும் இருக்கலாம்.
2. **உலோபி:** உனக்குக் கடினமான தேவை ஏற்படும் சமயத்தில் உன்னை விட்டு அவன் ஒதுங்கிக் கொள்வான்.
3. **பொய் பேசுபவன்:** உன்னை அவன் ஏமாற்றிவிடுவான். தூரமான விஷயங்களை சமீபமாகவும், சமீபமான விஷயங்களை தூரமாகவும் காட்டுவான்.
4. **அறிவில்லாதவன்:** உனக்கு அவன் நல்லதைச் செய்திட நினைப்பான், ஆனால் அவனுடைய அறிவற்ற தன்மை உனக்கு தீமையை உண்டாக்கி வைக்கும்.
5. **பந்தத்துவத்தை முறிப்பவர்கள்:** அவர்களிடம் அனுகாதே. ஏனேன்றால் அவர்களைத் திருமறையில் மூன்று இடங்களில் சாபமிட்டிருக்கிறான்.

எம்.சி.கலீல்–கல்முனை 05

## கவிதைப்போட்டி இல–102

### பரிசுக்குரிய கவிதை

### அமைதி எப்போ?

முயற்சிகள் பலசெய்து
முன்னேற்ற வழி கண்டு
பின்னோக்கி பார்க்கையிலே
பீரங்கி வெடிச்சத்தம்!
எந்நாளும் இதைக்கேட்டு
ஏங்குகிறோம் அமைதிக்கு,
எப்போது அமைதி வரும்
எம் வாழ்வு முன்னேற...?

பொகவந்தலாவ-ஒ.கோடீஸ்வரன்.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**ஆண்டவனே பாரப்பா**

பங்கருக்குள் வாழ்ந்தாலும்
வாசலில் வீழ்ந்த செல்துண்டு
அக்காவின் தலையை
பதம்பார்த்து விட்டதே
ஐயோ நான் என்செய்வேன்
ஆண்டவனே பாரப்பா.

அம்பிளாந்துரையூர்-அரியரன்.

**முன்னேறு தம்பி!**

தவறிழைத்திடா வண்ணம்-தம்பி
தக்கதோர் வழியில் செல்வாய்!
புவனத்தின் எதிர்காலம் என்னில்
புரிந்து நீ கடமை செய்வாய்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**நிழல்தேடி...**

எனது நிழல்
என்னைத் தொடர
நான் தேடும்
நிழல் எதுவோ?

பொ.யசோதா-கொழும்பு-06.

**எதிர்கால சூரியர்கள்**

வருங்காலத் தூண்கள்
எதிர்கால வெளிச்சங்கள்
நிகழ்கால இருள்நீக்கி
நிறைவேற்றும் திடம்பெற்றால்
நிலத்திலும் சூரியன்
நிமிர்ந்து ஒளிர்ந்திடும்.

வீ.ஜெய்சங்கர்-பெரியகல்லாறு.

**முயல்!**

முடிந்ததைச்
செய்
முடியாததை
முயன்றுபார்
முயற்சிதான்
முன்னேற்றத்தின்
திறவுகோல்.

என்.ஏ.புவனேஸ்வரி-பசறை.

**விபரீத விளையாட்டு**

வேண்டாம்
மகனே!
வேடிக்கை
வேட்டுக்கள்
இலக்கற்று
இரைதேடும்
காலமிது.

தீபன்-பண்ராடவளை.



**பார்ப்பதென்ன?**

நாளைய மன்னன்-இங்கே
சுவரிலேறிப்பார்ப்பதென்ன?
காணாமல் போன தந்தை
இங்கிருப்பார் என்று தானோ?

ஏ.அஹமது ஜுனைது-ஏறாவூர்-06.

**விடியல் காண**

விடியல் வருமென்று
விரைந்து போ மகனே
காலம் துணையாகும்
கடந்து செல் மகனே.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**"முயற்சி"**

முயற்சியே! உயர்ச்சியின்
ஏணி
பயிற்சியே அதன் பக்கபலம்,
தவறின் கிடைப்பது,
வீழ்ச்சியும், இகழ்ச்சியும்.

வாழையூர்-வைரமுத்து.

**ஒற்றுமை**

அந்தரத்தில்
நிற்கும்
நான்
சமாதானத்திற்கு
சமானம்.

சுப்பிரமணியம் வாணீஸ்வரி-அப்பர் கலஹா.

**பிடிபட்டால்.**

ஓடாதே மகனே
விசாரித்த பின்
விடுவார்கள் தானே?

தம்பி தவம்-காரைதீவு.

**பாதுகாப்பு**

ஆயுதங்களே
ஆராதிக்கப்படும்
அவனியில்
அவரவர் பாதுகாப்பு
அவரவர் கைகளில்.


த.தயாபரன்-கோமில்குளம்.

**சறுக்கும் நிழல்!**

"சாணேற
முழமிறங்கும்!
நீயேற...
நிழலிறங்குதோ?"!

சியாம் எம்.யூசுப்-
மட்/கோட்டைமுனை.

## கவிதைப் போட்டி இல-105



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 17.06.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 105
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772,
கொழும்பு.







ராஜேந்திரகுமாரின் தொடர் ஆரம்பமே அட்டகாசம்தான்.

வீ.திருமாறன்-வவுனியா.

□□

அன்பின் முரசே! நீ வாரம் ஒரு முறை என் கரம் வந்தடைகிறாய். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறுகதை, மகாபாரதம், தேன்கிண்ணம், பாப்பாமுரசு, தாய், ரசிகன் தரும் இலக்கிய நயம், சினிவிசிட் இவை அனைத்தும் அருமையிலும் அருமை. உன் சேவை என்றென்றும் நீடித்து வளம்பெற வாழ்த்துகின்றேன்.

பீ.உதயகலா-அவிசாவளை.

□□

அரசியல் சலிப்பு ஏற்பட்டாலும் முரசு தரும் அரசியல் துருவல்கள் சலிப்பதேயில்லை. அட்டகாசம்!

வி.உவைஸ்-கல்முனை.

'தாய்' வாரா வாரம் நிறைவான கருத்துக்களால் நெஞ்சத்தை தாலாட்டுகிறாள்.

எ.அருண்குமார்-குவைட்.

மகாபாரதத் தொடர் ஒரு வாரம் இல்லாமல் போனது எமக்கெல்லாம் ஏமாற்றம். தொலைக்காட்சி தவறவிட்டாலும் முரசு தவறவிடலாமா?

கு.கோசிநாதன்-கொழும்பு-06.

தித்திக்கும் தினமுரசே!
நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் படுஜோர்.
ஜாக்கிரதை! உனக்கு கண்பட்டு விடப்போகிறது.

ஏ.ஏ.பீட்டர்-இ/நிவித்திகல.

□□

தாய் தொடர்கதையை தந்து எங்கள் உள்ளத்திற்கு உற்சாகமூட்டுகிறீர்கள். பாராட்டுக்கள் நன்றி.

வி.சுகுமார்-டயகம.

இனிது! இனிது..!
இதயம் இனிக்க
இதழ்கள் படிக்க
இடுக்கண் மறந்து
இளையவள் நகைக்க
இன்பம் சேர்க்கும்
இலக்கிய நயமே..!
இனிது இனிது...
இனிதிலும் இனிது..!

ரி.ராதா-கற்பிட்டி.

இதயம் கவர்ந்த இனிய முரசே...
உன் உதயம் கண்டே உள்ளம் மகிழ்ந்தேன். நான் உன்னை படிப்பது பொழுது போக்குவதற்கல்ல!

எம்.எச்.ஹிதாயத்துல்லாஹ்-கண்டி.

□□

சில்மிசம் செய்யும் தமிழக எழுத்தாளரிடம் நாவல் வாங்கிவிட்டாயே! முரசே உனக்குப் பாராட்டுக்கள்!

எம்.ஹனீபா-அநுராதபுரம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# யாழில் பரவலான வெடிகுண்டுப் பரிசோதனைகள்!

# கிளிநொச்சியில் பறந்த புலிகளின் விமானம்!

(நமது நிருபர்)

**ஆயுதக் கொள்வனவின் பின்னர் பாரிய இராணுவ நடவடிக்கைகளை படையினர் தீவிரமாக்கலாம் என்று நம்பப்படுகிறது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் வெளிநாட்டு ஆயுத உதவிகள் வந்து சேர்ந்துவிடும் என்று தெரிகிறது. இதேவேளை புலிகளும் பலமுனைத் தாக்குதல்களுக்கு தயாராகி வருகின்றனர் என்று யாழில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இலங்கை அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் அமெரிக்கா, ஃபிரான்ஸ், இந்தியா உட்பட பல வெளிநாடுகள் இராணுவ ரீதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

வெளிநாடுகளுக்கு ஆயுதக் கொள்வனவுக்குச் சென்ற படை அதிகாரிகள் குழு திருப்தியோடு நாடு திரும்பியிருந்தது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் வெளிநாடுகள் பலவற்றின் ஆயுத உதவிகள் வந்துசேர்ந்துவிடும் என்று இராணுவ வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

ஆயுத உதவிகள் வந்துசேர்ந்த பின்னர் தாக்குதல்களை விரிவாக நடத்துவதன் மூலம் படையினருக்கும் உற்சாகமான மனநிலை ஏற்படும் என்று இராணுவ அதிகாரிகள் சிலர் கருத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## புலிகள் ஆலோசனை

இதே வேளை படையினரின் பாரிய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் வழிவகைகள் குறித்து புலிகளின் உயர்மட்டம் ஆராய்ந்து வருகிறது.

பாரிய நடவடிக்கை ஒன்றை படையினர் அதிக பலத்தோடு முன்னெடுக்கும் போது கரும்புலித்தாக்குதல்களை புலிகள் தமது பிரதான எதிர்ப்பு நடிவடிக்கையாக மேற்கொள்ளலாம் என்று நம்பப்படுகிறது.

இத்தகவலை உறுதி செய்யும் வகையில் யாழ் மாவட்டத்தில் பல்வேறு வெடிகுண்டுத்தாக்குதல் பயிற்சிகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இப்பரிசோதனைகளில் புலிகளின் கரும்புலிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் சிலர் உயிரிழந்துள்ளனர்.

16.05.95 அன்று நடைபெற்ற வெடிகுண்டு பரிசோதனையில் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் பலியானார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிவகுமாரன் என்றழைக்கப்படும் புஷ்பவேல் சுரேஷ்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

30.05.95 அன்று யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற மற்றொரு வெடிகுண்டுப்



வெடிவிபத்தில் பலியான சிவகுமாரன்

பரிசோதனையில் லெப். குலேந்திரன் (மட்டக்களப்பைச் சேர்ந்த ரூபன் நிக்சன்) என்பவர் பலியானார். அதே தினம் சோமபாலன் புவனேந்திரன் என்னும் புலி உறுப்பினரும் வெடி விபத்தில் பலியானார்.

## விமானப் பரிசோதனை

இதேவேளை கடந்த வாரத்தில் கிளிநொச்சியில் புலிகளுக்குச் சொந்தமான மென்ரக•விமானம் (கிளைடர்) ஒன்றைப் புலிகள் வெள்ளோட்டம் நடத்திப் பார்த்ததாக நேரில் கண்ட சிலர் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக் குளத்தின் மேலாக புலிகளின் விமானம் பறந்து செல்லவைத்து பரிசோதிக்கப் பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இத் தகவலை முரசு நிருபரால் உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

பூநகரி இராணுவ முகாம் பகுதியில் புலிகள் இடைக்கிடையே தாக்குதல் நடத்திவருகின்றனர்.

01.06.95 அன்றும் பூநகரியின் வடக்குப் பக்கமாக உள்ள இராணுவ காவலரண் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

## கடற்பயிற்சி

கடற்புலிகளின் புதிய பிரிவான நீரடி மீட்புப் பிரிவுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நீரடி நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கலா என்னும் பெண் உறுப்பினர் 30.05.95 அன்று பயிற்சியின் போது உயிரிழந்தார்.

## ஆள் திரட்டல்

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் போர்க்கால பிரசாரங்களை புலிகள் அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே நடைபெற்ற புலிகளது தாக்குதல்களை விபரிக்கும் வீடியோ படங்களும் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

# பாரிய தேடுதலுக்கு படைகள் ஆயத்தம்!

## காடழிப்பால் மட்டக்களப்பு விவசாயிகள் கவலை.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் பாரிய தேடுதல் நடவடிக்கைக்காக கிழக்கில் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

கிழக்கில் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதால் காடுகளில் தேடுதல் வேட்டை நடத்த படையினர் திட்டமிட்டு வருவதாக அறியப்படுகிறது.

காடுகளுக்குள் புலிகள் தமது பதுங்கு நிலைகளை உருவாக்காமல் தடுப்பதற்காக காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 600 ஹெக்டர் காடுகள் வரை படையினரின் நடவடிக்கைகளால் அழிக்கப் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளில் பாடசாலை மாணவர்களும், இளைஞர்-யுவதிகளும் படையினரால் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

காடுகளில் வெட்டப்பட்ட மரக்குற்றிகளைக் கொண்டு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள மதில்கள், வேலிகள் என்பனவும் சில பகுதிகளில் படையினரால் அகற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படைக்குவிப்பு அதிகமானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கன்னன்குடா, ஆயித்திய மலை, கொக்கட்டிச் சோலை, உன்னிச்சை, இலுப்படிச்சேனை போன்ற கிராமங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்படவேண்டிய நிலை ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை, காடழிப்பாலும், தேடுதல் நடவடிக்கைகளாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் பெரும் பாதிப்படையலாம் என்று அஞ்சப் படுகிறது.

# கொதிக்கும் வெய்யில்-தகிக்கும் மணல்!

## சோதனை முகாமில் தவிக்கும் பயணிகள்!

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம் தடை அரண்கள் சிலவற்றில் பொது மக்கள் தேவையற்ற சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு பதுளைவீதியில் இருக்கிறது தம்பானம் வெளி இராணுவ முகாம். பேருந்துகளை நிறுத்தும் இராணுவத்தினர் அதிலிருந்து பயணிகளைக் கீழே இறங்குமாறு சொல்லுகின்றனர். பின்னர் அருகிலுள்ள வயல் பாதையால் கால்மைல் தூரம் வரை பயணிகள் நடந்துசெல்லுமாறு கேட்கப் படுகின்றனர்.

கொதிக்கும் வெய்யில் நேரத்தில் வயல் மணலில் நடந்துசெல்லும் பயணிகள் இதனால் தவித்துப்போகின்றனர். பயணிகளின் பொதிகளையோ, பயணிகளையோ குறிப்பிட்ட இராணுவ முகாமில் சோதனையிடுவதில்லை.

பயணிகள் இறக்கி நடக்கவைப்பதற்காக மட்டுமே அங்கு பேருந்துக்கள் நிறுத்தப் படுகின்றனவாம்.

இது தவிர, பெரியபுல்லுமலை இராணுவ சோதனை முகாமில் ஒரு பேருந்தில் இராணுவ சோதனை மேற்கொள்ள மட்டும் ஒரு மணி நேரமாகிறதாம். ஒரே ஒரு இராணுவ வீரர் மட்டுமே சோதனை செய்வதால்தான் இந்த நிலை என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இராணுவத்தினருக்கு உதவுவதாக க்கூறப்படும் இருவர் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

55 வயதான தமிழர் ஒருவர் கடந்த வாரம் மின்சாராக் கம்பத்தில் கட்டி வைத்துக் கொல்லப்பட்டார்.

06.05.95 அன்று மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பியதாச என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் தமிழ் பெண் ஒருவரையே திருமணம் செய்திருந்தார்.

# கனடாவில் புலிகள் ஊர்வலம்!

## தமிழீழத்தை அங்கீகரிக்குமாறு கோரிக்கை!

கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் என்னும் பெயரில் புலிகள் அமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.

'உலகத் தமிழர்' என்னும் மாதாந்தப் பத்திரிகையும் அவர்களால் வெளியிடப்பட்டு வருகிறது.

கடந்த 5.6.95 அன்று கனடாவில் ஒட்டோவாவில் ஊர்வலம் ஒன்றை உலகத் தமிழர் இயக்கம் நடத்தியது.

இம்மாதம் 10 ம் திகதி கனடாவில் உள்ள ரொரன்ரோவிலும் உலகத் தமிழர் இயக்கத்தினரால் ஊர்வலம் ஒன்று நடத்தப்படுகிறது.

தமிழீத்திற்கான சர்வேதச அங்கீகாரத்தைக் கோரியே ஊர்வலங்கள் நடத்தப் படுவதாக உலகத் தமிழர் இயக்கம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ மக்களின் முதன்மைச் சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழீழ அரசு நோக்கிய அரசையும் (புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் நிர்வாக அமைப்புக்கள்) சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்.

சிறீலங்கா அரசிற்கு நிதி, ஆயுத தளபாட உதவிகளைச் சர்வதேச நாடுகள் வழங்கக் கூடாது.

தமிழ் மக்கள் ஒரு தேசியஇனம் என்ற வகையில் தாயக ஒருமைப்பாடு, தன்னாட்சி உரிமை என்பவற்றை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள சர்வதேச அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகளை முன்வைத்தே ஊர்வலம் நடத்தப்படுவதாக உலகத் தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள பிரசுரம் தெரிவிக்கிறது.

மேலும் பல நாடுகளிலும் ஊர்வலங்கள் நடத்த புலிகள் அமைப்பினர் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

இலங்கை அரசுக்கு வெளிநாடுகள் பல உதவ முன்வந்துள்ளதையடுத்தே இவ்வாறான ஊர்வலங்களை நடத்த புலிகள் முன்வந்துள்ளனர்.

# கணேசநாதனுக்கு கல்தா!

## புகார்கள் குறித்து விசாரணை?

வடக்கு -கிழக்கு மாகாண சபை தலைமைச் செயலாளராக இருந்த திரு. கணேசநாதன் அப்பதவியில் இருந்து தூக்கப் படுகிறார்.

புதிய தலைமைச் செயலாளராக திரு.கிருஸ்ணமூர்த்தி நியமிக்கப்படவுள்ளார். நியமனக் கடிதத்தை 5.06.95 அன்று திரு.கிருஸ்ணமூர்த்தி பெற்றுக் கொண்டார். திரு.கிருஸ்ணமூர்த்தி 1988 முதல் 1991 வரை வடக்கு- கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராக இருந்தவர். பின்னர் உள்நாட்டு, பொது அலுவல்கள் அமைச்சில் உதவிச் செயலாளராக கடமையாற்றியவர்.

திரு.கணேசநாதனை தொடர்ந்தும் தலைமைச் செயலாளராக இருக்க அனுமதிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடம் விரும்பிக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.கணேசநாதன் மாற்றப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை செயலாளர் பதவியில் இருந்து மாற்றப் பட்டாலும் திரு.கணேசநாதன் வடக்கு -கிழக்கு ஆளுநரின் செயலாளராக இருப்பார்.

திரு.கணேசநாதன் குறித்து எழுந்துள்ள புகார்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரவுள்ளதாக ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கவேல் முரசுக்குத் தெரிவித்தார்.

# ஆயுதங்களை கீழே போட படைகள் தயாரா?

## "இழுத்துப் பூட்டப் பட்ட சமாதானக் கதவு"

இனிமேல் புலிகள் அமைப்போடு பேச்சுவார்த்தை நடத்துவதானால் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்குமாறு நிபந்தனை விதிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பாக 06.06.95 அன்று புலிகளின் 'ஈழநாதம்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச வரவேண்டும் என்று நிபந்தனை விதிப்போம் என்கிறார் சந்திரிக்கா.

அப்படியானல் தனது படைகளுக்கும் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கூற வேண்டும். அதனைச் செய்ய சந்திரிக்கா தயாரா?

இருதரப்பினதும் பலத்தை அளவிடும் அளவுமானியாக ஆயுதவலிமை இருக்கிறது. இதில் ஒரு தரப்பை மட்டும் ஆயுதங்களைக் கீழே வைக்கச் சொல்வது என்ன நியாயம்?

அவ்வாறு நிபந்தனை விதிப்பது மூலம் மொத்தத்தில் சந்திரிக்கா அம்மையார் சமாதானக்கதவுகளை இழுத்து பூட்டி விட்டார், என்று 'ஈழநாதம்' எழுதியுள்ளது.

# திரியாயில் சேதம் எதுவுமில்லை!

## யாழ்ப்பாணத்தில் புலிகள் தெரிவிப்பு

திருமலை மாவட்டத்தில் திரியாய் காட்டுப்பகுதியில் நடந்த மோதல்களில் தமது தரப்பில் சேதம் அதிகம் இல்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

03.06.95 அன்று யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலியில் தெரிவிக்கப்பட்ட செய்தி பின்வருமாறு!

"திரியாய் காட்டில் புலிகளின் இழப்புக் குறித்து அரசு பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது.

திரியாய்க் காட்டில் பலியான 18 படையினரில் 10 சடலங்களை புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

60 புலிகளைக் கொன்றதாக அரசு கூறுவதில் உண்மையில்லை. உண்மையில் முள் கிழித்த காயம் கூட புலிகளுக்கு ஏற்படவில்லை." என்று புலிகளின் குரல் தெரிவித்தது.

# எல்லாளன் படைக்கு வந்த மிதிவெடி?

கடந்த வார முரசில் எல்லாளன் படை என்னும் பெயரில் வெளியான அறிக்கை குறித்து செய்தி வெளியாகியிருந்தது.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை படையினர் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினால் கொழும்பில் கண்ணிவெடிகள் வைக்கப்படும்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை வெளிவந்த பின்னர் வடபகுதியில் இருந்து வவுனியா வந்த ஒரு பெண் வைத்திருந்த சூட்கேஸில் இருந்து மிதிவெடிகளுக்கு பயன்படும் பொருட்கள் சிக்கியுள்ளன.

ஐந்து மிதிவெடிகள் தயாரிக்கக் கூடிய பொருட்கள் சூட்கேஸில் இருந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்த சூட்கேஸ் தனது பக்கத்து வீட்டுக்காரர் தந்துவிட்டது என்று கைது செய்யப்பட்டுள்ள பெண்மணி கூறியுள்ளாராம்.

புலிகள் அமைப்பினால் நேரடியாக உரிமை கோரமுடியாத தாக்குதல்களுக்கு 'எல்லாளன் படை' என்ற பெயர் பயன்படுத்தப்படுவதாக நம்பப்பட்டு வருகிறது.

# புலிகளின் கிழக்குத் தலைவர் பலி!

மட்டக்களப்பு தரவைக்குள முகாம் தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புப் பொறுப்பாளர் தமது தரப்பில் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண புலிகளது தலைவர்களில் ஒருவரான லெப்.கேணல் வீரவன் என்றழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சத்தியநாதன் என்பவரே பலியானவராவார். அவரோடு மேலும் பதினாறு புலிகள் பலியானதாகவும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் செய்திகள்

– (மன்னார் நிருபர்) –

## ஆசிரியர் தட்டுப்பாடு

மன்னார் மாவட்டத்தில் தற்போது 366 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. உயர்தர விஞ்ஞான, கணித பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை. இதனால் மாணவர்களது கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்கள் திண்டாட்டம்

கடல் வலயத்தடை மீண்டும் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார்ப் பகுதியில் உள்ள மீனவர்கள் தொழில் ஏதுமின்றி கஷ்டப்படுகின்றனர். இதனால் கற்பிட்டிப் பகுதிக்கு, மீன்–கருவாடு என்பன அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு அரசின் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

## கல்வி பாதிப்பு

மன்னார்த்தீவில் இயங்கிவரும் பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் மாணவர்களை ஏமாற்றி வருகின்றனராம்.

ஐ.எஸ்.ஏ. ஆசிரியர்கள் சில பாடசாலைகளுக்குச் சென்று தமது கையொப்பத்தை மட்டும் பதித்து விட்டு எதுவுமே படித்துக் கொடுப்பதில்லையாம்.

இங்குள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாதத்தில் 2 வாரங்கள் வரை கற்பிட்டியில் கழிக்கின்றனராம். பெருநாள்–திருநாள் வந்தால் இரு வாரங்களுக்கு முன்பே மூட்டை முடிச்சுக்களை கட்டிக் கொண்டு கற்பிட்டி சென்று விடுகின்றனராம். பாவம் மாணவர்கள்.

## 125 வது ஆண்டு விழா

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 125 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இதனை முன்னிட்டு கல்லூரியில் பாரியளவில் விழா ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. விஷேட முத்திரை ஒன்றும், மலர் ஒன்றும் வெளியிடப் படவுள்ளன.

# வாக்குறுதி கொடுத்தோர் பதவியில்!

## பஸ்சேவை மட்டும் கிடைக்கவேயில்லை!

பதுளையிலிருந்து மேமலை என்னுமிடத்துக்கு 15மைல் தூரம் இருக்கின்றது. இந்த இடத்திற்கு 1982ம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபையால் பஸ் ஒன்று சேவையில் விடப்பட்டது. இக்காலத்தில் காலை 8.00 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் பஸ் மேமலைக்கு வந்து சென்றது. இந்தசேவையின் மூலம் நல்ல வருமானம் இ.போ.சபைக்கு இருந்ததால் 1987ம் ஆண்டு மேமலைக்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் நலன் கருதி காலை 6.00, 8.00, பகல் 12.00 பி.ப.2.00, மாலை 4.00, 6.00 மணி என்று 6 தடவைகள் பஸ் போய் வந்தது.

1989 சில வன்செயல்களைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் தினசரி இரு தடவைகள் மட்டுமே நடைபெற்றன. இதனால் பதுளையிலுள்ள பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள், கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் ஆடைத்தொழிற்சாலைகளுக்கும் வேலைக்குச் செல்பவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த பஸ் சேவையினால் கிட்டத்தட்ட 6000 மக்கள் நன்மை பெற்று வந்தனர். கடந்த தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டுவந்த அரசியல் வாதிகளிடமும் இப்பகுதி மக்கள் கேட்ட உதவிகளில் இதுவும் ஒன்று. அரசியல் வாதிகள் பஸ் சேவையை செய்து தருவதாகக் கூறியவர்கள் அனைவரும் இன்று பதவியில் இருக்கின்றனர்.

பொது மக்கள் தினமும் அரசியல் வாதிகளிடம் கோரிக்கை விடுத்தும் தற்காலிக மாக வேலை செய்து கொண்டிருந்த 2 நேர பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

பஸ்சேவை சீராக இல்லாததால் இப் பிரச்சனை சம்பந்தமாக இப்பகுதி பிரதேச சபை உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப் பத்திரிகை செய்தியை கவனம் எடுத்து இப்பகுதி மக்களுக்கு சிறந்த பஸ் சேவையை பெற்று தருவார்கள் என ஸ்பிங்வெளி மேமலை பகுதியில் வசிக்கும் பொது மக்களும் நானும் எதிர்பார்க்கிறோம்.

வ. அந்தணீஸ் ஸ்பிரிங்வெளி.

# மாநகர முதல்வர் மறுப்பு

13.05.1995ந் திகதி தினமுரசு பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் திரு. செழியன் பேரின்பநாயகம் தெரிவித்துள்ள மறுப்பு இது:

மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஏறத்தாழ 30 லட்சம் ரூபா வரை வரியிறுப்பாளர்களால் சோலைவரி செலுத்தல் வேண்டும். முன்பு இருந்த நிர்வாகம் நிலுவையான வரியை அறவிடுவதன் பொருட்டு நடுக்கட்டல் செய்வதற்கு முன்வரவில்லை. சபையின் நிதி நிலைமை படு பாதாளத்தில் தள்ளப்பட்டு உள்ளதால் நடுக்கட்டல் செய்து (வீட்டுப் பொருட்களை எடுத்தல்) வரி அறவிடவேண்டிய துாப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எந்த வரியிறுப்பாளரையும் துன்புறுத்தும் நோக்குடன் இவ்வேலை செய்யப்படவில்லை.

அலுவலக நடைமுறைக்கமைய முறைப்படி பொலிஸ் உத்தியோகத்தரது ஒத்தாசையுடன் வீட்டுப் பொருட்கள் அகற்றப்பட்டு சம்பந்தப்பட்டவர்களால் வரி முற்றாகச் செலுத்தப்பட்டதும் (திணைக்கள கட்டணம் உட்பட) பொருட்கள் திருப்பி ஒப்படைக்கப்படும்.

குறித்த வங்கியில் கடமைபுரியும் பெண்ணிற்கு அலவலக நடைமுறை தெரியாததையிட்டு மனம் வருந்துகிறேன்.

வரி அறவீட்டுக்குழு தர்க்கம் புரிந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. வரி அறவிடும் குழுவிற்கு ஒரு அதிகாரி நியமிக்கப்படவுமில்லை. அவர் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பிற்கு இடமாற்றம் செய்யப்படவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# புத்தளத்தில் புல்டோசர்கள்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள புழுதி வயல் கிராமத்தின் கிழக்குப்பகுதியில் உள்ள சதுப்பு நிலங்களில் ஏராளமான இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுவருவதன் காரணமாக கால்வாய்கள், அணைக் கட்டுக்கள் அமைப்பதற்காக கொண்டு செல்லப்படும் புல்டோசர்கள் அடிக்கடி புழுதிவயல் கிராமத்தின் மண்பாதையில் நடமாடுகின்றன.

ஏற்கெனவே கடும் மழையினாலும், வெள்ளப் பெருக்கினாலும் சிதைவடைந்து பஸ் போக்குவரத்துக்கூட நின்று போய்விட்ட இப்பாதையில் புல்டோசர்கள் பிரயாணம் செய்வதனால் மேலும் மோசமாக சிதைவடைந்து வருகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுக்க முரசினூடாக வேண்டுகிறேன்.

ஏ. ஆர். எம். ஹபீப்தீன்
புழுதிவயல் இளைஞர் கழக செயலாளர்.

# கட்டி முடிந்த பின் திறக்கத் தாமதமோ?

பொகவந்தலாவை நகரில் நீண்ட காலமாக இருந்து வந்த குறைகளிலொன்று, இந்நகரில் ஒரு பொது வாசிக சாலையொன்று இல்லாமையாகும். இக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக அம்பகமுவ பிரதேச சபையால், அதற்குச் சொந்தமான பொகவந்தலாவ, சென் மேரிஸ் கல்லூரி வீதியில் இருக்கும் ஒரு கட்டிடத்தைச் சுமார் ஐம்பதாயிரம் ரூபா செலவில் திருத்தி வாசிகசாலையாகக் கட்டப்பட்டது.

இக்கட்டிடம் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் திறப்பதாக இருந்தது. ஆனால், இன்னும் திறந்தபாடில்லை. ஒரு கல்லூரியின் அண்மையில் அமைந்திருக்கும் இவ்வாசிகசாலையைத் திறப்பதன் மூலம் பாடசாலை மாணவர்களும், நகர மக்களும் பெரும் நன்மை அடைவார்கள். எனவே இவ்வாசிகசாலையைத் திறப்பதில் அம்பகமுவ பிரதேச சபைத்தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரென எதிர்பார்க்கின்றோம்.

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவை.

# பொது நூலகத்தின் குறை தீருமா?

கல் என்றால் படி என்றும் முனை என்றால் முயற்சி செய் என்றும் கட்டளையிடும் கல்முனை நகர வாசிகளின் அறிவு விருத்திற்கு ஓர் அனுகூலமாக கல்முனை பொது நூலகம் இயங்கி வந்தது.

ஆனால் இப்போது இப்பொது நூலகம் கல்முனைப் பிரேதச செயலகத்திற்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்பட்டு இடவசதியற்ற இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. சகல வசதிகளையும் உள்ளடக்கிய அமைதியான சூழ்நிலையில் அமைக்கப் பட்டிருந்த இப் பொது நூலக கட்டிடத்தில் இப்போது பொலிஸ் நிலையம் உள்ளது. 1990ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்ட பொது நூலகம் ஒரு தற்காலிக இடமாற்றமே என்று இங்குள்ளோர் எண்ணிக் கொண்டனர். ஆண்டுகள் பல கடந்தும் இந் நூலகம் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்படாதது ஏன் என இப்பகுதி மக்கள் வினாத் தொடுக்கின்றனர். நூலக இடமாற்றம் நுட்பமாய் கவனிக்கப்பட வேண்டியதாகும். அதிகாரிகளே காலம் தாழ்த்தாது கவனியுங்கள் இதனை!

எம்.சி.கலீல்

# திணறடிக்கும் தொலைக்காட்சிகள்!

இலங்கையில் தமிழ்த் தொலைக்காட்சி இரசிகர்களை, 'போட்டி போட்டுக் கொண்டு திணறடிக்கிறார்களோ?' என எண்ணத் தோன்றுகிறது. இல்லாவிடில், ஒரே நாளில் ஒரே நேரத்தில் இரு வேறு 'சேனல்'களில் வெவ்வேறு தமிழ்த் திரைப்படங்களை ஒலிபரப்பி, எதைப் பார்ப்பது என எம்மைத் திண்டாட வைத்திருப்பார்களா?

விசேட தினங்களில் கூட தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதைப்பற்றிக் கவலைப்படாதவர்கள் மாதம் ஒருமுறை ஒளிபரப்பாகும் தமிழ்த்திரைப்படத்திலும் இப்படி 'ஏனோ தானோ' வெனச் செயற்படுவது ஏன்? என்றோ ஒரே நாளில் இரு படங்களையும் ஒளி பரப்பி விட்டு 'எம் கடமை முடிந்தது' என்ற ரீதியில் ஒதுங்கிக் கொள்ளாமல் உண்மையான அக்கறையுடன் செயற்படுவார்களா? சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாகச் சிறிது செவிசாய்த்தால் நல்லது.

மு.ரோஹிணி, நாவல் நகர்

எழுது வினைஞர் தேவை

தலைநகரில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு எழுது வினைஞர் தேவை. தகைமைகள்:

★ தமிழில் நல்லறிவும் பிறமொழியாற்றலும்,
★ தமிழ், ஆங்கிலம் தட்டச்சில் தேர்ச்சி,
★ கணக்கியல் தொடர்பான அறிவு.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா. தினமுரசு
வாரமலர்
த.பெ.எண்: 1772
கொழும்பு.

# ஆக்கங்கள் கேட்டு அழைப்பு

அக்குறனையின் சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார, அரசியல் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு பருவகாலச் சஞ்சிகை ஒன்றை வெகுவிரைவில் வெளியிடுவதற்கு, நாம் ஏற்பாடு செய்து வருகின்றோம்.

குறிப்பாக கடந்த கால அக்குறனையின் வரலாற்றுப் படிப்பினைகளைக் கொண்டு நிகழ்கால–எதிர்கால அக்குறனையின் அரசியல் உட்பட அனைத்துத் துறைகளையும் நெறிப்படுத்துவதை, இச்சஞ்சிகை நோக்கமாகக் கொண்டிருக்கும். எமது சஞ்சிகை, அக்குறனை மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகவும் ஏகோபித்த குரலாகவும் அமைய வேண்டும் என விரும்புகின்றோம்.

சஞ்சிகைக்கான ஆக்கங்கள் அக்குறனையை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டாலும், சமகால தேசிய முஸ்லிம்கள் பற்றிய ஆக்கங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அனுப்வேண்டிய முகவரி;
ஆசிரியர்,
அக்குறனை வை.எம்.எம்.ஏ
புளுகஹதன்னை
அக்குறனை.

# விளம்பரப் பகுதி

## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவீரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,344831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052-2508, 3093, 3336.
FAX 0094523093 EXT 28

சவூதி அரேபியாவுக்கு
வீட்டுப் பணிப் பெண்கள்

நம்பிக்கையான ஒரு ஏஜண்ட்மூலமாக
நம்பிக்கையான ஒரு இடத்துக்கு

முஸ்லீம் அல்லாதோரிடமிருந்து
அரசாங்கக் கட்டணம் மட்டும்
அறவிடப்படும்.

முஸ்லீம்களுக்கான அரசாங்கக்
கட்டணம் எம்மால் செலுத்தப்படும்

வயது எல்லை – 30 - 40 வருடங்கள்

இரண்டுவருட ஒப்பந்தம், விமான
டிக்கற்றுகள்/ உணவு/ தங்குமிட/
வைத்தியவசதிகள் இலவசம்.

உடனடிப் பயணம்

நேர்முகப் பரீட்சைகள் தற்போது
நடைபெறுகின்றன
பாஸ்போர்ட் உடன் நேரில் வரவும்

டிரவல் கெயார்
இன்ரநெஷனல்
(பிரைவேட்) லிமிட்டெட்

71 - 72, முதலாவதுமாடி,
பீப்பில்ஸ் பார்க் கட்டிடம்
கொழும்பு - 11

அனுமதி இலக்கம்: AL/793/ADVT/01/95

F.A ADS

வெளி வருகின்றது....................
ஆண்டு 4/5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்
போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாப் பத்திரிகை

வெற்றிக்கனி
BRIGHTன் கல்வி வெளியீடு

புதிய பாடத்திட்ட மாதிரி வினாவிற்கேற்ப தயாரிக்கப் பட்டது.
புதிய பாடத்திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது.

விலை : 50/- V.P.P. உண்டு

பிரதி மாதம் தோறும் வெளிவரும் வெற்றிக்கனி
மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும்

இதனுடன்
மாதிரி வினாவிடை - 100.00
பொதுவிவேகம் செயல்நூல்- 60.00
பொது விவேகம் பாடநூல் - 75.00

V.P.P. யில் பெற விரும்புவோர் 20/= முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்

Bright Book Centre
S-27, First Floor, Colombo Central
Super Market Complex, P.O. Box -162,
Colombo - 11. T.P: 434770

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளை நம்பியிருக்கும் தென்னிலங்கை அரசியல்!

சென்றவார எக்ஸ்ரே ரிப்போட்டில் மெல்லத் தலைதூக்கும் இனவாதம் பற்றி குறிப்பிட்டிருந்தேன். காலியில் கடைகளைக் கொழுத்தி இனவாதம் தலைக் கறுப்பை மட்டுமல்ல, முகத்தையும் காட்டி விட்டது.

"நாரதருக்கு கரிநாக்கு" என்று வாசக நண்பர்கள் தொலைபேசியில் அன்போடு வசைந்தார்கள். நடப்பைவைத்து நடக்கப் போவதை சொல்வது தவிர வேறு யாதும் அறியோம். நம்மை வசையலாமா?

நிற்க, நாட்டுப் பற்று என்று கவர்ச்சியான கோசத்தோடு சுவரொட்டிகள் தயாரிப்பதில் ஒரு கும்பல் கிளம்பியிருக்கிறது.

இவர்கள் புலிகளைக் கண்டிப்பதாக கூறிக் கொண்டு எய்த்துவிடும் அம்புகள் குறிவைப்பது அரசையும், தமிழ் மக்களையும்.

கொழும்பில் இனவாத சாயம் பூசிய வார்த்தைகளோடு சுவரொட்டி ஒட்டியவர்களை பொலிசார் பிடித்து விசாரித்தார்கள். ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சொல்லியே தாம் ஒட்டியதாக அவர்கள் கூறியுள்ளனர்.

பொது ஜன முன்னணிக்குள்ளும் சற்றே இனவாத மணம் வீசும் பேச்சுக்கள் எழுந்தாலும் கூட அவர்கள் தமது ஆட்சிக்கே நெருக்கடி கொடுக்க விரும்ப மாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இரண்டு பாரிய இனப்படுகொலைக் கலவரங்களை நாடு கண்டது. 77ல் ஒரு முறை. மிக விரிவான பயங்கரமாக 83இல் இன்னொரு முறை நாடெங்கும் தமிழ்மக்கள் எரிந்தார்கள். தாக்கப்பட்டார்கள்.

பிரேமதாசா ஜனாதிபதியான பின்னர் ஒரு முறை கூட இனக்கலவரம் வெடிக்கவில்லை.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சி நினைத்தால் கலவரத்தை தூண்டியும் விட முடியும். எட்டிப் பார்க்க விடாமல் தடுத்துவைக்கவும் முடியும்.

அரசாங்கமும், முப்படைகளும் உறுதியோடும், உளப்பூர்வமாகவும் செயற்பட்டால் கலவரக் கும்பலை கட்டுப்படுத்த அதிக நேரமாகாது என்பதும் மற்றொரு உண்மை.

சாதாரண சிங்கள மக்கள் தமிழர்களைத் தாக்குவதில்லை. வெறியோடு வீதியில் இறங்குவதுமில்லை.

'எரியிற வீட்டில் பிடுங்கும்' ஒரு கும்பலும், சுயலாப அரசியல் நோக்கத்தோடு அக் கும்பலைத் தூண்டிவிடும் சில அரசியல்வாதிகளுமே கலவரங்களை உற்பத்தி செய்கிறார்கள்.

உற்பத்தியாகும் கலவரங்களை பாதுகாப்பு படையினர் நினைத்தால் அடுத்த நிமிடமே தடுத்தழிக்கவும் முடியும். விட்டுப் பிடிப்போமே என்று கொளுத்தி முடிக்கும் வரை கைகட்டி நின்று பார்த்துவிட்டு பின்னர் கூட்டத்தை விரட்டவும் முடியும்.

58 முதல் 83 வரை நடந்த இனக்கலவரங்களுக்கு ஆட்சியிலிருந்தவர்களின் ஆசீர்வாதம் அமோகமாகக் கிடைத்தது.

படையினர் கலவரக்காரர்களுக்கு வேலிகளாக நின்றார்களே தவிர பயிர்கள் நாசமாவதைப் பற்றிக் கவலைப் படவில்லை.

வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தால் கூடப் போதும் வாலாட்டும் ஓடிவிடும். அதைச் செய்யக்கூட ஆயத்தம் இல்லை என்று ஆயுதப்படையினர் நின்றதால்தான் ஓடப்பர்கள்கூட உதையப்பர்களாக அப்பாவிகள் மீது வீரம் காட்டினார்கள்.

இவையெல்லாம் கடந்த கால அனுபவங்கள். கடந்த வாரம் காலியில் நடந்த இனவாதச் சண்டித்தனம் யாரால் தூண்டப்பட்டது என்பது ஒரு புறமிருக்க, சட்டம், ஒழுங்குப் பிரிவினர் துரிதமாகச் செயற்பட்டார்களா என்பதைக் கண்டறிய வேண்டும்.

காலியில் சில காலிகள் வன்செயலைத் தூண்ட திட்டமிடுவதாக உயர் பொலிஸ் அதகாரி ஒருவருக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டதாம்.

வழக்கமான வதந்தி என்று நினைத்து அவர் அலட்சியமாக இருந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

யுத்தமும், பதட்டமும் நிலவும் சூழ்நிலையில் அந்தப் பகுதிப் பொலிசாருக்கு தமது பகுதிகளில் உள்ள நிலவரம் குறித்து புலனாய்வுத் தகவல்கள்கூட கிடைப்பதில்லையா?

இரவு ஆரம்பித்த வன்செயல் விடியும் வரை தொடரும் வரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று காலிப்பகுதியில் உள்ள தமிழர்கள் குறைசொல்கிறார்கள்.

மதகுரு சுடப்பட்ட உடனேயே பாராளுமன்றத்தில் அதை ஒரு பெரும் பிரச்சனையாக்க பிரதான எதிர்க்கட்சி முயன்றிருக்கிறது.

மதகுருவை ஆதரித்து நாடெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளோடு ஐக்கிய தேசியக் கட்சியின் சில பிரமுகர்களுக்கும் தொடர்புகள் உள்ளன.

இவைபற்றி முன்கூட்டியே அரசுக்கு தெரிந்திருக்கவில்லை என்றால், புலனாய்வு நிறுவனங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்ற கேள்வி எழுவது இயல்பு.

மரணமான மதகுரு மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாத்தறையும் காலியும் அருகருகே உள்ளன.

காலியில் தமிழர்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஆக, மொத்தத்தில் காலி வன்செயல் தடுக்கப்பட்டிருக்க முடியாத ஒன்றல்ல.

□□

கொள்கையைவைத்தல்ல, கொலைகளை வைத்தே தென்னிலங்கை அரசியலின் தட்ப, வெப்பநிலை தீர்மானிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது நடந்த அரசியல் கொலைகள் பொது ஜன முன்னணிக்கு பிரசார வரப்பிரசாதங்களாக இருந்தன.

கொலைகளை அரசியலாக்குவதா என்று ஐக்கிய தேசியக் கட்சி அப்போது அழாக் குறையாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் முறை.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைகளை உருட்டியதோடு அக்கட்சியின் அதிகாரம் பறிபோகவும் முக்கிய காரணம் புலிகள்தான்.

இப்போது மறுபடியும் ஆட்சியைப் பிடிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி புலிகளைத் தான் நம்பியிருக்கிறது.

புலிகளோடு சமரசம் செய்து சமாதானத்தை கொண்டுவருவதே பொதுஜன முன்னணியின் பிரதான தேர்தல் கோசமாக இருந்தது. அதனால் தற்போது புலிகள் அடிக்கும் ஒவ்வொரு அடியையும் பொது ஜன முன்னணியின் தோல்விக்கு கிடைக்கும் அடிகளாக மாற்றுவதற்கு ஐ.தே.கட்சி நினைக்கிறது.

திம்புலாகல தேரர் கொலைக்கு யார் காரணம் என்று கண்டறிய முன்னரே, அதை கட்சி அரசியலாக்க வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியது ஐ.தே.கட்சி.

தேரரின் மரணச் சடங்கு விடயங்களை முன்னின்று கவனித்ததும் ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர்கள்தான்

தேரரின் உடல் வைக்கப்பட்டு இறுதிக் கிரியை நடந்த சிதையைத் தனது சொந்தச் செலவில் பிரமாண்டமாகச் செய்து கொடுத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

பிரேமதாசா கொல்லப்பட்டபோது கூட கொலையாளிகள் யாரென்று தெரியவில்லை




என ஒரு மாதகாலம் வரை கூறிக்கொண்டிருந்தது ஐ.தே.கட்சி.

இப்போது தேரர் கொல்லப்பட்டது புலிகளால் என்று அக் கட்சிப் பிரமுகர்கள் உடனடியாகவே உறுதிப்படுத்திச் சொல்வது தான் வேடிக்கை.

ஜனாதிபதி ஒரு பெண் என்பதால், பிரேமதாசாமீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியதுபோல, ஜனாதிபதிமீது நேரடியாகப் பழிபோடுவதை மக்கள் நம்பமாட்டார்கள்.

அதனால், புலிகள்தான் கொன்றார்கள் ஆனால் ஏன் கொன்றார்கள்? பாதுகாப்பு சரியாக வழங்கப்படாமல் இருந்தமையால் தான் கொன்றார்கள் என்று சுற்றிவளைத்து சொன்னாலும், குறி எங்கே என்பது தெளிவு.

□□

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்து இரண்டு மாதங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் முதலாவது மாதத்தில் புலிகளின் காட்டில்தான் மழை.

யுத்தம் ஆரம்பித்தால் நாமும் தயார்தான் என்று இராணுவத் தளபதி சொல்லிக் கொண்டிருந்தபோதும், இரண்டாம் கட்டப் போரில் இருந்து மூன்றாம் கட்டப்போர் எத்தகைய மாற்றத்தைக் கொண்டிருக்கும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.

புலிகள் சமாதானப் பிரியர்களாகி விட்டனர் என்று படையினர் நினைத்துக் கொண்டிருந்தார்கள், அதனால் ஆயத்தமாக இருக்கவில்லை என்ற வாதம் வலுவில்லாதது.

சமாதானப் பேச்சின்போதும் படையினரை தயார்நிலையில் வைத்திருந்ததாக ஜனாதிபதியே ஒப்புக்கொண்டுள்ளார்.

மோதல் தவிர்ப்புக் காலத்தில் பிரபாகரன் கிழக்கில் புள்ளிவைத்து வியூகங்களை திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

அரச படைத் தரப்போ போர் தொடங்கினால் இம்முறை வடக்கை புலிகளிடமிருந்து அமுக்கிவிடவேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தது.

படைத்தரப்புக்கு ஒரு பலவீனம் இருக்கிறது. போடும் திட்டங்கள் யாவும் எப்படியோ பத்திரிகளைகள் வாயிலாக வெளியே கசிந்துவிடுகின்றன.

வெளிநாடுகளுக்கு ஆயுதம் வாங்கப் போனதிலிருந்து, எங்கே தாக்க ஆயத்தமாகிறார்கள் என்பதுவரை தாக்குதலுக்கு முன்னரே வெளிச்சமாகிவிடுகின்றன.

வடக்கே பாய நினைப்பதை தெளிவாக அறிந்துகொண்டு யுத்த சதுரங்கத்தில் முதல் காயை கிழக்கில் நகர்த்தினார்கள் புலிகள்.

## யுத்த சதுரங்கம் முற்றுகை எங்கே?

**—நாரதர்**

கிழக்கைப் பொறுத்தவரை அதன்மீதான தமது பிடி குறித்து படையினருக்கு அதீத நம்பிக்கை இருந்தது.

அந்த நம்பிக்கைதான் புலிகள் கிழக்கில் பரவலாக தமது கெரில்லா அணிகளை நகர்த்தியபோது படையினர் திகைத்துப் போனதற்கும் காரணம்.

புலிகளைப் பொறுத்தவரை கிழக்கில் சங்கிலித் தொடராக உள்ள இராணுவ முகாம்களது எண்ணிக்கையைக் குறைப்பது தான் முதல் கட்ட இலக்கு என்பது தெளிவு.

அவ்வாறு எண்ணிக்கையைக் குறைப்பது மூலமாக கிழக்கில் புலிகள் சுதந்திரமாக நடமாட வாய்ப்பு ஏற்படும்.

வடக்கைப் போல உடனடியாக கிழக்கை தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாது என்பது புலிகளுக்குத் தெரியும்.

எனவே, முதலில் இராணுவப் பாதுகாப்பு சங்கிலியின் கண்ணிகளாக உள்ள முகாம்களை தாக்குவார்கள். இதனால் சிறு முகாம்களை மூடவேண்டிய முடிவுக்கு இராணுவம் செல்ல வேண்டியிருக்கும்.

திடீர் தேடுதல் நடிவடிக்கைகளை நிறுத்தச் செய்யும் வகையில் ரோந்து அணிகள் மீதும் கெரில்லாத் தாக்குதல் நடத்தப்படலாம்.

அடுத்தாக வடக்கு-கிழக்கை பிரிக்கும் வகையில் அமைந்த குடியேற்றத் திட்டங்கள் மீதும் புலிகளது கவனம் இம்முறை திரும்பியுள்ளது.

வடக்கு-கிழக்கை பிரிப்பதற்கான புத்திசாலித்தனமான திட்டம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில்தான் சிறப்பாக நிறைவேற்றப் பட்டது.

கிழக்கில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சொந்தமான காணிகள் சுருட்டப் பட்டமை ஒருபுறமிருக்க, வடக்கும்-கிழக்கும் ஒன்று சேரும் கேந்திரமான பிரதேசத்திலும் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாவும் திட்டமிட்டு, வடக்கு-கிழக்கை இணைக்கும் மைய நிலமான மணலாற்றில் (வெலிஓயா) குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

இராணுவ முகாம்களை எல்லைப் பகுதிகளில் அமைக்கும் போது யுத்த நடவடிக்கைக்கு என்று காரணம் கூறப்பட்ட போதும், அந்த இராணுவ முகாம்களை சுற்றிக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

மூன்றே மூன்று ஆண்டுகளில் வடக்கு-கிழக்கை இணைக்கும் மையநிலம் தலை கீழாக மாற்றப்பட்டது.

மைய நிலத்தில் இராணுவ ரீதியில் அரசு பலமாக இருப்பது புலிகள் வடக்கிலிருந்து கிழக்குக்கும், கிழக்கில் இருந்து வடக்குக்கும் நகர்வதையும் கட்டுப்படுத்த படைகளுக்கு வசதியானது.

இதனை உடைக்கவே 25.07.1993ல் மணலாற்றில் உள்ள மண்கிண்டி மலை (ஜானகபுர) இராணுவ முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

'இதயபூமி 1' என்று அந்த நடவடிக்கைக்கு புலிகள் பெயரிட்டிருந்தனர்.

கிழக்கிலிருந்து மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்து சூடுபிடித்திருப்பதால் வடக்கு-கிழக்கை துண்டிக்கும் குடியேற்றத் திட்டங்கள் விடயத்திலும் புலிகள் ஒரு கண்வைக்கலாம் என்று கருத இடமுண்டு.

இதேவேளை வெளிநாட்டு உதவிகள், ஆலோசனைகள் இலங்கை அரசுக்கு வந்து குவிந்தவண்ணம் உள்ளன.

ஆனால், இவ்வாறு உதவிகள் வருவது இதுதான் முதற்தடவையல்ல.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆட்சித் தலைவராக இருந்தபோதும் இலங்கை அரசுக்கு அந்நிய உதவிகள் அமோகமாக வந்து சேர்ந்தன.

இந்திய உதவியும் கிடைத்திருப்பதுதான் அரசுக்கு இம்முறை மேலதிக லாபம்.

யுத்த சதுரங்கத்தில் அரசு தன்னை பலப்படுத்திக்கொள்ள அந்நிய ஆயுத உதவிகளை நாடுவது தவிர்க்க முடியாத அவசியமாக இருக்கலாம்.

ஆனால் தனது எதிரியை முற்றுகையிட அந்நிய மூளைகளை நம்புமேயானால் அவற்றால் பெரிய பலன் ஒன்றும் கிடைத்துவிடப் போவதில்லை.

பகிரங்க சமவெளியில் தமது ஆள் அம்பு சேனையோடு புலிகள் நின்றால்தான் வெளியாள் ஒருவர் தொலைநோக்கியால் படைபலத்தைக் கணக்கிட்டு யோசனை சொல்ல ஒரளவு வாய்ப்பாக இருக்கும்.

'அங்கே அடி இங்கே அடி' என்று சொல்லிக் கொண்டிருக்கலாம்.

எங்கே அடிப்பார்கள் என்று இங்கேயுள்ளவர்களுக்கே தெரியவில்லை. விமானத்தை எந்த அயுதத்தால் வீழ்த்தினார்கள் என்று கூடத்தெரியாமல் படைத் தரப்பு தலையைச்சொறிந்து கொண்டிருக் கிறது.

இந்தச் சூழ்நிலையில் மூளைகளை இறக்குமதி செய்வதால் படைத்தரப்புக்கு ஏறுமுகம் ஆரம்பிக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை

யுத்த சதுரங்கத்தில் எதிரியின் பலம் பலவீனம் அறிந்து நகர்வுகளைச் செய்வது முக்கியமானது.

புலிகளது பலம், பலவீனம் என்னவென்று இங்குள்ள படைத் தலைமைக்கே தெரியவில்லை.

ஆனால் தமது எதிரிகளது பலம் பலவீனம் புலிகளுக்கு தெரிந்திருக்கிறது.

எனவே வெளிநாட்டு ஆலோசனைகள் போரின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கப் போவதில்லை.

வெற்றி தோல்வியை தீர்மானிக்கப் போவது படைகளும், புலிகளும் என்னும் இருதரப்புக்களின் வீரம், விவேகம், மக்கள் ஆதரவு என்பவைதான்.

புலிகள் தாக்கிவிட்டுச் செல்லும்போது பதிலடியாக மக்களைத் தாக்கினால் யுத்த சதுரங்கத்தில் லாபம் புலிகளுக்கே. தமிழ் மக்கள் ஆதரவைப் படைகள் பெறுவது முயற்கொம்பாகிவிடும்.

ஆனால், பெரும்பான்மை இனத்தை கொண்டு நிரப்பப்பட்ட படைப்பிரிவுகளை முற்றுமுழுதாக அத்துமீறல் இன்றி கட்டுப்படுத்துவது அரசுக்கு சுலபமல்ல.

புலிகள் தமது முற்றுகையை கிழக்கில் இருந்து தற்போது தளர்த்தப்போவதில்லை. கிழக்கில் தமது நிலைகளைப் பாதுகாக்கப் படைகள் போராட வேண்டியுள்ளபோது, வடக்கில் பிரதான முகாம்களில் ஒன்று புலிகளால் முற்றுகையிடப் படலாம்.

மேலதிக உதவி பெற்றுக்கொண்டு எதாவது ஒது பகுதியில் கால் ஊன்றி நின்று படைகள் போராடுவதை தடுப்பதே புலிகளது தந்திரமாக இருக்கும். அதனை அடிப்படையாகக் கொண்டே புலிகளது அடுத்த முற்றுகை அமையும்.

படைத்தரப்பு முற்றுகை நிலையைத் தனது கையில் எடுக்க வேண்டுமானால் தற்காப்பு நிலையில் இருந்து மீளவேண்டும்.

அதற்குத்தான் முயற்சி நடப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்போதைய நிலையில் யுத்த சதுரங்கத்தில் புலிகளது கைகளே மேலோங்கியுள்ளன.

□□

## அதிரடி அய்யாத்துரை



சந்திப்புக்களின்போது காத்திருக்கும் நேரத்தையும் சேர்த்து இத்தனை மணி நேரச் சந்திப்பு எண்டு பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கிறதும் ஒரு ஸ்டைலாகப் போச்சு! கூட்டான கட்சியினர் இந்த விஷயங்களில் பழம் தின்று கொட்டை போட்ட ஆட்களல்லோ.

ஐம்பத்துக்கு ஐம்பது புகழ் பொன்னாரின் புத்திரர் மீண்டும் அரங்கில் தோன்றி அறிக்கை விடுகிறார். இடையில் சில மாதம் என்ன செய்தவர் எண்டு யோசிப்பியள், சேகரித்து வைத்திருக்கும் விதம் விதமான கார்களோடு விளையாடவும் ஒரு ஓய்வு தேவைதானே. அதிகாரத் தரப்பு தன்னையும்பேச அழைக்கவில்லை எண்டும் புத்திர குமாரருக்கு கெட்ட கோபமாம். கூப்பிட்டிருக்கலாம் தானே. இனித் துள்ளிக் கொண்டெல்லோ இருக்கப் போறார்.

கொழும்பில் ஒரு வைப்பகத்தில் வித்தியாசமான பிரார்த்தனை நடத்தினவையாம். ரெண்டு எழுத்து தலைவருக்கு கெட்ட சகுனம் வரும் பிரார்தனை செய்தால் எண்டு யாரோ சொன்னதை நம்பி மெத்தப் படித்த ஆட்களும் முன்னின்றுகலந்தவையாம். மந்திரத்தால் மாங்காய் கூட விழாது, அப்படியிருக்க.....

கடை எரிப்பு விடயத்திலை தடுத்து விரட்ட வேண்டியவர்களே வேகம் காட்டேல்லை எண்ட மாதிரிக் கதை உலாவுது. மேலிடத்தின் காதுக்கு அந்த விசயம் எட்டியதோ தெரியேல்லை. பச்சை அணியில் ஒரு பிரிவும் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி விடுறமாதிரியும் சாதுவாக ஒரு சந்தேகம் பரவியிருக்குது. முன்னாள் உறுமயக் காரர்கள் சிலரும் தற்போது பச்சை அணியில் சங்கமிச்சு இருக்கிறது சந்தேகத்தை அதிகமாக்குதாம்.

இலண்டன் மாநகரிலை ரெண்டு எழுத்தாருக்கு சார்பான ஆப்பாட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்டது ஆகமொத்தம் 5 பேர் எண்டு தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகை படத்தோடு செய்தி போட்டிருந்தது. அந்தப் படத்தில் ஒரு பெண்மணியும் காணப்படுகிறார். அவர் காலத்துக்குக் காலம் கட்சிமாறும் பட்சி. அவர்போன இடம் தேறாது எண்டதுக்கு அந்தப் படமே சாட்சி.

"வெள்ளம் வரும் முன்னர் அணை கட்ட வேண்டும்" எண்ட முதுமொழியை பல அர்த்தங்களோடு பார்க்கலாம். ஆனால் நம் நாட்டிலை உண்மையான வெள்ள விடயத்திலை கூட மழை பெய்தபிறகுதான் கால்வாய் கழுவிச் சுத்தம் செய்யினம். வெள்ளத்தை வெளியேற்றப் பாதை தேடுகினம். தலைநகரின் முக்கிய பகுதிகளில் கூட வெள்ளம் விளையாடிப் போட்டுது. உப்பிடியே போனால், இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட தீவு. இலங்கை தலைநகருக்குள்ளும் வெள்ளம் திரளும் நாடு எண்டு கழகக் கல்வி புத்தகத்திலை சொல்ல வேண்டி வந்திடுமுங்கோ.

ரெண்டு எழுத்து தலைவரைப் பிடிச்சுத் தாங்கோ எண்டு அயல்நாடு கேட்கிறது மறைந்த தலைவரின் விசுவாசிகளுக்கு நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டுவது மாதிரியாம். இதை நான் சொல்லேல்லை அரசியல் தெரிஞ்ச ஆட்கள் சொல்லுகினம்.

யாழ்பாணத்திலே இருந்து சமாதானம் பற்றிப் பேசின ஆட்களை ரெண்டு எழுத்தார் கிழிச்சுக் கொண்டிருக்கினம். இதை அறிஞ்சா, சமாதானம் பேசிய கொழும்பில் உள்ள தமிழ் பிரபலர்களுக்கு இனி வாய் திறக்க மனம் வருமோ?

மலையகத் தனித்துவ தலைவருக்கும், கூட்டான தமிழ் கட்சிக்கும் அப்பிடி என்ன பகை? அடிக்கடி உரசிக் கொள்ளுகினம்! விசாரிச்ச போது ஒரு அரசியல் குறும்பர் சொன்னதை நீங்களும் கேளுங்கோ, "கூட்டான கட்சி துணிந்து கண்டிக்கக் கூடிய ஒருவர் அவர்தானே."

அப்துல் ரகுமானின் ஆக்கமொன்று இவ்வார முரசில் வருவதாக அறிந்தவுடன், என் நினைவுக்கு வந்த அவர் கவிதை வரிகள் கீழே:

**என்னைக் கண்டதும்
கவிழும் உன் இமைகள்
கொசுவலையா?
மீன் வலையா?**


பெணகளின் பார்வைக்கு இனிக் கவனமாக அர்த்தம் காணவேணுமுங்கோ.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கைகலப்போடு நடந்த சிறை உடைப்பு

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்



நிர்மலா




### சிறையில் நிர்மலா

1983 செப்டம்பர் 23ம் திகதி மட்டக்களப்பு சிறையை உடைத்து போராளிகள் தப்பிச் சென்றனர். அது பற்றி ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

அந்தச் சிறை உடைப்பின்போது வாமதேவன் செய்த தவறால் நிர்மலா தப்பிச் செல்ல முடியவில்லை என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

நிர்மலாவை சிறை மீட்பதற்கு புலிகள் அமைப்பினர் திட்டமிட்டனர்.

அதனை விபரிக்கு முன்னர் நிர்மலா பற்றி சில விபரங்கள்:

யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றியவர் நிர்மலா. பெண்கள் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

### வதந்திகள்

குருநகர் இராணுவ முகாமில் வைத்து இருவரும் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டனர்.

பின்னர் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்ட நிர்மலா தொடர்பாக பல வதந்திகள் அடிபட்டன.

பலாத்காரப்படுத்தப்பட்டதால் நிர்மலா கர்ப்பமுற்றுள்ளார் என்றெல்லாம் பேசப் பட்டது. பின்னர் அவை யாவும் பொய்யான செய்திகள் என்று தெரியவந்தது.

வெலிக்கடை சிறைப் படுகொலையை அடுத்து மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப் பட்டார் நிர்மலா. 1983 செப்டம்பர் 23 சிறை உடைப்பில் நித்தியானந்தனும் தப்பிச் சென்று புலிகளோடு முழு நேர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார்.

சிறையில் இருந்த நிர்மலா மீது 1984 ஜூன் மாதம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற இருந்தது.

வழக்குக்காக நிர்மலாவை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னர் சிறைமீட்க புலிகள் திட்டமிட்டனர்.

### சிறைக்குள் புலிகள்

1984 ஜூன் மாதம் 10ம் திகதி இரவு 7.15 மணி.

புலிகள் இயக்கத்தின் 15 உறுப்பினர்கள் சிறைக்காவலர் போன்று சீருடை அணிந்து சிறை வாயிலுக்குச் சென்றனர்.

"கொழும்பிலிருந்து சில கைதிகளை

நிர்மலாவும், நித்தியானந்தனும் குடும்ப வாழ்க்கையிலும் பிரிந்து கொண்டனர்.

புலிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்து பின்னர் வெளியேறிவர் ராகவன். நிர்மலா ராகவனை தனது வாழ்க்கைத் துணைவராக்கிக் கொண்டார். தற்போது வெளிநாடொன்றில் வசித்துவருகிறார்.

நித்தியானந்தனும் தற்போது வெளி நாட்டில் இருக்கிறார்.

### கடல் விமானத்திற்கு தீ

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது பருத்தியடைப்பு கிராமம்.

கடற்படை கமாண்டராக இருந்த அசோக டி. சில்வா கடல் விமானம் ஒன்றில் யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் வந்த கடல் விமானம் பருத்தியடைப் பில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடல் விமானம் 1984 ஜூன் 15ம் திகதி புலிகளால் தீவைக்கப்பட்டது.

விமானத்தின் பெற்றோல் தாங்கியில் தீ பற்றிக்கொண்டதால் பலத்த சத்தத்தோடு கடல் விமானம் சிதறிப்போனது.

### வழுக்கை விழுந்தபோதும்....

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த நிலையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜே.ஆர். அரசுடன் வட்டமேசை மாநாடு நடத்திக் கொண்டிருந்தது.

சகல போராளி அமைப்புக்களும் வட்ட மேசை மாநாட்டைக் கண்டித்துக் கொண்டிருந்தன.

வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு தமிழீழக் கோரிக்கையை கிண்டலடித்த இன்னொரு அரசியல்வாதி குமார் பொன்னம்பலம்.

குமார் பொன்னம்பலத்தை ஒரு பொருட்டாக எடுக்கத் தேவையில்லை என்று நினைத்த போராளி அமைப்புக்கள் கூட்டணியை குறிவைத்தே கண்டனங்களைத் தொடுத்தன.

1984 ஜூலையில் வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையில் கூட்டணியைக் கண்டித்து ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டது. அதிலிருந்து ஒரு பகுதி இது:

"நாமாக எந்த ஒரு தீர்வையும் திணிக்கவில்லை. அமிர்தலிங்கத்துடனும், ஜயவர்த்தனாவுடனும் ஜி.பார்த்தசாரதி பேச்சு நடத்தினார். இருவர் கருத்தையும் ஒட்டி எழுந்ததே சமரசத் திட்டம். இதில் இந்தியாவின் தலையீடு கிடையாது."

என்று சொன்னது இந்தியஅரசு.

ஜி.பார்த்தசாரதிதான் அப்போது இந்தியாவின் வெளியுறவுச் செயலாளராக இருந்தவர்.

வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தபின்னர் தமிழ்நாட்டில் கரூர் என்னுமிடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமிர்தலிங்கம் கூறியது இது;

**"சுதந்திரத் தமிழீழம் அடையும்வரை நாம் போராடுவோம்!"**

இப்பேச்சைப் பத்திரிகைகளில் பார்த்தார் கோவை மகேசன். உடனே தனது 'வீரவேங்கை' பத்திரிகையில் கோவை மகேசன் எழுதிய பதில் இது;

**"ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு பேச்சுநடத்தும் அமிர்-சிவசிதம்பரம் கம்பனியார் புதிய பல்டி அடித்திருக்கிறார்கள்.**

**அகிம்சைப் போராட்டம் நடத்தப் போவதாகக் கூறுகிறார் அமிர்தலிங்கம். அது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.**

**ஏதாவது கோவிலிலே உண்ணாவிரதம் இருப்பார்கள். மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாட்டுப் பாடுவார். மாலை பழரசத்துடன் போராட்டம் முடிவடையும்.**

**இப்படிப்பட்ட போராட்டத்தை கடந்த 30 ஆண்டுகளில் 30.000 தடவை நடத்தி யிருப்பார்கள். இதனால் சிங்கள அரசுக்கு என்ன கஷ்டம்?"**

இதை எழுதிய கோவை மகேசனும் ஒரு காலத்தில் கூட்டணியின் உண்ணாவிரதப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்தான்.

### கடற்படையோடு மோதல்

1984 ஆகஸ்ட் 4ம் திகதி சனிக்கிழமை. வல்வெட்டித்துறையில் உள்ள பொலிகண்டி என்னும் கிராமத்தில் கடற்கரையோரம் புலிகளது மோட்டார் படகு நிற்கிறது.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டது ஜே.ஆர். அரசு. கடற்படைக் கப்பல்கள் வல்வெட்டித்துறை கடற்கரையில் வந்து முற்றுகையிட்டன. கடற்படை படகுகளிலிருந்து கிராமங்களை நோக்கி குண்டுகள் ஏவப்பட்டன.

இதனால் 5,000 பேர்வரையான ஊர்மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

வயோதிபர், பெண்கள் உட்பட பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மீனவர் குடியிருப்புக்கள், வள்ளங்கள் என்பன நாசமாக்கப்பட்டன.

படையினரின் பதிலடி நடவடிக்கை அவ்வாறு தொடர்ந்துகொண்டிருந்தபோது புலிகள் அதிரடி நடவடிக்கை ஒன்றுக்குத் தயாரானார்கள்.

### ரோந்து அணிக்குக் குறி

வல்வெட்டித் துறை அருகே உள்ளது நெடியகாடு.

ஆகஸ்ட் 5ம் திகதி நெடியகாடு பகுதியில் கமாண்டோ படையினர் ரோந்து சென்றுகொண்டிருந்தனர்.



நெடியகாடு-தாக்குதல் நடந்த இடம்

# ஆகஸ்ட் '84ல் நடந்த அகோரம்

## ★ அற்புதன் ★
எழுதுவது

நிர்மலாவின் துணைவராக இருந்த நித்தியானந்தனும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

ஆரம்பத்தில் ஈழமாணவர் பொதுமன்றத்துடன் நிர்மலாவும், நித்தியானந்தனும் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

புத்திஜீவிகள் இயக்க ஆதரவாளர்களாக இருக்க முடியும். இயக்க உறுப்பினர்களாக மாறினால் கட்டுப்பாட்டு விதிகளுக்கு ஏற்ப அவர்களால் நடந்து கொள்ள முடியாது.

புத்திஜீவிகள் தனிநபர் பிரபலம், தனிநபர் சுதந்திரம் பற்றிய மிதமிஞ்சிய எதிர்பார்ப்புக்களைக் கோரும்போது இயக்க கட்டுக்கோப்பு சிதைவடையும் என்பன போன்ற கருத்துக்களை ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S) கொண்டிருந்தது.

தமக்கு எல்லாம் தெரியும்; தாம் மேலானவர்கள் என்னும் புத்திஜீவிகளது குணாம்சம் ஒரு கட்டத்தில் இயக்க தலைமைத்துவத்திற்கு எதிராகவும் திரும்பலாம்.

சோவியத் புரட்சியில் கூட லெனின், புத்திஜீவிகள் விடயத்தில் பலத்த அவதானம் தேவை என்பதை வலியுறுத்தியே வந்தார்.

இவைதான் ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S) கொண்டிருந்த நிலைப்பாடு.

இவ்வாறான நிலையில் நிர்மலா போன்றவர்களை ஈழமாணவர் பொதுமன்றம் உள்வாங்கவில்லை. எனினும் அவர்களது முற்போக்கான தன்மைகளையும் அங்கீகரித்தது.

புலிகள் அமைப்போடும் நிர்மலாவும் நித்தியானந்தனும் தொடர்புகளை வைத்திருந்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை 27.10.82 இல் புலிகள் தாக்கியபோது சீலன் உட்பட இரு புலிகள் காயமடைந்தனர்.

காயமடைந்த போராளிகளுக்கு நிர்மலா வீட்டில் வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டது.

இத் தகவல் இராணுவத்தினருக்கு எப்படியோ எட்டிவிட்டது.

1982 நவம்பர் 20ம் திகதி நித்தியானந்தனும் நிர்மலாவும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அனுமதிக்க அழைத்து வந்திருக்கிறோம். கதவைத் திறவுங்கள்." என்றனர்,

முதலாவது பிரதான கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்தவர்களைப் பார்த்த சிறைக்காவலர்கள் மூவருக்கு சந்தேகம் வந்துவிட்டது.

அவர்கள் மூவரும் மீண்டும் கதவை மூட முயன்றதுடன், தாக்குதல் நடத்தவும் தயாரானார்கள்.

உள்ளே துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் வெளியே சத்தம் கேட்கும்.

காவல் பணியில் உள்ள அதிரடிப்படை இராணுவத்தினர் வந்துவிடுவார்கள்.

அதனால் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைத் தவிர்த்தனர். சிறைக்காவலர்கள் சிலருடன் கைகலப்பில் ஈடுபட்டு அவர்களை மடக்கினர்.

சிறையின் இரண்டாவது இரும்புக் கதவையும் திறந்தால்தான் நிர்மலா சிறைவைக்கப்பட்டிருந்த பெண்கள் பகுதிக்குச் செல்ல முடியும்.

அந்த இரும்புக் கதவின் சாவியை வைத்திருந்த சிறையதிகாரி ஓடிப்போய் ஒளிந்து கொண்டார்.

என்ன செய்யலாம்? வேறு வழியில்லை. இரும்புக் கதவை உடைத்துத் திறந்தனர்.

நிர்மலா சிறைவைக்கப்பட்டிருந்த கூண்டையும் உடைத்தே திறந்தனர்.

நிர்மலா சிறை மீட்கப்பட்டார். இரண்டாவது தடவையும் சிறை உடைக்கப் பட்டதால் அரசுக்கு பலத்த அதிர்ச்சி!

சிறைமீட்கப்பட்ட நிர்மலா தமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்டார். புலிகளின் முழுநேர உறுப்பினர் ஆனார்.

அதன் பின்னர் சில காலம் புலிகள் இயக்கத்தில் செயற்பட்ட நிர்மலாவும், நித்தியானந்தனும் இயக்கத்திலிருந்து விலத்தப்பட்டனர்.

இயக்கத்திலிருந்து வெளியேறிய பின்னர்

"வட்ட மேசை மாநாட்டில் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு எவ்வித உருப்படியான தீர்வும் ஏற்படப்போவதில்லை.

27 வருட வரலாற்று அனுபவத்தில் நம்பிக்கெட்டு வழுக்கை விழுந்தும் இன்னும் இவர்களுக்கு நம்பிக்கை தளரவில்லை.

புரட்சிகரப் புதிய பரம்பரை ஆயுதபாணிகளாக அரசியல் மேடையில் தோற்றம் கொள்ளத் தொடங்கியுள்ளது.

இனி நாம் பார்க்கவிருப்பது பழைய பரம்பரையின் புளித்துப்போன கதையை அல்ல. புதிய வரலாறு படைக்கும் புதிய தலைமுறையின் புரட்சிகரப் போராட்டத்தையே!

ஏமாந்த வரலாற்றின் கதாநாயகர்கள்தான் இன்னும் அரசியல் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் விடுதலைப் போராளிகளே இன்று ஈழத் தமிழரைப் பிரதிபலிக்கும் அரசியல் சக்தியாக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

எனவே- எதிர்கால தமிழ் அரசியல் வரலாற்றின் கதாநாயகர்கள் அவர்களே, கூட்டணித் தலைமை அல்ல!"

என்று அடித்துக் கூறியது புலிகளின் ஏடு.

### அமிர் முழக்கம்

வட்ட மேசை மாநாடு தோல்வியடைந்தால் அகிம்சைப் போராட்டம் நடத்தப் போவதாகக் கூறியிருந்தார் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவிருந்த அமிர்தலிங்கம்.

வட்டமேசை மாநாட்டை காலவரையரையின்றி ஒத்திப் போட்டார் ஜே.ஆர்.

இந்திராகாந்தி சொன்னதால்தான் பேசப்போனோம் என்று சொன்னார் அமிர்தலிங்கம்.

ஆனால் இந்திய அரசு சொன்ன கருத்து வேறு விதமாக இருந்தது.



பருத்தியடைப்பில் புலிகளால் தீவைக்கப்பட்ட கடல்விமானம் இதுதான்.

கடல் கண்காணிப்பு ரோந்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்படையினர் புலிகளின் படகை கண்டுவிட்டனர்.

புலிகளது மோட்டார் படகு திடீரென்று கடற்படையினரின் வியூகத்திற்குள் சிக்கிக்கொள்கிறது.

புலிகளது படகில் இருந்தது நான்கு பேர். கடற்படையினர் 18 பேர்.

கடற்படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் ஆரம்பிக்கிறது.

மோதலின் முடிவில் கடற்படையினர் 6 பேர் மாண்டனர். மூன்று பேர் படுகாயமடைந்தனர். நவீன ரோந்துப் படகையும் கைவிட்டு கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

இலங்கை கடற்படையினருக்கு எதிரான முதலாவது பாரிய தாக்குதல் அதுதான்.

### பதிலடி படுகொலைகள்

இத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து மூன்று கவச வண்டிகள், ஒரு ட்ரக், ஒரு ஜீப் சகிதம் ரோந்து அணி சென்றுகொண்டிருந்தது.

பிரதான வீதியில் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துவிட்டு புலிகள் காத்திருந்தனர்.

நிலக்கண்ணிவெடி புதைக்கப்பட்ட இடத்தைக் கடக்க முற்பட்ட ஜீப் வண்டி சிதறியது.

ஜீப்பில் இருந்த ஒன்பது கமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். உதவிப் பொலிஸ் அதிபர் ஜயரட்ண என்பவரும் மாண்டுபோனார்.

இதனையடுத்து படையினரின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்தன.

அதே சமயம் முல்லைதீவில் உள்ள ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கு புலிகளின் ஒரு பிரிவு நகர்ந்தது.

(தொடர்ந்து வரும்...)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது—இராஜதந்திரி

# சூடு கண்ட இந்தியா வடக்கு-கிழக்கில் மீண்டும் காலூன்ற நினைக்குமா?



இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்கு நிலவரம் குறித்த விடயத்தில் இந்தியா மீண்டும் தலையிடுமா? என்பதே பரவலாக அனைத்து மட்டங்களிலும் பேசப்படுவதாக இருக்கின்றது.

இந்தியா இலங்கை இனப்பிரச்னை குறித்த விடயத்தில் அதீத ஆர்வம்காட்டிய ஒரு நாடு. 1983ம் ஆண்டிலிருந்து இந்தியா இலங்கை தமிழர் விவகாரத்தில் தலையிட்டிருந்தது.

1983ம் ஆண்டில் ஆரம்பித்த இந்தியத் தலையீடு 1987ம் ஆண்டில் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கி விட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தைக் கொண்டுவந்ததன் மூலம் இலங்கையை தன்னிடம் முழு அளவில் சரணடையச் செய்வதே இந்தியாவின் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது.

இலங்கையில் பிரச்னைகளுக்குள்ளாகி தென்னிந்தியாவில் புகலிடம் தேடிய அப்பாவித் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, மிதவாத, தீவிரவாத தமிழ் அரசியலாளர்களுக்கும் இந்தியா தயவு, தாட்சண்யம் காட்டி ஆதரவளித்திருந்தது.

தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களைக் கையாளுவதில் முதல் முதலில் இந்தியாவே பயிற்சியளித்திருந்தது. அத்துடன் தமிழ் தீவிரவாத இயக்கங்கள் தமது தளங்களைத் தமிழ்நாட்டில் அமைத்துக்கொள்ளவும், தத்தமது நடவடிக்கைகளுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடவும் இந்தியா அனுமதித்திருந்தது.

இந்தியா வழங்கிய பக்கபலம், உதவி ஒத்தாசை ஆகியனவற்றைப் பின்னணியாகக் கொண்டே தமிழ் தீவிரவாத இயக்கங்கள் இலங்கையில் ஆயுதப்போராட்டதில் குதிக்கலாயின.

ஆயுதப்போராட்டத்தின் வாசனையை தமிழ் தீவிரவாத இயக்கங்களுக்கு வழங்கிய இந்தியா, இருவிதமான நோக்கங்களை தன்னகத்தே கொண்டிருந்ததை காலப்போக்கில் அறியக்கூடியதாக இருந்தது.

இந்தியா இலங்கைத் தமிழர்கள் மீது காட்டிய பரிவு, வெளியுலகிற்கு மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்பட்டபோதிலும், இலங்கையை முற்றுமுழுதான முறையில் அரசியல், பொருளாதார ரீதியாக 'மடக்கி' வைப்பதே இந்தியாவின் முக்கியநோக்கமாக காணப்பட்டது.


தென்னாசியப்பிராந்தியத்தில்

அரசியல், இராணுவ, பொருளாதார நடைமுறைகளைத் தீர்மானிக்கும் ஓர் ஏகபோக சக்தியாக இருக்கவேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது.


இந்நிலையில் இலங்கையில் உறுதியான அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகள் நிலவுவதை இந்தியா எவ்விதத்திலும் விரும்பவில்லை என்பதனையே இலங்கை விவகாரம் குறித்த அதன் அணுகுமுறைகள் மூலம் அறியமுடிந்தது.

1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் ஜயவர்த்தன அரசாங்கம், 1978ம் ஆண்டு புதிய அரசியலமைப்புடன், விரிவான திறந்த பொருளாதாரத் திட்டங்களுக்கும் அடித்தளமிடலாயிற்று.

ஜே. ஆர். ஜயவர்த்தன அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கையின் காலனித்துவ ஆட்சிமுறையிலிருந்தும் வேறுபட்டதாகவும், பாராளுமன்ற அரசியலைப் புறந்தள்ளுவதாகவும் விளங்கியிருந்தது.



## சோனியாவின் அனுதாபத்தைப்பெற ராஜீவ் கொலை குறித்துக் கூச்சல்



ஆட்சி அதிகார விடயங்களில் முக்கியமான முடிவுகளையும், தீர்மானங்களையும் எடுக்கும் தகுதியை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவந்திருந்தது.

அத்துடன் ஜே.ஆர் ஜயவர்த்தன இலங்கையை ஆசியாவில் மற்றுமொரு சிங்கப்பூர் போன்று கட்டியெழுப்பப்போவதாவும் அன்று தெரிவித்திருந்தார். இதற்கமைவாகவே இலங்கையின் பொருளாதார நடைமுறைகளில் சுதந்திர வர்த்தக வலையம், மற்றும் திறந்த பொருளாதார நடவடிக்கைகள் போன்றவற்றை ஜே.ஆர் அரசு அறிமுகப்படுத்தியிருந்தது.

பொருளாதார ரீதியாக இத்தகைய அணுகுமுறைகள் இலங்கையை ஒரு காத்திரமான வர்த்தக-கைத்தொழில் பிரதேசமாக மாற்றிவிடும் சூழ்நிலையை உருவாக்கி இருந்தன. முதலீட்டாளர்கள் பலரும் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டியிருந்தனர்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் சர்வதேச அரசியல் அணுகுமுறைகள் கூட பலம் மிக்க கைத்தொழில் நாடுகளுடன் உறவு பாராட்டுவதாக இருந்தது.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் ஜே.ஆர் அரசுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தன. ஜப்பான் பல்வேறு வழிகளிலும் இலங்கைக்கு தாராள உதவிகளை வழங்கியிருந்தது.

இந்நிலையில் ஜே.ஆர் அரசு இலங்கையையும் ஒரு சிங்கப்பூராக மாற்றுவதென்ற தனது நோக்கத்தை அடைவதற்கான செயற்திட்டங்களில் ஆர்வம் காட்டியிருந்தது.

எனவே இலங்கையின் இத்தகைய திறந்த, பொருளாதார கொள்கையை மையமாகக் கொண்ட நடைமுறைகள் பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தது.

தென்னாசியப் பிராந்தியத்தில் தனது சுயமான வளர்ச்சி மூலம் அபிவிருத்தி காண்பதில் முனைப்பாக இருந்த இந்தியா, இலங்கை ஒரு சர்வதேச கைத்தொழில், வர்த்தக மையமாக மாற்றம் அடைவதை பெரிதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தனக்குப் போட்டியாக தென்னாசியப் பிராந்தியத்தில் வர்த்தக-கைத்தொழில் ரீதியாக போட்டிகள் தோன்றுவதை இந்தியா விரும்பியிருக்கவில்லை.

இதன் காரணமாகவே இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா தனது மேலாதிக்கத்தைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டலாயிற்று.

இலங்கையில் தலையீடு செய்வதற்கு இனப்பிரச்னை இந்தியாவுக்கு ஒரு வாய்ப்பாக விளங்கியிருந்தது.

இலங்கைத் தமிழ் தீவிரவாத அமைப்புக்களுக்கு தமிழ் மக்களின் பாதுகாப்பை முன்னிட்டே ஆயுதப் பயிற்சி அளிப்பதாக இந்தியா கூறிக்கொண்டது. ஆயினும் இந்த ஆயுதப் பயிற்சி குறித்து இந்தியா எதனையும் வெளியுலகிற்கு தெரிவிக்கவில்லை.

தமிழ் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆயுதப்பயிற்சிகளை வழங்குவது; அரசியல் ரீதியாக இலங்கை இனப்பிரச்னையை மேலும் சிக்கலாக்கும் சூழ்நிலைகளை உருவாக்குவது; இதனையடுத்து இலங்கையில் ஒரு நீண்டகால உள்நாட்டு யுத்தத்திற்கு வழிசமைத்து இலங்கையை சர்வதேச ரீதியாக அரசியல், பொருளாதார துறைகளில் மட்டம் தட்டுவதே இந்தியாவின் உள்ளார்ந்த நோக்கமாக இருந்தது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் இந்தியா குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருந்தது. இலங்கையில் பல்வேறு தமிழ் தீவிரவாத அமைப்புக்களினதும் ஆயுதப்போராட்டங்கள் ஆரம்பமானதும் இலங்கையில் அரசியல், பொருளாதார நிலவரங்கள் ஆட்டங்காண ஆரம்பித்தன.

இந்திய அரசின் உளவுப் பிரிவான றோ(RAW) இலங்கையின் ஸ்திரப்பாட்டை இனப்பிரச்னை குறித்த ஆயுதப்போராட்டம் மூலமாக நிலைதளரச் செய்ததுடன், இந்தியாவைவிட வேறெந்தவொரு உலகநாடும் இலங்கை விவகாரத்தில் தலைபோடுவதை தவிர்ப்பதில் தீவிரமாக இயங்கியிருந்தது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தை இந்திய அரசு பிரஸ்தாபித்திருந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்னையை உலகறியச் செய்வதைவிட, தனது பிடிக்குள்ளிருந்தும் இலங்கை விவகாரம் கைநழுவிவிடக்கூடாது, வேறு நாடுகள் தென்னாசியப் பிராந்தியத்தில் தலைபோடக்கூடாது போன்றவற்றை உறுதி செய்வதாகவே இந்தியா அன்று ஐ.நா. வரை இலங்கை பிரச்னையை மேடையேற்றிவிட்டிருந்தது.

'தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும்' தந்திரத்தை இலங்கை விவகாரத்தில் இந்தியா மிக அழகாகவே கையாண்டிருந்தது.

வெளியுலகிற்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை கொண்டுவருவது போலவே இருந்தது.

ஆனால் வடக்கு-கிழக்கு இணைப்பு, மற்றும் அதிகாரப் பரவலாக்கல் விடயங்களில் தளம்பலான போக்கையே இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கொண்டிருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வி, மற்றும் அதனை அமுலாக்க வந்த இந்தியப் படையினர் எதிர்நோக்கிய பின்னடைவுகள் என்பன இந்தியா தென்னாசிய பிராந்தியத்தில் கொண்டிருந்த எதேச்சையான நிலைப்பாட்டுக்கு பலத்த அடியைக் கொடுப்பதாகவே விளங்கியிருந்தது.

இன்று மீண்டும் இந்தியத் தலையீடு பற்றிப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு எல்.ரி.ரி.ஈ யினரே பொறுப்பாளிகள் என்று இந்தியாவில் குரலெழுப்பப்பட்ட நிலையில், எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரன் கைதுசெய்யப்பட வேண்டும் என்று இந்தியாவில் கோசங்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இந்தியா இன்று அரசியல் ரீதியாக பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்கி இருக்கின்றது. பிரதமர் பி.வி. நரசிம்மராவின் ஆட்சி, இந்திரா காங்கிரஸ் அதிருப்தியாளர்களால் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. வடக்கே ஜம்மு-காஷ்மீர் நிலவரம் சூடு பிடித்துள்ளது. இந்நிலையில் இந்தியாவின் நேரு குடும்பத்தின் இன்றைய செல்வாக்கு மிக்க வாரிசாக இருக்கும் சோனியா காந்தியின் அனுதாபத்தைப் பெறுவதில் இந்திய மத்திய அரசின் அரசியல்வாதிகள் ஆர்வம்காட்டுகின்றனர்.

சோனியாவின் அனுதாபத்தை தம்பக்கம் திருப்புவதன் மூலம் இந்தியாவில் சுதந்திரப் போராட்ட காலம்முதல் பெரும்பாலான இந்தியரிடையே இருந்து வரும் நேரு குடும்ப விசுவாசத்தை தம் பக்கம் ஈர்ப்பதில் இந்திரா காங்கிரசுக்குள் போட்டிகள், பூசல்கள் ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் சோனியாவின் ஆதரவை தம் பக்கம் கவரும் வகையிலேயே ராஜீவ் கொலை விவகாரத்தைப் பெரிதுபடுத்துவதில் இந்திய அரசியலாளாகள் கரிசனைகொண்டிருப்பது தெளிவாகின்றது.

இந்தியா மீண்டும் இலங்கை விவகாரத்தில் இராணுவரீதியாக தலையிடும் என்பது சந்தேகத்துக்குரியதே. ஏனெனில் இந்தியா உலகில் நான்காவது பெரிய இராணுவ வல்லமையைக் கொண்டுள்ள போதிலும், அதன் ஆயுத மற்றும் சாதனங்கள் என்பன இன்றைய சர்வதேச இராணுவ தொழில் நுட்பங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதவையாகவே இருக்கின்றன.

விமானங்கள், கப்பல்கள், மற்றும் சாதனங்கள் என்பனவற்றைப் புதிதாக வாங்குவதிலும், பழையன வற்றைப் புனரமைத்து நவீனமயப்படுத்துவதிலுமே இந்தியா ஆர்வங்காட்டுகின்றது.


இதேவேளை இலங்கையின் வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈயினரின் பலமென்பது 1987 ம் ஆண்டு இந்தியப் படைகள் இலங்கை வந்திருந்ததை விட பன்மடங்கு அதிகரித்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்கில் இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிடுமானால் பெருமளவிலான யுத்தநிலவரத்துக்கே முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இந்திய அரசுக்கு ஏற்படும்.

அடுத்த ஆண்டில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் பொதுத்தேர்தல்களை எதிர்நோக்கவுள்ள இந்திய ஆட்சியாளர்கள், இலங்கையில் இராணுவ நடிவடிக்கைகளை மேற்கொள்ளும் விஷப்பரீட்சையில் எவ்வகையிலும், இறங்கமாட்டார்களென்றே கருதமுடியும். ஏனெனில் இராணுவ நடவடிக்கையில் ஏற்படும் பின்னடைவுகள் இந்திய ஆட்சியாளர்களுக்கு அரசியல் ரீதியாகவும் பெரும் பின்னடைவுளை எதிர்நோக்கும்.

எனவே இலங்கையின் வடக்கு-கிழக்கு விவகாரத்தில் இந்தியா மிகவும் அவதானமாகவே முடிவுகளை எதிர்காலத்தில் எடுக்குமென நம்பலாம். இதில் இராணுவ அணுகுமுறைகள் என்பது இந்தியாவுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவே இருக்குமென உறுதிபடக்கருதலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஹிட்லரின் தளபதியும் சயனைட் குப்பியும்

## நடந்த கதை நாடக வடிவில்

2



தருவது ரசிகன்

### காட்சி-04

1942 மே மாதம். ஹிட்லரும் தளபதி றொம்மெல்லும் பேசிக்கொள்கின்றனர்.

**றொம்மெல்:** ரியுனிசியப் போர் முனையில் ஏற்பட்ட தோல்விக்கு எவ்வகையிலும் பொறுப்பல்ல நான்!

**ஹிட்லர்:** பேசாதே றொம்மெல் தோற்றோடி வந்தன ஹிட்ரின் படைகள் என்ற செய்தியறிந்தால், கிடு-கிடுத்திருக்கும் பகைவர்கள் எல்லாம் சுறுசுறுப்பாகப் போகிறார்கள். சே..அவமானம்!

**றொம்மெல்:** பின்வாங்குவதும் போரில் ஒரு பொருத்தமான தந்திரம் தான்!

**ஹிட்லர்:** போர்த்தந்திரம் பற்றி எனக்கே போதிக்கிறாயா றொம்மெல்?

**றொம்மெல்:** நான் உதவி, கேட்டிருந்தேன்....!

**ஹிட்லர்:** எதற்கு உதவி? ஓடிவருவதற்கா?

**றொம்மெல்:** என் வீரத்தில் சந்தேகம் ஏன்?

**ஹிட்லர்:** வீழ்ச்சியை மிக்க மகிழ்ச்சியாய் சுமந்து வந்திருக்கிறாயே அதனால்!

**றொம்மெல்:** நமக்குள் ஏதோ சூழ்ச்சி நடக்கிறது.

**ஹிட்லர்:** நமக்குள் என்றால்...!

**றொம்மெல்:** நமது படைக்குள்! கோட்டைக்குள் இருந்தே யாரோ குழி பறிக்க நினைக்கிறார்கள்.

**ஹிட்லர்:** போதும் நிறுத்து! பிதற்றாதே! சூழ்ச்சியாம் சூழ்ச்சி! மோதும் களத்தில் வீரத்தை மறந்தாய்! சூழும் பகைவரின் கவச வாகனங்களையும் கணக்கற்ற ஆயுதங்களையும் நமதாக்கி வரும் விவேகத்தை துறந்தாய்! அதனால் செருக்களத்திலே நீ தோல்வியைக் கறந்தாய்! தோல்விக்கு சூழ்ச்சி என்று என்னிடம் காரணம் பகர்ந்தாய்! வெட்கம்..! றொம்மெல் வெட்கம்!

**றொம்மெல:** தாங்கள் மிகக் கோபத்தில் இருக்கிறீர்கள். நான் சென்று பின் வருகிறேன்.

றொம்மெல் விடைபெறுதல்

### காட்சி-05

அன்றைய தினசரியை ஹிட்லரின் காதலி ஈவா வாசித்துக் கொண்டிருக் கிறாள். ஹிட்லர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்.

**ஹிட்லர்:** கண்ணே ஈவா! உன் கண்கள் விரியக் காரணமான செய்தி என்ன தினசரியில்?

**ஈவா:** குண்டு வெடித்தது! அதிபர் ஹிட்லர் மயிரிழையில் உயிர் தப்பினார்! ஹிட்லரின் அலுவலகத்தில் நடந்த அவலம்!!

**ஹிட்லர்:** அன்பே அதிர்ச்சியா?

**ஈவா:** செய்தி பொய்யா?

**ஹிட்லர்:** செய்தி உண்மை. ஒரு வாசகம்தான் பொய்மை! மயிரிழையில் உயிர் தப்பவில்லை ஹிட்லர்; மதியூகத்தால் உயிர்தப்பினான் ஹிட்லர்! (நகைத்தல்)

**ஈவா:** என் பதியே! இது யார் சதி?

**ஹிட்லர்:** என் விதியை மாற்ற நினைக்கும் தளபதியின் சதி! ஆனால் மாறப் போவது அவனுடைய விதி! (நகைப்பு)

**ஈவா:** (ஹிட்லரை அணைத்தபடி) எனக்கு பயமாக இருக்கிறது.

**ஹிட்லர்:** உனக்கு பயமாக இருக்கிறது. எனக்கோ பரவசமாக இருக்கிறது.

**ஈவா:** என்ன?

**ஹிட்லர்:** உன் இனிய அணைப்பைச் சொல்கிறேன்!

**ஈவா:** போங்கள், இந்த நேரத்திலுமா குறும்பு?

**ஹிட்லர்:** கரும்புச் சுவை தரும் அரும்பு போல் இதழ் இரண்டு உதடுகள் தொட்டுவிடும் தூரத்தில் உள்ள போது, கொந்தளிக்கும் நெஞ்சிலும் கிளம்பத்தான் செய்யும் குறும்பு! இப்போது நீ கொடுக்க விரும்பு!

### காட்சி-06

ஹிட்லரும் அவரது நம்பிக்கையான ஜெனரலும் அந்தரங்கமாகப் பேசிக்கொள்ளல்

**ஜெனரல்:** விமானம் மூலம் தாக்கினால் கொலை செய்தது நாம் என்று கூறப்படுமல்லவா?

**ஹிட்லர்:** முட்டாள்! றொம்மெல் மீது தாக்குதல் நடத்தப்போவது பிரிட்டிஷ் விமானங்கள்!

**ஜெனரல்:** அதாவது...

**ஹிட்லர்:** பிரிட்டிஷ் சின்னங்களை நமது விமானங்களில் பொறி !அவைதான் வைக்க வேண்டும் றொம்மெல்லுக்கு குறி!

**ஜெனரல்:** அருமையான திட்டம்-!

**ஹிட்லர்:** பாராட்டுவது இருக்கட்டும். மரண தேவதை றொம்மெல்லை சீராட்டுவது நடக்கட்டும் விரைவில்!

### காட்சி-07

ஜெனரல் பதட்டத்தோடு ஓடிவருகிறார். ஹிட்லர் இருக்கையிலிருந்து எழுந்தபடி.....

**ஹிட்லர்:** என்ன ஜெனரல்? ஏனிந்த பதட்டம்?

**ஜெனரல்:** குறி த...தவ....

**ஹிட்லர்:** (கோபமாக உரத்தகுரலில்) தவறிவிட்டதா?

**ஜெனரல்:** ஆ.....ஆ....ஆம்!

**ஹிட்லர்:** ஒரு சதியைக் கூட ஒழுங்காக நிறைவேற்றி முடிக்கவில்லை, நீயெல்லாம் எதற்கு ஜெனரலாக இருக்க வேண்டும்?

**ஜெனரல்:** றொம்மெல் சென்ற வாகனம் வசமாகச் சிக்கி எரிந்து கொண்டிருக்கிறது.

**ஹிட்லர்:** ஆனால், றொம்மெல் மட்டும் சமயோசிதமாகத் தப்பிச் சென்று சிரித்துக் கொண்டிருக்கிறான்.

**ஜெனரல்:** எரிகாயம் இருக்கிறது.

**ஹிட்லர்:** நிறுத்து! மாயமாய் மறைந்து போயிருக்க வேண்டியவனை வெறும் காயமாக்கிவிட்டு வந்து கதை சொல்லாதே-!

(ஹிடலர் கைகளை பின்புறமாகக் கட்டிக் கொண்டு அங்குமிங்கும் நடந்து யோசித்துவிட்டு, சட்டைப்பையில் இருந்து சயனைட் குப்பியை வெளியே எடுக்கிறார்)

**ஹிட்லர்:** ஏற்கெனவே செய்த முடிவுதான் இனிச் சரியாகும்! ஜெனரல் இது உனக்கு!

**ஜெனரல்:** அ...அய்யோ ..இந்தளவு பெரிய தண்டனையா எனக்கு?

**ஹிட்லர்:** (நகைத்தபடி) இது உனக்கல்ல ஜெனரல்! உன் மூலம் றொம்மெலுக்கு!

**ஜெனரல்:** என்ன, றொம்மெலுக்கா?

**ஹிட்லர்:** ஆம், அவனுக்கே! கொல் அல்லது கொல்லப்படுவாய்! றொம்மெல் இனி அடிபட்ட புலி! தாமதித்தோம் என்றால் நம் தலைகள் தப்பாது! குறி வைக்கக்கூடாது; வைத்தால் ஒரு நொடி கூட எதிரிக்கு எம்மீது பாய வாய்ப்பு வழங்கவே கூடாது.

(ஜெனரலின் காதில் ஹிட்லர் இரகசியம் சொல்கிறார். ஜெனரல் சயனைட் குப்பியைப் பெற்றுக் கொண்டு செல்கிறார்)

### காட்சி-08

தளபதி றொம்மெல்லின் மகனுக்கு 16வது பிறந்தநாள். றொம்மெல்லின் மனைவி விருந்து தயாரித்துக் கொண்டிருக்கிறாள். மகனை தனியே அழைத்துச் செல்கிறார் றொம்மெல்

**றொம்மெல்:** மகனே! உனது நெஞ்சத்தை திடமாக்கிக் கொள்! எந்நேரமும் நான் உன்னை விட்டுப் பிரியலாம்!

**மகன்:** போருக்கு போகப்போகிறீர்களா அப்பா?

**றொம்மெல்:** ஒரு வகையில் இதுவும் போர்தான் மகனே. ஆனால் எதிரிகளோடு அல்ல; எம்மவரோடு!

**மகன்:** என்னப்பா சொல்கிறீர்கள்?

**றொம்மெல்:** விபரமாகச் சொல்ல இது தருணமல்ல மகனே! ஹிட்லரின் விரோத விழிகள் என் முதுகில் விழுந்திருக்கின்றன! விரிக்கப்பட்டு விட்டது சதிவலை! அதில் நான் விழக்கூடும் எந்நேரமும்!

**மகன்:** குண்டுவீச்சில் நீங்கள் காயமடைந்த போது கருணையுடன் வாழ்த்து அனுப்பினாரே ஹிட்லர்!

**றொம்மெல்:** வஞ்சகனின் வாழ்த்தில் இருப்பது கருணையல்ல மகனே கபடம்! எட்டி நின்று கத்தி எறிவார்கள். தட்டி விட்டுத் தப்பிக் கொண்டால் அருகில் வந்து கட்டியணைப்பார்கள். அது பாசத்தால் அல்ல; பதமாக நம் முதுகில் குத்த!"

(ஹிட்லரின் ஜெனரலும் இன்னொருவரும் வருகிறார்கள்)

**ஜெனரல்:** என்ன றொம்மெல் எப்படியிருக்கிறாய்? உனக்கு எரிகாயம் என்றவுடன் எம் அதிபர் ஹிட்லர் எப்படிப் பதறிப்போனார் தெரியுமா? அட..டே குட்டி றொம்மெலுக்கு இன்று பிறந்த நாள் அல்லவா? வாழ்க வளமுடன்! றொம்மெல் நாம் வெளியே போய் தனியே பேசலாமா?

**றொம்மெல்:** தாராளமாக!

(மூவரும் வெளியே செல்லல்)

### காட்சி 09

**ஜெனரல்:** றொம்மெல் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை) என் இதயம் இரும்பல்ல நண்பா இரும் பல்ல! எனினும் அதிபர் ஹிட்லரின் ஆணை, அதைச் சொல்ல வேண்டியது எனது கடமை!

**றொம்மெல்:** சுற்றிவளைக்க இது என்ன போர்க்களமா? சொல்ல வந்ததை நேரடியாகவே சொல்லுங்கள்!

**ஜெனரல்:** சமர்க்களம் பல கண்டு சரித்திரத்தில் என்றும் வியப்புக்கு உரித்தாக இருக்கப் போகிறவன் நீ! என் கவலை என்ன தெரியுமா றொம்மெல்?

**றொம்மெல்:** என்ன?

**ஜெனரல்:** உன்- உயிருக்கு வரலாம் கேடு; ஆனால் உன் புகழுக்கு வரக்கூடாது சிறு கேடும்! ஹிட்லரின் கோபம் உன் மீது குறிவைத்துவிட்டது! வீரன் நீ! விவேகியும் நீ! எனினும் ஹிட்லரை எதிர்த்து மோத நினைப்பது பாறையில் போய் தலையை மோதும் வேலை, புரியும் உனக்கு! ஆகவே றொம்மெல் இப்போது-இந்த நொடியே நான் சொல்வேன் இரண்டு வழி! அதில் உனக்குப் பிடித்த ஒரு வழியை நீயே தெரிந்தெடு!

**றொம்மெல்:** அவை என்ன வழிகள்?

**ஜெனரல்:** தேசத்துரோகி என்று பழி சுமந்து இராணுவ நீதிமன்றதில் தலை குனிந்து நிற்பது! விசாரணை கண்துடைப்பு, தண்டனை நிச்சயம்! உன் துணைவியும்-மகனும் கூட துரோகியின் குடும்பம் என்று துப்பாக்கி குண்டுகளுக்கு தீனியாவார்கள்! இது உன் புகழுக்கு கேடு!

**றொம்மெல்:** சரி, இரண்டாவது வழி என்ன?

**ஜெனரல்:** (சயனைட் குப்பியை றொம்மெல் முன்பாக தூக்கிக் காட்டுகிறார்) இது சயனைட் குப்பி! ஒரு துளி போதும், உடனே சொர்க்கம்! மரணம் உன்னை அணைத்துக் கொண்டாலும் உனது இறுதி ஊர்வலம் பூரணமான இராணுவ மரியாதையுடன் நடக்கும்! உனது புகழை துரோகி என்ற கறை மறைக்காது. உனது குடும்பமும் ஒழிந்து போகாது! இதுதான் றொம்மெல் இரண்டாது வழி!"

**றொம்மெல் ஒரு நொடியோசித்து தாமதித்துவிட்டு சயனைட் குப்பியை பெற்றுக்கொள்கிறார். ஜெனரலைப் பார்த்து இறுதியாக ஒரு புன்னகை சிந்திவிட்டு சயனைட் குப்பியை உதட்டில் வைத்து கடித்து விழுங்கிவிட்டு தரையில் சாய்கிறார்.**



### காட்சி-10

**பொதுமக்கள் சிலர் கூடி நின்று பத்திரிகை செய்தியைப் படிக்கிறார்கள்.**

"ஜெர்மன் படையின் ஃபீல்ட் மார்ஷல் றொம்மெல் மீது பிரிட்டிஷ் விமானங்கள் சமீபத்தில் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே. அந்தத் தாக்குதலில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக ஃபீல்ட் மார்ஷல் றொம்மெல் மரணமானார். உயர் இராணுவதிகாரிகள் கலந்துகொள்ள அவரது இறுதிச் சடங்கு பூரண இராணுவ மரியாதையோடு நடைபெற்றது.

முக்கிய கடமைகள் காரணமாக அதிபர் ஹிட்லர் மட்டும் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவில்லை"

*(திரை விழுகிறது.)*

---

# தூங்குவதில் தொல்லையா?



பொன் வாங்கலாம், பொருள் வாங்கலாம் தூக்கத்தை வாங்க முடியுமா?

ஒரு மனிதன் எவ்வளவுதான் விழித்திருந்து வேலை செய்ய வேண்டும் என்று நினத்தாலும் தூக்கம் விடுவதில்லை. அவன் அறியாமலேயே மூளை தூக்தக்தை எடுத்துக் கொள்கிறது.

தூக்கம் உடலுக்கு மிகவும் அவசியம். ஒரு மனிதன் நிம்மதியாக தூங்கி எழுந்தால் போதும், நோய்கள் பறந்து விடும். தன்னம்பிக்கை உதயமாகும்.

அமெரிக்காவில், தூங்குவதை வைத்து ஒருவருடைய குண நலன்களைக் கண்டு பிடித்து விடலாம் என்று நிரூபித்திருக் கிறார்கள். மனித மூளை ஓய் வெடுக்கிறது என்றால் அது அவன் ஆழ்ந்து தூங்கும் போது மட்டுமே.

நிம்மதியான தூக்கத்தினால் உடல் வெப்பம் சமன்படுகிறது. இரத்த ஓட்டம் சீரடைகிறது.

ஆனால் மது அருந்தி விட்டு தூங்கினால் நரம்பு மண்டலத்தின் இயற்கையான வேலைகள் பாதிக்கப்படுவதால் அது தீங்கானது. தூங்கும்போது கோப்பியோ, டீயோ குடிக்கக்கூடாது. பாலில் அமினோ அமிலம் இருப்பதால் பால் குடிக்கலாம்.

தூக்க மாத்திரைகள் உடனடித்தீர்வாக அமைந்தாலும் பக்க விளைவுகளை ஏற்படுத்தும்; ஆபத்தானதும் கூட.

தூங்குவதற்கு முன் 10 நிமிடங்கள் ஏதாவது புத்தகங்கள் படிப்பது நல்லது. இது மனதை நடு நிலைப் படுத்த உதவும்.

இப்படியும் உங்களால் தூங்க முடியவில்லை என்றால் ஒரு பத்து நிமிடம் நடந்தால் தூக்கம் தானாக வந்து விடும். அப்படியும் தூக்கம் வரவில்லை என்றால் உடனடியாக ஒரு டாக்டரிடம் ஓடுங்கள்.

---

அறிந்து கொள்ளுங்கள்-ஆரோக்கியம் பெறுங்கள்-ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## ஏன்—எப்படி

01. வயிற்றில் விஷத்தன்மை இருப்பதாக உணர சில மணி நேரம் ஆகிவிடும். இப்படி எத்தனை மணி நேரத்துக்குள் வாந்தி மருந்து பயன்தரும்?

ப: வயிற்றில் தொந்தரவு ஏற்பட்டாலே என்ன கோளாறு என்பது தெரிந்து விடும். சற்று முன்பு சாப்பிட்ட உணவுதான் என்பதை உறுதி செய்தால் யோசிக்காமல் வாந்தி மருந்து சாப்பிட்டு வயிறைக் காலி செய்வது நல்லது. அமில கரைசலாக இருக்குமானால் அதை வெளியேற்ற இந்த முதலுதவி கூடாது. உடனே டாக்டரிடம் ஓடுவதே சரி!

02. எங்கள் வீட்டுக் குழந்தை பட்டனை விழுங்கி விட்டாள்! இது போன்ற சிறு பொருளை வெளியேற்ற வாந்தி மருந்து பயன்படுமா?

ப: வயிற்றில் விஷத் தன்மையை முறிக்க உடனே அதை வெளியேற்றவே வாந்தி மருந்து பயன்படுகிறது. பட்டன் போன்ற திடமான சிறு பொருட்கள் ஓரிரு நாட்களில் மலத்தில் வெளியேறி விடும். உலோகப் பொருளாக இருந்தால் டாக்டர் ஆலோசனை பெறுவது நல்லது.

03. உப்புத் தண்ணீர் குடித்தாலே வாந்தி வரும் என்கிறார்களே சரியா?

ப: உப்புத் தண்ணீர் அதிக அளவில் குடித்தால்தான் வாந்தி ஏற்படச் செய்ய முடியும். அதற்குள் விஷத்தன்மை பரவி விடும். அதைவிட தொண்டையில் கைவிட்டு வாந்தி எடுக்க முயற்சிக்கலாம்.

04. முட்டை சாப்பிட்ட பின் என் குழந்தைக்கு ஜுரம் வருகிறது ஏன்?

ப: உணவில் சிலருக்கு சில வகை உணவுகள், அலர்ஜியாக (ஒவ்வாமை) இருக்கின்றன. எனினும் குழந்தைகளுக்குத் தற்காலிகப் பிரச்சனைதான் இது. எல்லா உணவையும் பழக்கினால் பின்னால் இந்த அலர்ஜி கோளாறு வராது.

---

# சளித்தொல்லை விலக

★ அதிகமாக வேர்க்கும் போதும், குளித்து விட்டு வந்தவுடனும் சாப்பிடக் கூடாது.

★ தொண்டைக்கட்டு குணமாகவில்லையா? முருங்கை இலையில் சாறு எடுத்து அதனுடன் கொஞ்சம் சுண்ணாம்பை சேர்த்து தொண்டையில் பற்றுப் போட்டால் பலன் கிடைக்கும்.

★ அடிக்கடி சளித்தொல்லை ஏற்பட்டால் இஞ்சி, எலுமிச்சம் சாறு அகியவற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் சளி நீங்கும்.

★ பழச்சாறு எதுவானாலும் அடிக்கடி குடித்து வந்தால் முகம் பொலிவுடன் இருக்கும்.

★ நம் உடம்பில் உள்ள எலும்புகள் பலம் பெற தினமும் உணவில் தயிர் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ ஆவாரம் பூவுடன் பச்சைப் பயிரை சேர்த்து சமைத்துச் சாப்பிட்டால் சிறுநீருடன் இரத்தம் வெளிப்படுவது நிற்கும்.

★ கம்பளிப் பூச்சி மேல் விழுந்து விட்டாலே..அந்த இடம் தடிப்பாகி விடும். அதில் இருந்து தப்பிக்க தடிப்பாகும் இடத்தில் நல்லெண்ணை தேய்த்தால் தடிப்பு விலகும்.

# ஹலோ ஹலோ சுகமா?




அவரோ ஆட்டிப்படைக்கும் இராணுவ அதிகாரி. அவர் காலில் ஏறி ஆடிப் பார்க்கிறார் குட்டி மந்தி. சிவபூஜைக்குள் கரடி புகுந்ததுபோல், இராணுவ மந்திராலோசனையில் மந்தி புகுந்துவிட்டதோ?!

# மனிதச் 'ஷெல்'

'மனிதக் குண்டு' பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். படத்தில் இருக்கிறார் பாருங்கள் 'மனிதச் ஷெல்'.

ஆனால் இந்த 'மனிதச் ஷெல்' குறியின்றிப் பாயாது. கூரைகளில் விழாது. அடுத்தவருக்கு அபாயம் தராது. அகமகிழ்வு தரும். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? சர்க்கஸ் கம்பனி ஒன்றின் சாகசக் காட்சிதான் இது. பீரங்கியிலிருந்து ஒரு விசை மூலம் புகை சகிதம் கிளம்புவார் மனிதர். சர்க்கஸ் அரங்கமே அதிரும் கரவொலியால்! இங்கிலாந்தில் இருக்கிறது இந்த சர்க்கஸ் கம்பனி.



# தகவல் பெட்டி

# எங்கே. எடு பார்க்கலாம்!



இங்கிலாந்தில் உள்ள மிருகக் காட்சிசாலை ஒன்றில் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார் ஸிமன் என்னும் வாலிபர். மிருகங்கள் எல்லாம் புகைப்படத்துக்கு அட்டகாசமாக போஸ் கொடுத்துக் கொண்டிருக்க, ஒரு கீரிப்பிள்ளையார் கமராவில் தாவி ஏறிக் கொண்டார்.

தங்கள் வண்டவாளங்களை புகைப்படம் எடுப்பதை அரசியல் வாதிகள்தான் விரும்புவதில்லை. கமராவில் பாய்ந்துமிருக்கிறார்கள். கமராக்காரர்களை கந்தலாக்கியும் இருக்கிறார்கள். ஆனால் கீரிப்பிள்ளை நீயுமா? ஹ... ஹ.... ஹ.

# புத்திசாலி ராஜா

காட்டுப்பகுதிகளில் இருக்கும்போது கொரில்லாக்கள் தம்மை உருமறைப்புச் செய்து கொள்ளுவார்கள்.

மரம் ஒன்று நிற்பதுபோலத் தெரியும். அருகில் சென்றால் கொில்லரக்களின் துப்பாக்கிகள் சீறும்.

ஆனால் படத்தில் இருப்பவர் கொரில்லா அல்ல. பனிச்சறுக்கு வீரர். நத்தார் மரம் எடுத்துவர வேண்டும். வழியெங்கும் அடர்ந்த பனி. என்ன செய்யலாம்? மரத்தை தன் உடலில் கட்டிக்கொண்டு பனியில் சறுக்கியபடி வீடு செல்கிறார். ஜெர்மனியில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி.



# வா-மோதலாம்!

ஸ்பெயின் நாட்டிலும் காளை அடக்கும் வீர விளையாட்டு நடப்பது வழக்கம். திமிறும் காளையை அடக்குவது சுலபமான காரியமா என்ன? ஆனால் அதையே சுகமான காரியம் என்று நினைத்துவிட்டார் இவர். களத்தில் இறங்கினார். வித்தை தெரியவில்லை. ஐயோபாவம்! முட்டி மோதி தூக்கி எறிந்துவிட்டது காளை. அந்தக் காட்சியைக் கச்சிதமாக அமுக்கிக்கொண்டார் ஒரு கமராக்காரர்.



## சுருட்டும் சுமிதாவும்

தமிழ்ப் பட நடிகைகளில் சிகரெட் பிடிப்பவர்கள் யார்? சில்க் சுமிதா, பல்லவி, கோவை சரளா. சில்க் சுமிதாவுக்கு ஆந்திர மாநில சுருட்டு என்றால் அலாதிப் பிரியமாம்.

## தேவா நடிக்கிறார்

இதுவரை தான் இசையமைக்கும் படங்களில் பாடி வந்தார் தேவா. இப்போது 'சும்மா இருங்க மச்சான்' படத்தில் ஒரு பாடலைப் பாடியுள்ளதோடு, அப் பாடல் காட்சியிலும் நடிக்கிறார் தேவா.



ரோஜா தேவராஜ் படம் …

## பம்பாய் நடிகை கஜோல் …

### அதிரடிப் பேட்டி

தமிழ்ப் படவுலகுக்கு வரும் மற்றொரு பம்பாய் நடிகை கஜோல் (முகப்பில் இருப்ப… கவர்ச்சியாக நடிக்க மட்டுமல்ல தாராளமாகப் பழகவும் ஏற்றவர் என்று பம்… படவுலகில் பெயரெடுத்தவர்.

கஜோல் சமீபத்தில் அளித்த அதிரடிப் பேட்டியிலிருந்து.

கேள்வி: கற்பழிப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அசிங்கமான குற்றம்.

கேள்வி: என்ன தண்டனை கொடுக்கலாம்?

பதில்: கற்பழிப்பில் ஈடுபடும் ஆணின் ஆண்மையைப் பறித்து… வேண்டும்.

கேள்வி: எய்ட்ஸ் பயம் தீர என்னவழி?

பதில்: ஆண்களுக்கு கருத்தடை உறைகள் இருப்பதுபோ… பெண்களுக்கும் அந்த மாதிரி வசதிகள் அமெரிக்காவில் உள்ள… இங்கும் அப்படி உருவாக்க வேண்டும். பெண் தன் காதலன்… இரத்தத்தை பரிசோதித்த பின்னர் நெருங்கிப் பழகு… நல்லது.

கேள்வி: ஆண்களோடு நெருங்கிப் பழகுவது....?

பதில்: அது அவரவர் சுதந்திரம். இதே கேள்வி… ஆண்களிடமும் கேட்பீர்களா?

## கர்ணா 50 நாள்! பக…
## 'பம்பாய்' நெருங்குகிறது …

தமிழ் நாட்டில் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது 'பம்… 'பம்பாய்' சென்னையில் மட்டும் நான்கு திரையரங்குகளில் ஓடிக்கொண்டிரு… விளம்பரமாகிக் கொண்டிருக்கின்றன.

அர்ஜுன் நடித்துள்ள 'கர்ணா', பாரதிராஜாவின் 'பசும்பொன்' இரண்டு… ராஜ்கிரணின் 'எல்லாமே என் ராசாதான்' வசூலில் அசத்தி 50 நாளைத் தாண்டி… சென்னையில் ஒரு திரையரங்கில் பகல் காட்சி மட்டும் ஓடினாலும் 100 நாட்க… கதாநாயகன் விஜய்.

நூறு நாளைத் தாண்டியும் சென்னையில் மட்டும் மூன்று திரையரங்குகளில் ஓடிக்கொண்… பலத்த வரவேற்போடு இரண்டு வாரங்களைத் தாண்டியுள்ள படங்கள், 'இந்திரா' 'முறைமாம… 'நந்தவனதெரு' தற்போது திரைக்கு வந்துள்ள படங்கள், 'ராணி மகாராணி' (ராதிகா) கிரீடம் (கு… இன்னொரு தகவல், எம்.ஜி.ஆர் நடித்த 'நான் ஏன் பிறந்தேன்' மீண்டும் சென்னையில் திரையிடப்… அலைமோதுகிறது. ஒல்ட் இஸ் கோல்ட்!

## தமிழில் ஜுராஸிக் பார்க்

ஆங்கிலப் பட வரலாற்றில் உலகெங்கும் (இலங்கை உட்பட) சக்கை போடு போட்ட படம் ஜுராஸிக் பார்க். அதனைத் தமிழில் மொழி மாற்றம் செய்து சென்னையில் இரு திரையரங்குகளில் திரையிட்டுள்ளார்கள். ஆறுவாரங்களாக ஓடிக்கொண்டிருக்கிறது.

முகப்பில்
நீல அழகி கஜோல்
பிரபு

## ராம்கியும் இரண்டு …

திட்டமிட்டு, விரும்பிச் செய்யவில்லையா… மனைவிகளாக்க காரணமாம். பா… ஆனாலும் எப்படிச் சமாளித்துத் து… இந்தக் கதைக்குரிய படத்தின் பெய… இரண்டு பெண்டாட்டிகளுக்… அசத்தலானவர்கள்தான். ஒ… போதாக்குறைக்கு விசித்திராவு… வருகிறது.

## பொலிஸ் அதிகாரியாக ரோஜா

மம்முட்டி, மீனா, ரோஜா ஆகியோர் தெலுங்கில் நடித்து வெற்றிக் கொடி நாட்டிய படம் தமிழில் மொழி மாற்றப்பட்டுள்ளது. படத்தின் பெயர்: 'ரயில்வே கூலி' பொலிஸ் அதிகாரியாக ரோஜா நடித்திருக்கிறார். 'இதுதாண்டா பொலிஸ்' போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய கோடி ராமகிருஷ்ணாதான் படத்தை இயக்கியுள்ளார்.

## எல்லா…

திரைப்பட வி… சம்பாதித்தவர் ப… தயாரிப்பிலும் இ… யாவரையு… பாண்டியன்… பெயர்: 'வ… 'மது… இரக்கி… நூறு… வா…

## சுகன்யாவுக்கு அனுதாபம்

'மகாபிரபு' படத்தில் சரத்குமாரின் ஜோடியாக நடித்துக்கொண்டிருக்கிறார் சுகன்யா. அப்படியொன்றும் 'ஜொள்ளு'விட வைக்கும் பாத்திரமல்ல. சேலையோடு வந்து சரத்குமாரை ஒரு தலைக் காதல் செய்து சோகமூட்டும் பாத்திரம். இறுதியில் வினிதாவுக்காக தனது ஒரு தலைக் காதலை முடித்துக் கொண்டு இறந்துபோவதாகக் கதையாம். இரசிகர்களது அனுதாப வாக்குகள் நிச்சயம்.

## அமெரிக்காவில் சிவாஜி

'செவாலியே' விருது பெற்ற சிவாஜியை அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் ஒன்று சேர்ந்து கௌரவிக்கப் போகிறார்கள். விழா நடத்த சிவாஜியிடம் அனுமதி கேட்டார்கள். "வருகிறேன்" என்று சொல்லிவிட்டார் சிவாஜி. விரைவில் அமெரிக்காவில் நடக்கப் போகும் விழாவுக்கு சிவாஜியோடு, கவிஞர் வைரமுத்துவும், பாரதிராஜாவும் செல்லப்போகிறார்கள்.

நம் நாட்டிலும் ஒரு விழா செய்யலாமே!



ஊர்மிளா
படம்: ரங்கீலா இந்தி

## நம்பர் வன் யார்?

தற்போது தமிழில் நம்பர் வன் நடிகை யார்? சம்பள அடிப்படையில் பார்த்தால் நக்மா. அதிக படங்களில் நடிப்பது மீனா. ஆறு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். 'நாடோடி மன்னன்' படத்தில் இரட்டை வேடம்.

## நுழையவில்லை

செண்பகா என்ற பெயர் தெலுங்குப் படவுலகத்திலிருந்து வாய்க்குள் நுழையவே மாட்டேன் என்கிறதாம். 'ஷண்முகா' என்று அழைக்கிறார்களாம். அதனால் தெலுங்கில் தனது பெயரை மாற்றப் போகிறார் செண்பகா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ...கட்சியில் கலந்தபோதும்.

... டி. ராஜேந்தர் தி.மு.கவில் கலைஞர் ...யோடு ஐக்கியமாகிவிட்டார் அல்லவா. ஆனாலும் ... தீவிர ஈடுபாட்டோடுதான் இருக்கிறார். பிரபல ... ஒன்றுக்காக படம் ஒன்றை இயக்கிக் கொடுக்க ...ல் இருக்கிறார் டி.ராஜேந்தர்.

## ...தவி மாட்டிக் கொண்டார்

...லிருந்து குஷ்புவுக்கு முன்னரே இறக்குமதியானவர் ...கிசுக்களில் மாட்டிக்கொண்ட போதும் முன்னணி ...களோடும் நடித்தவர். பின்னர் திடீரென்று இறங்கு முகம். ...வில்லை என்று கர்நாடக படவுலகத்திற்குச் சென்றார். ... பிரபல விருதி... ...வரமாக விடயத்தில் ... கொண்டார். ... ரூபிணியை ... படவுலக ஹீரோ ... கைகொடுத்து ...

## ...ன் ஹிட்!

## ...து நாளை!

... நாளை நெருங்கும் ... களும், சர்ச்சைகளும் ... தாண்டிவிட்டன. ...யுள்ளது 'தேவா' ... 'பாட்ஷா', ...தியோர்' 'திருமூர்த்தி' ... வாரங்களாக கூட்டம் ...

## ...ண்டாட்டிகளும்

... இரண்டு பெண்களை ... திண்டாடிப் போகிறார். ... என்பதுதான் கதை. ... நடிகைகளும் ... மற்றவர் திவ்யஸ்ரீ. ... படப்பிடிப்பு நடைபெற்று ...

## ...புதுமுகம்

... இருந்து நாலு ... அவர் இப்போது ... படத்தை ... படம் ... அந்த அகத்தியன் ... இயக்குகிறார். ... வந்தால் ...

## போலிச்சாமிக்கு சூடு

போலிச் சாமியார் ஒருவரின் லீலா விநோதங்களை அம்பலப்படுத்தி சூடுபோடும் கதையோடு வளரும் படம் 'புதிய அலை'.

புதுமுகம் ஜீவன் கதாநாயகனாக நடிக்கிறார். ஜோடியாக மோகனா நடிக்கிறார். "தளுக்கு மேனி காட்டு காட்டு டாப்பு டக்கர்தான்" என்று தொடங்கும் பாடல் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

## வருகிறது

ஒரு வழியாக இம்மாதம் திரைக்கு வரப்போகிறது நாசர் இயக்கி நடித்த அ...ம்.



சரத்குமார்-மீனா
படம்-நாட்டாமை மன்னன்



ரஜினிகாந்த்
படம்-பெத்தராயுடு

## செல்விக்கு ரசிகன் சரத்

'நாடோடி மன்னன்' படத்தின் ஒரு பாடல் காட்சியில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 'கட் அவுட்' இடம்பெறுகிறது. ஏற்பாடு சரத்குமார்தானாம். படத்தை தயாரித்து வரும் மணிவாசகம் எம்.ஜி.ஆர் ரசிகர். அதனால் எம்.ஜி.ஆர் 'கட் அவுட்டும்' படத்தில் இடம்பெறுகிறது. படத்தின் பெயரும் பழைய எம்.ஜி.ஆர் படப் பெயரல்லவா.

## நட்புக்காக ரஜினி

நாட்டாமை படத்தை தெலுங்கில் தயாரித்து நடிக்கும் மோகன்பாபு ரஜினிக்கு தோஸ்த். அதனால் தெலுங்கு நாட்டாமையில் கௌரவ வேடத்தில் நடித்துள்ளார் ரஜினி. தமிழில் விஜயகுமார் நடித்த பாத்திரம். தெலுங்கில் 'பெத்தராயுடு' என்ற பெயரில் தயாராகிறது.

## "நக்மா வேண்டும்"

மலையாளப்பட நடிகர் மம்முட்டிக்கு நக்மாவோடு நடிக்க ஆசை. ஒரு படத்திலாவது நடித்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார் மம்முட்டி. அவரது ஆசை விரைவில் நிறைவேறப் போகிறதாம்.

## நண்பிகள்

நடிகை ரோஜாவும், ரஞ்சிதாவும் நெருக்கமான நண்பிகளாகிவிட்டனராம். 'மக்களாட்சி' படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட பிடிப்பு இறுக்கமாகி விட்டதாம். இருவரும் ஒருவருக்கொருவர் சிபாரிசு செய்கிறார்களாம்.

## ...அங்கே பிரியா

தமிழில் குஷ்பு நடித்த படங்கள் தெலுங்கில் தயாராகும் போது குஷ்பு நடித்த பாத்திரத்தில் நடிப்பது யார் தெரியுமா? பானுப்பிரியாதான்! 'நாட்டாமை' 'வனஜா கிரிஜா' இரண்டும் தெலுங்கில் தயாராகிறது. இரண்டிலும் பானுப்பிரியா நடிக்கிறார்.

## வடிவேலுவுக்கு வசனம்

வடிவேலுவுக்கு நகைச்சுவை வசனம் எழுதிக் கொடுப்பவர் பெயர் தேனி செல்வம். இவர் இயக்குநர் பாரதிராஜாவின் உறவினர்.

தேனி செல்வம் எழுதும் வசனங்கள் கவுண்டமணி-செந்திலுக்கும் பிடித்து விட்டதாம். ஆனால் தேனியோ வடிவேலுவுக்கு மட்டுமே எழுதுவேன் என்றுவிட்டாராம்.

## வித்தியாச வித்யாசகர்

'பசும்பொன்' படத்திற்கு இசையமைத்தது மூலம் வித்யாசகர் பெயர் பிரபலமாகிவிட்டது. "குறித்த நேரத்தில் உரிய வேலையை முடித்துத் தருபவர்" என்று அவருக்காக சிபாரிசு செய்கிறாராம் பாரதிராஜா. வேகமாகவும் வித்தியாசமாகவும் இசையமைக்கக்கூடியவர் என்று பெயர் கிடைத்து விட்டதால் புதிய படங்களிலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

## குஷ்பு கிசு-கிசு

குஷ்புவோடு லேட்டஸ்டாக இணைத்துப் பேசப்படுபவர் முறை... இயக்குநர் சுந்தர். இருவரும் ... சந்திக்கிறார்களாம். ... பட வெற்றியைப் ... அடுத்த படத்தையும் ...வைத்து இயக்க நினைத்... சுந்தர்.

## மினி சினி

* தற்போது ரஜினியின் 'முத்து' வைத் தயாரித்து வரும் 'இயக்குநர் சிகரம்' கே. பாலசந்தர், இப்படம் முடிவடைந்ததும் கமல் கதாநாயகனாக நடிக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளார்.
* 'திருமூர்த்தி' படத்தில் கதாநாயகியாக நடித்த ரவளி, அடுத்து விஜயகாந்த் நடிக்கும் 'காந்தி பிறந்த மண்' படத்திலும், சத்தியராஜ் நடிக்கும் பெயரிடப்படாத புதிய படத்திலும் கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார்.
* பிரபு-மோகன்லால் இணைந்து நடிக்கும் 'காலாபாணி' மலையாளப் படத்தில், முகுந்த் என்னும் புரட்சிக்காரன் கதாபாத்திரத்தில் பிரபு நடிக்கிறார். முகுந்த் என்பவர் சுதந்திரப் போராட்ட காலத்தில் உண்மையிலே சிறைக்குச் சென்றவர்.
* பிரபல ஹிந்தி இயக்குநர் மகேஷ்பட், சொந்தமாகத் தயாரிக்கும் இந்திப் படமொன்றை பாலுமகேந்திரா இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் அரவிந்தசாமி-ரேவதி ஜோடியாக நடிக்கிறார்கள்.
* ராஜ்கிரணின் 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் வில்லனாக அறிமுகமான சூரியன், தற்போது 'சந்திரலேகா' உட்பட மூன்று புதிய படங்களில் வில்லனாக நடித்துவருகிறார்.
* சமீபத்திய கன்னடப்படங்களில் அதிக பொருட்செலவில் தயாராகியுள்ள 'லாக்கப்டெத்' என்ற படம் அதே பெயரில் தமிழுக்கு மொழி மாற்றப்படுகிறது. 'பிள்ளைக்காக' படத்தில் வில்லனாக நடித்த தேவராஜ் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக நிரோஷா நடித்துள்ளார்.
* தர்மேந்திரா, சத்ருக்கன் சின்ஹாவுடன் இணைந்து அர்ஜுன் இந்தியில் நடித்த 'வக்த் சிக்கந்தர் ஹை' என்ற படத்தின் பெயர் 'ஜால்மோ சித்தம்' என்று மாற்றப்பட்டுள்ளது.
* 'அதிசயப்பிறவி' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த இந்தி நடிகை ஷீபா, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தமிழ்ப்படமொன்றில் நடிக்கவுள்ளார்.
* 'பிரியங்கா' படத்தயாரிப்பாளரும், இயக்குநருமான நீலகண்டா விரைவில் நாசரை வைத்து ஒரு படத்தை இயக்கித் தயாரிக்கவுள்ளார்.
* 'கலைஞன்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்த பிந்தியா, சரத்குமாரின் 'ரகசியப் போலீஸ்' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடுகிறார்.
* 'பெரிய குடும்பம்', 'மாமனிதன்', 'புதுநிலவு' உட்பட பல படங்களில் நடித்துவரும் வினிதா தொலைக்காட்சித் தொடர் ஒன்றிலும் நடித்து வருகிறார்.

# சி னி வி சி ட்



மம்முட்டி-ரோஜா
படம்-மக்கள் ஆட்சி

# ஏளனம் ஏனய்யா பெண்கள்மீது!

## மிதிக்காதே மதி! ஒதுக்காதே அங்கீகரி!

**கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி 'இந்து' பத்திரிகையில் பணியாற்றுகிறார். நிறைய யோசித்து புதிது புதிதாக எழுதுகிறார். அதில் ஒரு பகுதி இது.**



சமீப காலங்களில் பெண்கள் வேலைக்குச் செல்வது என்பது சராசரியான விஷயமாகிவிட்டது. ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் பெண்கள் வேலைக்குப் போவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட, சில குடும்பங் களில், ஒரு பொருளாதாரக் கட்டாயமாகக் கூட ஆகியிருக்கிறது.

பெண் வேலைக்குப் போவதை இலேசான புகைச்சலோடு ஏற்றுக் கொள்ளும் இந்தச் சமூகம், வேலை பார்க்கும் இடத்தில் அவளை ஆணுக்கு சரிநிகராக திக்கத் தயாராய் இல்லை.

ஆண்களையும் பெண்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது, ஆரோக்கியமான மனிதர் ஒருவருக்கும், சங்கிலியால் பிணைக்கப்பட்ட இரும்புக் குண்டை காலில் கட்டி முடக்கப் பட்டவருக்கும் ஓட்டப் பந்தயப் போட்டி வைத்து, பின்தங்கியவரை குறை கூறுவது போலாகும்.

பல நூற்றாண்டுகளாக ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகம் எழ முற்படுகையில் ஆதரவுக் கரம் நீட்டி, அரவணைக்கும் சமூகமும், சட்டங்களும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நசுக்கப்பட்ட பெண்ணினத்தின் மீது ஏன் ஏளனக் கணைகளை வீசுகிறது.

ஆணுக்கு உத்தியோகம் மட்டும்தான் புருஷலட்சணம். அவனிடம் எதிர்பார்க்கப் படுவது சம்பாத்தியம், அலுவலகத்தில் வேலையில் திறமை இவை மட்டுமே. ஆனால் வேலைக்குப் போகும் பெண்களிடம் எதிர்பார்க்கப்படுவது இது மட்டுமல்லவே.

காலையில் எழுந்து சமைத்து, வீட்டைச் சுத்தப்படுத்தி, வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்து, அவர்களை அவரவர் அலுவலகங்களுக்கு அனுப்பிவிட்டு, பிறகுதான் கிளம்பி அலுவலகம் சென்று, அங்கு நாள்முழுக்க உழைத்து, மாலையில் அரக்கப் பரக்க வீடு திரும்பி, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தந்து, இரவுச் சமையலை முடித்து, இதற்கும் இடையில் யாருக்காவது உடல் நலமில்லை என்றால் அதற்காக தான் விடுமுறை எடுத்து யாரும் பகிர்ந்து கொள்ள முன்வராத ஆயிரம் பொறுப்புக்கள்.

காலம் காலமாய் இவை உன் வேலை என்று பசுமரத்தாணி போல் மனதில் அறையப்பட்ட இந்தப் பொறுப்புக்களில் இருந்து தன்னை எந்தப் பெண்ணாலும் அவ்வளவு சுலபத்தில் விடுவித்துக் கொள்ள முடிவதில்லை.

ஒரு பெண்ணுக்கு படிப்பு என்பது ஆணைப்போல் அத்தியாவசியம் இல்லை என்று நம்பும் சமூகத்தில், நிறையப் படிப்பதே அவளது கல்யாணத்திற்கு முட்டுக்கட்டை என்று நினைக்கும் சூழலில் போராடி, படித்து, தன்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு உலகை நோக்குவதே அவளுக்குப் பெரிய வெற்றி.

அப்படி வெற்றி பெறும் பெண்களைச் சுற்றி ஒழுக்க ரீதியாய் அவளை மாசு படுத்தும் கட்டுக்கதைகள் எத்தனை. இதையும் தாண்டி அவள் ஜெயிக்கும் பட்சத்தில் குடும்பப் பொறுப்புக்கள் என்கிற சங்கிலி.

ஆணுக்கு நிகராய் பெண்ணை அறிவுபூர்வமாய் மட்டுமல்ல, உணர்வுபூர்வமாயும் மதிக்க நாம் பழக வேண்டும்.

ஆழ்மனதின் வேர்கள் வரை புரையோடிப் போன இந்த எண்ணங்களை மாற்றிக் கொள்ள இந்தத் தலைமுறை தத்தளித்தாலும், இனிவரும் உலகையாவது இந்த மனநோய் அண்டாமல் வளர்க்க வேண்டும். அதுவரை ஒருதலைப்பட்சமான தீர்வுகளையாவது வழங்காமல் இருப்போம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## உடலுக்கு ஏற்ற ஆடை நிறத்திற்கு ஏற்ற புடவை

**ஹாய்....**

பெண்களின் அழகை எடுத்துக் காட்டுவதே சாறியும் பிளவுஸும்தான்..... அவரவர் நிறத்திற்கேற்ப சாறியும்,பிளவுஸும் அணிந்து அதை அழகாகக் கட்டியிருந்தால்.... அப்பப்பா.....கேட்கவே வேண்டாம்!



எத்தனை அழகிகள் நாகரிக உடைகளில் தோன்றினாலும் பெண்களின் அழகும், புடவையும் உலகம் முழுவதும் பேசப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது!

அவரவர் நிறத்திற்கேற்ப புடவை அணிவது அவசியம். அவர்களுக்கு அழகா இருக்கே....அந்த கலர் புடவைன்னு நாமும் எடுக்கக் கூடாது. இது மிக.....மிக....முக்கியம்.

கறுப்பாய் இருப்பவர்கள் வெள்ளை, லைட்க்ரீம், சொக்லெட் கலரில் புடவை கட்டினால் 'டீசன்ட்'ஆன தோற்றம் கிடைக்கும். சே....கறுப்பாய் இருந்தாலும் எத்தனை அழகு என்று பார்ப்பவர்கள் வியந்துபோவார்கள். அப்புறம் உங்களோட தாழ்வு மனப்பான்மை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ஓ.கே.....!

மாநிறம், கோதுமை நிறமுடைய பெண்கள் லைட் புளூ, லைட் க்ரீன், லைட் ஜெலோ கலர் அணிந்தால் அசத்தலாக இருக்கும்.

சிவப்பாய் இருப்பவர்கள் எந்தக் கலரில் வேண்டுமானாலும் கட்டலாம். ஆனாலும் டாக்றோஸ், டாக் ஜெலோ, டாக் ரெட்... இப்படி பளிச் என்ற நிறமுடைய சாறிகளைத் தெரிவு செய்தால் அவர்கள் கலருக்கு தேவதை போல் தோன்றுவர்.

புடவை கட்டும் போது முதலில் ஒரு 'லேயர்' எடுத்து உள்ளே உள்பாவாடையுடன் பின் குத்திவிட்டு மீதியுள்ள சேலையில் கொசுவம் வைத்து சொருகிய பிறகு.... கொசுவத்திற்கு இடப்புறம் சுருக்கம் நீக்க வேண்டும். இவ்வாறு கட்டினால் 'போடர்' வைத்த புடவைகளாயின் அந்த போடர் பகுதி இடுப்பின் ஓரத்திற்கு வர பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தெரியும். பிளவுஸில் 'பவ்ஸ்லீவ்' மற்றும் பலவித மான அலங்கார கழுத்து வைத்து போட்டால் பட்டிக்காட்டுப் பெண்கள் என்று நினைத்து விடுவர்.

எனவே 'டீசன்ட்'டான தோற்றத்தைத் தரும் சின்ன 'பவ்' வைத்து 'ப' நெக் 'V' நெக், 'போட்' நெக் வைத்து....நீளக் கைவைத்த இறக்கமான பிளவுஸ் அணியுங்கள். உங்களைப் பார்ப்பவர்கள் அசந்துபோவதுடன்.... எத்தனை அடக்கமாக டிரஸ் பண்ணியிருக்கார் என்று பாராட்டும் கிடைக்கும் தெரியுமா?

மேலதிக டிப்ஸ்

ஆமாம், மேலே சொன்ன கலரிலேயே எப்பவும் புடவைகட்ட முடியுமா என்று அலுத்துக்கொள்ள வேண்டாம். முடிந்த வரையில் நீங்கள் எடுக்கும் புடவையில், மேலே சொன்ன கலர்ஸ் அதிகம் இருப்பது போல் பார்த்துக் கொள்ளுங்கள்.

# சின்ன சின்ன ஆசை 'அழகி'யாக ஆசை...!

**ஹாய்...**

அழகாய் இருக்க ஆசைப்படுபவர்கள் 'ஸ்டைல்' பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஸ்டைலுக்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன தெரியுமா? ஒயில்!

ஸ்டைலா நடந்து கொள்ள கத்துக்கிட்டா போதுங்க. அழகாயில்லாட்டிக்கூட பரவாயில்லை. மற்றவர்கள் உங்கள் ஸ்டைலான நடத்தையைப் பார்த்து அப்படியே மயங்கிப் போயிடுவாங்க. நம்ம ரஜினியை எடுத்துக்குங்க 'குட்டி' குழந்தைங்க முதல் கொண்டு ரசிக்கிறாங்களே..!

ஓ.கே! இப்ப எப்படி ஸ்டைலை வெளிப்படுத்துவன்னு பார்ப்பமா..

நாம் நடக்கையில், பேசும்போதும், சிரிக்கும்போதும், ஏன் தூங்கும் போதும்கூட ஸ்டைலாகத் தான் தூங்க வேண்டும்.

ஒயிலா நடக்கிறதா நெனச்சிக்கிட்டு பாம்பு போல நெளிவது....இடுப்பை போட்டு ரொம்ப அசைப்பதுமாக இருந்தால் மற்றவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிப்பர்.

குனியாமல் நிமிர்ந்து நின்று சற்று மூச்சை உள்ளிழுத்து சிறுசிறு அசைவுகளுடன் நடக்க வேண்டும்.

உட்காரும் போது கால்களை பரப்பிக் கொண்டு உட்காராமல் கால்கள் இரண்டையும் மடித்துவைத்து, ஒரு கையைமட்டும் ஊன்றி... அதாவது காந்திஜீ ஸ்டைலில் உட்கார வேண்டும்.

நாற்காலியில் உட்காரும் போது நன்றாகச் சாய்ந்து, நிமிர்ந்து உட்கார வேண்டும்.

அடுத்து நம் உணர்ச்சிகளை வெளிப் படுத்தும் உறுப்பு கண். பேசும் போது இந்தக் கண்களை கன்னா பின்னா என்று சுலற்றி அலையவிட்டு விகாரப்படுத்தாமல் அழகாக...அளவாக அசைத்து... குறு குறுவென்று பார்த்துப் பேசுங்கள்.

சிலர் முகத்தில் எந்தவித உணர்ச்சிகளும் இல்லாமல் பேசுவர். அப்படி இல்லாமல் பேசும் போது கைகளையும் சிறிது அசைத்து, கண்களாலும் பேசிப்பாருங்கள். உங்கள் பேச்சில் மயங்காதவரே இல்லை எனலாம்.



பிறக்கும் போதே அழகாகப் பிறந்தால் தான் அழகு என்பதில்லை. நம்முடைய நடை உடை பாவனை ஒவ்வொன்றிலும் அழகை வெளிப்படுத்தி மற்றவர்கள் நம்மை விரும்பும் படி செய்யலாம்! தட் இஸ் ஸ்டைல்!

இப்பெல்லாம் ஸ்டைலு....ஸ்டைலு தான் சூப்பர் ஸ்டைலுதான்...! என்று எல்லாரும் உங்கள் ஸ்டைலான நடவடிக்கைகளைப் பார்த்து பாடுறாங்களா?

## ( ஒரு நொடி டிப்ஸ் )

புடவையின் ஓரத்தில் எவ்வளவு சோப் போட்டுத் தேய்த்தாலும் அழுக்குப் போகவில்லையா? ஒரு தக்கரண்டி ஷம்புவை பிரஷ்ஷில் நனைத்துத் தேயுங்கள். அழுக்கு மறைந்து அந்த இடம் பளிச் சென்று இருக்கும்.

# குள்ளம் என்றால் கவலையா? மனக்கவலை இனி வேண்டாம்

உயரமான பெண்களைப் பார்த்தால், குள்ளமாக இருப்பவர்களுக்கு ஒரே தாழ்வு மனப்பான்மை வந்திடும் இல்லையா? உடல் வாகு இறைவன் கொடுத்தது. இதற்காக எல்லாம் கவலைப்படுவது வீண்.

குள்ளமாக இருப்பதால் தாங்கள் அழகாக இல்லை என்று நினைப்பது பெண்களின் தாழ்வு மனப்பான்மையை காண்பிக்கிறது.

இந்த விஷயத்துல தாழ்வுமனப் பான்மைக்கே இடம் கொடுக்கக்கூடாது.

குள்ளத்திலும் 'அழகி'யாகத் தோற்றம் அளித்துவிட்டால் பிரச்சனையில்லை பாருங்க!



**இனிச் செய்ய வேண்டியவை...**

- ★ குதிகால் உயர்ந்த செருப்பு அணிந்து சற்று ஸ்டைலாக நடவுங்கள்.
- ★ முடிந்த வரை 'பொப் நொட்' எனப்படும் உச்சிக் கொண்டை போட்டு, காதுகளில் நீளமான தொங்கட்டான்கள் அணிந்து, நெடுக்கு வாக்கில் கோடுகள் அணிந்த புடவை அணிந்தீர்கள் என்றால் கேட்கவா வேண்டும் உங்கள் அழகிற்கு....

**எல்லை மீறிய குட்டையான உருவம் உடையவர்கள்...**

- ★ 'புல் அப்ஸ்' எனப்படும் பயிற்சி செய்யுங்கள். கால் விரல்களை தரையில் ஊன்றி, குதிக் காலை உயர்த்தி, அதே சமயம் கைகளை உயரத் தூக்கி, பாதங்களைச் சம நிலைப்படுத்துவதும் ஒரு வகைப் பயிற்சிதான். இதை அன்றாடம் காலையில் ஒரு 15 நிமிடங்கள் செய்துவந்தால் சற்று உயரமாக வளர வாய்ப்புண்டு.

**இப்போ 'குஷி'யாகி விட்டீர்கள் தானே வாசகிகளே!**

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### பாதாம் டோஸ்ட்

**தேவையானவை:-**

பாண்-1இறாத்தல்
சீனி-ஒரு கப்
தேங்காய்-ஒன்று
முந்திரிப்பருப்பு-பத்து
முந்திரிகை வற்றல்-ஒரு மேசைக்கரண்டி
நெய்-கொஞ்சம்
ஏலக்காய்-நான்கு

**செய்முறை:**

பாணை சற்றுக் கனமாய் சம அளவில் துண்டுகள் செய்யவும். முந்திரிப் பருப்பு, முந்திரிகை வற்றல், ஏலக்காய் மூன்றையும் சிறிய துண்டுகளாகச் செய்து கொள்ளவும். தேங்காயைத் துருவி, அரைக்கப் தண்ணீர் சேர்த்து, சிறிது பாலூற்றி வடிகட்டி ஒரு தேக்கரண்டி சீனியைக் கலந்து வைத்துக் கொள்ளவும். முந்திரிகை பருப்பு, முந்திரிகை வற்றல், ஏலக்காய் மூன்றையும் நெய்யில் வறுத்துக் கொள்ளவும். ஒரு வெண்கலப் பாத்திரத்தில் தண்ணீர்விட்டு சீனியைப் போட்டு, கம்பிப்பாகு காய்ச்சவும். பாண் துண்டுகளை ஒரு அகலமான தட்டில் வைத்து தேங்காய்ப் பாலில் நனைத்து, முந்திரிப் பருப்பு, முந்திரிகை வற்றல், ஏலக்காய் மூன்றையும் பாண்துண்டுகள் மீது வைத்து பாகைச் சமமாக விட்டு சற்று ஊறிய பின் பரிமாறலாம்.


**பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 16**

**மகளிர் மட்டும் -பரிசுப் போட்டி-**

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


# வித்தியாச விருந்து

## குறும்பா

மனிதர்களைப் போலவே கவிதை களிலும் குறும்புக்காரக் கவிதைகள் உண்டு. சில நம்மைச் சிரிக்கச் செய்யும்; சில நம்மைப் பார்த்தே சிரிக்கும்.

ஆங்கிலத்தில் நகைச்சுவைக் கென்றே ஒரு தனி வடிவத்தை வைத்திருக்கிறார்கள்; லிமரிக் (Limarick)



லிமரிக் எப்போது, எப்படித் தோன்றியது என்பதெல்லாம் தெரியா விட்டாலும் எட்வட் லியர் என்பவர் இதைப்பிரபலப்படுத்திய பிறகு ஆங்கில இலக் கியத்தில் இதற்கென்று தனியிடம் ஏற்பட்டு விட்டது.

லிமரிக் எப்படி இருக்கும்? இது ஓர் ஐந்தடிக் கவிதை.

.....கடைசி அடி தான் முக்கியம்.

ஒரு நகைச்சுவை வெடி, அல்லது திடுக்கிடும் திருப்பம் அதில் இருக்கும்.

லிமரிக்கை மொழி பெயர்ப்பது சிரமம். அதன் வடிவமும், கொச்சை வழக்கமும் காரணம். இருந்தாலும் அதன் போக்கை காட்டுவதற்கு இரண்டு லிமரிக்குகளை மொழி பெயர்துத் தருகிறேன். என்னைக் குறை சொல்லாதீர்கள். பாதிச் சுவைதான் கிடைக்கும்.

**லைம் என்ற ஊரில் ஒரு கிழவர்**
**ஒரே நேரத்தில் மூன்று பேரை மணந்தார்**
**ஏனென்று கேட்டதற்குச்**
**சென்னார்; "ஒன்று அபத்தம்;**
**இரு தாரம் குற்றம் அல்லவா?"**

□□

**டார்ஜிலிங்கில் ஒரு கிழவர்**
**பயணம் செய்தார் ரயிலில்**
**'தரையில் துப்பாதீர்கள்' என்று**
**எழுதியிருந்தது கதவில்**
**எனவே அவர் ஜாக்கிரதையாகத்**
**துப்பினார் கூரையில்.**

லிமரிக்கை முதன் முதலில் தமிழுக்கு கொண்டு வந்தவர் ஈழத்துக் கவிஞர் மஹாகவி.

லிமரிக்குக்கு அவர் வைத்த பெயர் குறும்பா. படிக்கிறவர்கள் 'இவ்வளவு குறும்பா' என்று கேட்பார்கள்.

அவருடைய நகைச்சுவை.

நகைச்சு வையவும் செய்கிறது. சில குறும்பாக்களைப் பார்ப்போம்.

**உத்தேசம் வயது பதினேழாம்**
**உடல் இளைக்க ஆட்டம் பயின்றாளாம்**
**எத்தேசத் தெவ்வரங்கும்**
**ஏறாளாம்! ஆசிரியர்**
**ஒத்தாசையால், பயிற்சி பாழாம்.**

எவ்வளவு குறும்பு பாருங்கள்! அந்தப் 'பதினேழு' ஆடல் பயின்றது கலைக்காக அல்ல; உடல் இளைப்பதற்காம். ஆனால் அரங்கேற்ற முடியவில்லை. ஏன்? கல்வியில் 'மெய்' மறந்துவிட்டார்கள். பாவம் படிக்கப்போய் பாவம் படித்துக் கொண்டார்கள். ஆசிரியர் பருவத்தே பயிர் செய்துவிட்டார். விளைந்து விட்டது. ஆடிய கூத்தில் உடல் இளைப்பதற்கு பதில் பருத்துவிட்டது. அந்தரங்கத்தை எப்படி அம்பலம் ஏற்ற முடியும்?

இந்த வியாபார யுகத்தில் காதலுக்கும் விலை உண்டு. கல்யாணம் இங்கே ஒரு வியாபாரமாகி விட்ட கொடுமையை இந்தக் குறும்பா எவ்வளவு குறும்பாகச் சொல்கிறது பாருங்கள்;

**சொந்தத்தில் கார், கொழும்பில் காணி**
**சோக்கான வீடு, வயல்,கேணி**
**இந்தளவும் கொண்டுவரின்**
**இக்கணமே வாணியின்பால்**
**சிந்தையிழப்பான் தண்டபாணி**

புத்திசாலிக் குழந்தைகள் குறும்பு செய்வார்கள். மஹாகவியின் குறும்பாக்கள் புத்திசாலிகள்.



# தேன் கிண்ணம்





## விரித்துப்பார்

உன்னை
நினைக்கும்போது
நேரம் போகுது.
நினைத்துக்கொண்டு
தூங்கும் போது
நித்திரை சாகுது.
**
பாய் வெடித்து
மூட்டை வெளியாகி
என்–
உடம்பெல்லாம்
குத்தும் போதும்
கனவு விட்டு
ஜன்னல் வழியாக
நீ...
தெரிகிறாய்.
*
என்னை
நீ....
விரித்துப்பார்..
உன்–
பொல்லாத பெயர்
பக்கம் பக்கமாக
எழுதப்பட்டிருக்கும்.
*
**பொத்துவில் பௌர்ணமி நிலா.**



## நிகழ்வுகள்

ஓர்
காதலைத் தொலைத்துவிட்டு
நம் சந்தோசச் சந்தர்ப்பங்களின்
கதவுகள்
மூடப்படும்...

நாளை
விடியலின் அந்தியில்
அவள்
மனவெளியில்
ஓர்
புதிய உறவுக்காய்
ஒப்பந்தம் எழுதப்படும்....

புதிய உறவின் பூரிப்பில்
அவள் மனதில்
நம்
இளைய கனவுகள்
அவசர அவசரமாய்
சமாதியாக்கப்படும்..

எனக்குள்ளோ...,
நம்
நேச உறவின்
நினைவுகள் மட்டும்
ஓர்
யுகத்தின் நீடிப்பாய்
தேங்கி நிற்கும்....!!

**கற்பிட்டி முனாஸ்.**

## இதய ஆசிகள்

வானமதில் தாரகை
மனமதில் காரிகை
எண்ணக் கருக்களில்
வண்ண வடிவுகளில்.......
**
வசந்தத்தின் நறுமணம்,
மகரந்தத்தின் கருமணம்,
வாலிபத்தின் அனுபவம்,
மங்கையுன் யௌவனம்.
**
படைத்த காவியம் படிக்குமுன்,
உடைத்த காதல் கோட்டையிலே,
பறந்த கொடியே பறப்பது கண்டு,
இறந்த உடலுக்கு உயிர்கொடு.
**
ஈருடல் ஓருயிர் தத்துவ
என்னுடல் கருவுயிர் நீயே வீசிட்ட,
பாதாளத்தின் பிரஜை நானுன்
பூபாளத்திற்காய் கல்லறையில்...!
**
பாசத்தை பொழியவைத்து
மோசத்தை விளைவித்தவளே!
உயிராய் ஈரேழுலகு
பயிராய் செழிக்க
ஆசிகள் உனக்கு.
**

**இணுவில் முகுந்தன்-குவைட்.**

## இறந்த கால வசந்தங்கள்

இந்த
நிகழ்கால(க்)
கோடைகளை
என்
இறந்தகால
வசந்தங்களால்
எழுதப்போகிறேன்...
▫▫
நித்திரையில்லா
இந்த
நீண்ட ராத்திரிகளை
அவளிருந்த
நிலா ராத்திரிகளால்
இனி
நிரப்பிக்கொள்வேன்....
▫▫
இந்த
வடுக்களையும்
வருடிக் கொடுக்க
அந்த
விழிகளிடம்
மட்டும்தான்
கரங்கள்
இருந்தன....
▫▫
இந்த
சோகங்களையும்
மருட்டிவிட
அவள்
ஞாபகங்களிடம் தான்
சாகசங்கள்
உள்ளன....

**காஷிம்.பி.அகமத்-பொத்துவில்.**



## சுவிஸ் நியூஸ்

பெட்டை சுவிசில.
நல்ல உயரம்.
ஆப்பிள் நிறம்
காது கொஞ்சம்
கேளாட்டிலும்
மணியாக் கதைப்பாள்.
படிப்புக் குறைவுதான்
எண்டாலும்
பண்பு அதிகமுங்கோ
அதோட
அருமையாச் சமைப்பாள்.
சீதேவிப் பெட்டையண்ணே!
சும்மா சொல்லக்கூடாது
அவள் சிரிச்சால்
செம்பருத்தி!
சிணுங்கினால்
குண்டுமல்லி!
அவ்வளவு வடிவுங்கோ
வந்து...சீதனம்...
"சீச்சீச்சி
அந்தக் கதையே
வேண்டாமண்ணே.
சீதனம் என்டாலே எனக்கு
நஞ்சு மாதிரி.
சீதனம் வாங்கிறத விட
தற்கொலை
செய்யலாமண்ணே!
என்ற மகனை
உங்கட செலவிலதானே
சுவிசுக்கு அனுப்புறியள்
அதுக்குப் பிறகு
ஏன் அண்ணே சீதனம்?!"

**எம்.சுரேஷ்.**



## வாழ்வின் பக்கங்கள்!

கடந்து வந்த
பாதையை திரும்பிப்
பார்க்கிறேன்.
விலகிய சொந்தங்கள்,
மாண்ட உறவுகள்
மண்ணில் மண்ணாய்
மறைந்ததே நினைவில்
முள்ளாய் தைக்கும்!

வாழ்க்கைப் புத்தகத்தை
பின்னிருந்து முன்னாக
அந்தாதி நடையில்
புரட்ட
சொந்தமாகிவிட்ட
சோகங்களின் பதிவுகள்

எதிர்பார்ப்புகளுடன் சேர்ந்த
ஏமாற்றங்களின் சுமைகள்
வாழ்வின் தத்துவத்தை
வாசகமாகப் பதித்த
இரத்தக் கறைகள்!

விதி வழியே ஓடுவது
வாழ்க்கை–இங்கே
யுத்த வழியே
ஜனன மரணம்!

சாக்கடையோ–மானிட
மண் வாழ்க்கை
சகதியாய் பதியும்
பாதங்களில்
செங்கறைகள்!

நேசிக்கத் தெரியாதவர்கள்
தேசத்தை
நாசமாக்குவதும்
பாசப் பற்றுள்ளவர்கள்
தேச நலனாய்
உயிரிழப்பதுவும்
ஆயுதயுகத்தின்
நவீனமோ!?!?

செல்லாக் காசாய்ப்
போய்விட்ட
வாழ்க்கைப் புத்தகத்தில்
ஆதி அந்தங்களெல்லாம்
இனி
சோகம், கண்ணீர், துன்பம்!

**ஜொஹரா ஹுஸைன்-தியத்தலாவ.**

## நீ என் நந்தவனம்

நீ
என் நந்தவனம்!
உன் வாசம்
என் சுவாசத்தில்
உரசும் போதெல்லாம்
நான் மணம் கமழ்கிறேன்!

சின்ன
இதழ் ரோஜாக்கள்
உதிராமல்
மலர்ந்தேயிருப்பது
கண்டு மகிழ்கிறேன்!

அதை
முகரத்தான்
உன் பின்னால்
என் நகர்வுகள்!

சிவந்த
செவ்வந்தி மொட்டுக்கள்
கிள்ளிப் போகவும்
நினைத்ததுண்டு!

அதெப்படி
நீ மட்டும்
முல்லைப் பூக்களை
வரிசையாக
புன்னகையிலே காட்டுகிறாய்?

அந்தப் புதினமான
தாமரை மொட்டு
இரண்டும்
இன்னும் மலராமல்
உன்
இடைக்குமேலே
இருக்கிறதே!

நீ
என் நந்தவனம்–
வண்டாகிப்போன
எனக்கு!

நான்
உலாவ வருகிறேன்
என்
நந்தவனத்தில்!

**கே.கனகராஜா–நுவரெலியா.**

## என்னவள்

அருகில்வராத அன்னம்–அவள்
அமுதம் வழியும் தேன்கிண்ணம்
உருகித்துடிக்கும் உள்ளம்
உணர்வுகளில் காதலின் வெள்ளம்
பருக வந்த பால் நிலா
பார்த்தால் நெஞ்சில் திருவிழா
வருக என்று வழிபார்த்தேன்
வராத நிலைகண்டு நீர் சேர்த்தேன்.

வானம் நோக்கி வரம் கேட்டேன்
வனிதை அவளை விடமாட்டேன்
கானம் நூறு பாடிநின்றேன்
கன்னிமனதைக்காணச் சென்றேன்

நாணம் நங்கையில் மலராட
நதி ஒன்று கருவிழியில் பாய்ந்தோட
வேணும் என்று அவளை வேண்டுவேன்
வேண்டி நின்று காதலைத்தூண்டுவேன்.

அழகின் ஒளிவெள்ளம் ரதியோ
அதில் மயங்கிவிழுந்தது என் மதியோ
பழகும் வேளை அவள் சோலையோ
பன்னீர் சேர்த்த பள்ளியறை லீலையோ
உலகின் சுவரில் இவள் சித்திரம்–என்
உள்ளம் அதிலே பத்திரம்
வழக்கம் போல நான் அவள் பின்னால்
வளைந்து எரித்தாளோ கருங்கண்ணால்.


**கிண்ணியா சபருள்ளா**



## எங்கும் நீ

அன்பே
காதல் எனும்
தேர் ஏறி
காகிதப் பூ
உனக் கெழுதி
••
உன்னை
காணாமல் தவிக்கும்
என் உள்ளம்
கருகிக் கிடக்குதிங்கே...
••
நீ சென்ற
நாள் தொட்டு
என் இதயம்
தூங்கவில்லை!!
••
உன் நினைவே...
நான் திரும்பும்
இடம் எல்லாம்!!
உன் உருவம்
நான் பார்க்கும்
திசை எல்லாம்!!
••

**வைத்திய நாதன்-குவைத்.**




# இந்த வாரம் உங்கள் பலன்

(11.06.95 முதல் 17.06.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| இடபம் | - | சூரியன், புதன், வெள்ளி |
| சிம்மம் | - | செவ்வாய் |
| துலாம் | - | இராகு |
| விருட்சிகம் | - | வியாழன் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

சந்திரன்–துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பொருள்வரவு தடை, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், பயனற்ற செயல். | காலை 7 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, தொழில் பேறு. | பகல் 12 மணி |
| **புதன்**- அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ச்சி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வீண்குறை கேட்டல், செல்வாக்கு குறைவு. | காலை 7 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், செலவு அதிகம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| **திங்கள்**- புதிய தொழில் முயற்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- கௌரவம், தேகசுகமின்மை. | காலை 8 மணி |
| **புதன்**- வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 6 மணி |
| **வியாழன்**- காரியத் தடை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- பணக்கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன் அதிஷ்ட இலக்கம்-3**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தூர இடத் தொழில், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| **திங்கள்**- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| **செவ்வாய்**-பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், கடன் உபாதை. | காலை 7 மணி |
| **வியாழன்**- மனக்கவலை நீங்கும், காரியசித்தி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- துயர் அதிகம், இடமாற்றம். | காலை 7 மணி |
| **சனி**- வீண் குறை கேட்டல், மனக்கவலை. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், கடன் சுமை. | காலை 7 மணி |
| **திங்கள்**- முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், தொழில் நிலைப் பிரிவு. | காலை 7 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| **வெள்ளி**- வீண் மனஸ்தாபம், தனவிருத்தி. | காலை 6 மணி |
| **சனி**- செலவு மிகுதி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் நிலை மந்தம், வீண்விரயம். | காலை 6 மணி |
| **திங்கள்**- மனக்கலக்கம், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| **புதன்**- காரிய சித்தி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2**

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பணவரவு, தொழில் நிலை பேறு. | காலை 8 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, வீண் குறை கேட்டல். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- காரிய சித்தி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 9 மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- காரியத் தடை, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| **சனி**- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| **செவ்வாய்**- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். | பகல் 12 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| **வியாழன்**- மனக்கலக்கம், பயனற்ற செயல். | பகல் 12 மணி |
| **வெள்ளி**-பொருள் வரவு, காரிசித்தி. | காலை 9 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **திங்கள்**- அந்நியர் நட்பு, பணவரவு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- முயற்சி பலிதம், கௌரவம். | காலை 8 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், பிரயாசை மிகுதி. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வீண் குறைகேட்டல், கடன் தொல்லை. | காலை 8 மணி |
| **சனி**- பயனற்ற செயல், துயர் மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- துன்பம் அதிகம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- பெரியோர் நட்பு, கெரளவம். | காலை 7 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | காலை 9 மணி |
| **புதன்**- காரியச் சித்தி, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், துயர் நீங்கும். | காலை 9 மணி |
| **வெள்ளி**- மனக்கலக்கம், பணவரவு தடை. | பி.ப. 2 மணி |
| **சனி**- ஆடம்பரச் செலவு, அந்நியர் பகை. | காலை 9 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -9**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- பயனற்ற செயல், தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- அந்நியர் சகாயம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| **சனி**- வீண் குறை கேடடல், செலவு மிகுதி. | காலை 9 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட்ட இலக்கம்-7**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| **ஞாயிறு**- காரியசித்தி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, பணவரவு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனக்கசப்பு. | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| **சனி**- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 8**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| **ஞாயிறு**- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| **திங்கள்**- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| **புதன்**- காரிய சித்தி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், பணவரவு | காலை 8 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **சனி**- வீண் முயற்சி, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |


**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

-சுப்பிரமணிய பாரதியார்.



## வெல்லும் வழி



தேசம் வளர்ப்போம் வாருங்கள்!
சிந்தை இணைந்தே சேருங்கள்!
நேசம் செழிக்கும் வழியெல்லாம்!
தேசம் செழிக்கும் வழியாகும்!
(தேசம் வளர்ப்போம்)

பிறந்த நாட்டின் பெருமையினைப்
பேசிப் பேசி உறங்காமல்
சிறந்த பணிகள் நடந்திடவே
செயல்கள் வெற்றி அடைந்திடவே
(தேசம் வளர்ப்போம்)

ஒருமைப்பாட்டால் நாட்டு நலம்
உயர்ந்து வளரும் நாள்தோறும்
ஒருமைப்பாடே நல்லவழி
ஒருமைப்பாடே வெல்லும் வழி.
(தேசம் வளர்ப்போம்)

— சீரன் —

பாப்பா முரசு சிறு கதை

# அறிவுக் கூர்மை



ஓர் ஊரில் நான்கு சகோதரர்கள் இருந்தனர். சிறுவயதில் அவர்களின் தாயார் இறந்து விட்டார். தாயார் இறந்ததும் அவர்களின் தந்தை இன்னொரு திருமணம் செய்து கொண்டார்.

இவர்களின் சிற்றன்னை இவர்கள் மீது வெறுப்பைக் கொட்டினாள். சரியாகச் சாப்பாடு கொடுக்க மாட்டாள். உடுத்துவதற்குத் துணிகள் கொடுக்க மாட்டாள்.

அவர்களைப் பள்ளிக் கூடத்திற்குக் கூட அனுப்புவதில்லை. அவர்களை ஒரு நாள் வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும் என்பதிலேயே அவள் குறியாக இருந்தாள்.

சித்தியின் கொடுமைகளை அனுபவிப்பதை விட, வீட்டை விட்டு எங்காவது போய் விடலாம் என்று வீட்டை விட்டுக் கால் போனபடி சென்று விட்டார்கள்.

நான்கு சகோதரர்களும் கால்நடையாகவே நடந்து வேறு ஒரு நாட்டிற்குச் சென்றார்கள். அவ்வழியாகப் போய்க் கொண்டிருக்கும்பொழுது முதல் சகோதரன் கூறினான்.

"நமக்கு முன்னால் இந்த வழியாக ஒரு ஒட்டகம் போயிருக்கிது."

அதைக் கேட்டதும் அடுத்த சகோதரன்,

"அண்ணா! நீ சொல்வது சரிதான். இந்த வழியாக நமக்கு முன்னால் ஒரு ஒட்டகம் சென்றிருக்கிறது. அதற்கு ஒரு கால் சரியில்லை" என்றான்.

"ஆமாம்....ஆமாம்...நீங்கள் இரண்டு பேரும் சொல்வது உண்மைதான். இந்த வழியாக நமக்கு முன்னால் ஒரு ஒட்டகம் சென்றிருக்கிறது. அந்த ஒட்டகத்திற்கு ஒரு கண் தெரியாது" என்றான் மூன்றாவது சகோதரன்.

"அண்ணாமார்களே! நீங்கள் மூவரும் சொன்னதில் சிறிதும் பிசகில்லை. அத்துடன் அந்த ஒட்டகத்திற்கு வாலும் கிடையாது" என்றான் நான்கவது சகோதரன்.

இவர்கள் பேசியதை மரத்தினடியில் கவலையுடன் படுத்திருந்த ஒருவன் கேட்டான். அவனுடைய ஒட்டகம் ஒன்று காணாமல் போயிருந்தது. அதைத் தேடித் தேடிக் கிடைக்காமல் தான் அவன் கவலையோடு படுத்திருந்தான். அவனுடைய ஒட்டகத்திற்கு ஒரு கால் சரியில்லை, ஒரு கண் தெரியாது, வால் இல்லை. இதையெல்லாம் நான்கு சகோதரர்களும் சொன்னதும் அவர்கள்தான் தன் ஒட்டகத்தைத் திருடியிருக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். உடனே விருட்டென்று எழுந்து, அந்த நான்கு பேர்களையும் அவன் பிடித்துக் கொண்டான்.

"மரியாதையாக என் ஒட்டகத்தைக் கொடுத்து விடுங்கள்!" என்று சொன்னான்.

"ஐயா! நாங்கள் உங்கள் ஒட்டகத்தைத் திருடவில்லை. திருடியிருந்தாலல்லவா திருப்பிக் கொடுக்க முடியும்" என்றார்கள் நான்கு சகோதரர்களும்.

"இல்லை! நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள். வாருங்கள் அரசரிடம் போவோம். அவர் தீர்ப்புக் கூறட்டும்" என்று சொல்லி நால்வரையும் இழுத்துக் கொண்டு சென்று அரசரிடம் புகார் செய்தான்.

அரசர் நால்வரையும் விசாரித்தார். "திருடுவது மகாபாவம். அவரின் ஒட்டகத்தை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள். உங்களை மன்னித்து விடுகிறேன்" என்றார் அரசர்.

"அரசே! நாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். சிற்றன்னையின் கொடுமை தாளாமல் வீட்டை விட்டு வந்தவர்கள். கடவுள் மீது ஆணையாக நாங்கள் இவரது ஒட்டகத்தைத் திருடவில்லை!" என்றார்கள் சகோதரர்கள்.

"சரி, நீங்கள் திருடவில்லை என்று வைத்துக்கொள்வோம், எப்படி அங்க அடையாளங்களைச் சரியாகக் கூறினீர்கள்?" என்று கேட்டார் அரசர்.

முதல் சகோதரன், "அரசே! ஒட்டகம் அந்த வழியாகச் சென்றுள்ளது என்று சொன்னவன் நான் தான். எப்படி, அப்படிச் சொன்னேன் என்றால், நாங்கள் போன பாதையில் மழை பெய்து நிலம் நனைந்திருந்ததால் அதில் ஒட்டகத்தின் கால் தடங்கள் தெளிவாகத் தெரிந்தன. அதை வைத்துத்தான் அப்படிச் சொன்னேன்" என்றான்.

"ஒட்டகத்துக்கு ஒரு கால் சரி இல்லை என்று எப்படிச் சொன்னாய்?" என்று இரண்டாவது சகோதரனைப் பார்த்துக் கேட்டார் அரசர்.

அதற்கு அவன் "அரசே! ஒட்டகம் ஈரமான தரையில் நடந்த கால் தடங்களில் ஒரு கால் மட்டும் பதிந்தும், பதியாமலும் இருந்தது. அந்த ஒட்டகம் ஒரு காலை நொண்டி நொண்டி நடந்திருக்க வேண்டும். ஆகவே தான், ஒட்டகத்திற்கு ஒரு கால் சரியில்லை என்று சொன்னேன்" என்றான்.

அரசர் வியந்து, மூன்றாவது சகோதரனைப் பார்த்து, "ஒட்டகத்திற்கு ஒரு கண்ணில்லை என்று நீ எப்படிச் சொன்னாய்?" என்று கேட்டார்.

"அரசே! ஒட்டகம் சென்ற பாதையின் இரு பக்கமும் பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன. ஆனால் அந்த ஒட்டகமோ, ஒரு பக்கம் மட்டுமேயுள்ள பயிரை மேய்ந்து கொண்டே சென்றிருக்கிறது. இன்னொரு பக்கத்தை அது பார்க்கவேயில்லை. அதனால், ஒட்டகத்திற்கு ஒரு கண் இல்லை என்றேன்" என்றான் மூன்றாவது சகோதரன்.

அரசர் கேட்பதற்கு முன்பே, நான்காவது சகோதரன் தானாகவே முன் வந்து சொன்னான். "அரசே! அந்த ஒட்டகத்தின் பின்பக்கம் ஒரு புண் இருந்திருக்க வேண்டும். அந்தப் புண்ணை ஈக்கள் கடித்துக் கடித்து வழி நெடுக இரத்தம் சொட்டுச் சொட்டாக சிந்தி இருந்தது. அதற்கு வால் இருந்திருந்தால், வாலால் அடித்து ஈக்களை விரட்டியிருக்கும். அதனால்தான் ஒட்டகத்திற்கு வால் இல்லை என்றேன்."

அவர்களின் அறிவுக் கூர்மையை மெச்சி நிறைய பரிசுகளைக் கொடுத்த அரசன், தன் அவையிலேயே அவர்களை வைத்துக் கொண்டார். நான்கு சகோதரர்களும் அந்த ஒட்டகக்காரருக்குப் பணம் கொடுத்து, புதிதாக ஒரு ஒட்டகம் வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.06.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 94
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 91

பரிசுக்குரியவர்
அ. முஹம்மத் அஸாம்
ஸாஹிரா தேசிய கல்லூரி புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்

ஜெ. நளீனா
நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், சிலாபம்

சுகீத் நடேசன்
ஆண்டு-ஸ்ப். காமல் பாத்திமா தேசிய கல்லூரி கல்முனை.

சந்திரசேகரம். சக்திராஜ்
ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருகோணமலை.

தே. பிரதீபா
மட்/தளவாய் வித்தியாலயம் தளவாய் , செங்கலடி.

சிவநேசராசா- வியூரகன்
மட்/குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம், களுவாஞ்சிகுடி

வினோத் பிரசாத்
திரித்துவக் கலலூரி, கண்டி.

## வாரம் ஒரு நாடு

### சீனா-மக்கள் சீனக் குடியரசு

**அமைவிடம்:** பரந்த ஆசியக் கண்டத்தில்- தூர கிழக்கில் அமைந்த நாடு.

**பரப்பளவு:** 9,561,000 ச.கி.மீ. (3,690,550 ச.மைல்)

**மக்கள் தொகை:** 1,102,200,000.

**பேசும் மொழி:** சீன மொழி. (இம்மொழி மாண்டரின், கான்ரனீஸ் என்பன போன்ற நான்கு பிரிவுகளைக் கொண்டது. பேசும் முறையில் மாறுபட்டாலும் எழுத்து வடிவம் ஒன்றுதான்.)

**மதம்:** ஆரம்ப காலத்திலிருந்து பௌத்த மதமே இருந்த போதிலும் பின்னர் கொன்ஃபூசியானிச மதமும் டாவோவிசம் எனும் மதமும் பின்பற்றப்பட்டன. புரட்சியைத் தொடர்ந்து மத நம்பிக்கை அருகியது.

**தலைநகரம்:** பெய்ஜிங் (இந்நகரம் முன்னர் பீக்கிங் என்றழைக்கப்பட்டது. பெய்ஜிங் நகர் தவிர ஷங்காய், ரியான்ஜின் மற்றும் குவான்செள (கான்ரன்) ஆகிய பெரிய நகரங்களும் உள்ளன.

**ஆட்சிமுறை:** சமதர்மக் குடியரசு. (கம்யூசிச ஆட்சி)

**சிறப்பம்சங்கள்:** உலகில் ஆரம்ப கால நாகரிகம் அடைந்த நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். வெடி மருந்து பாவினை, அச்சுக் கலை ஆகியவை முதன் முதலில் சீனாவில்தான் தோன்றியுள்ளன. உலகிலேயே அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட சீனா, பரப்பளவில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. மன்னராட்சியே இங்கு நிலைபெற்றிருந்தது. பின்னர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்குட்பட்ட சீன வம்சாவளி அரசர்களால் ஆளப்பட்டது. ஒருசிலர் மட்டுமே படாடோபமாக வாழ, பெரும்பான்மையான மக்கள் பசியிலும் பிணியிலும் வாடினார்கள். இதனால் தலைவர் மா சே துங் தலைமையில் 1949ல் புரட்சி நடைபெற்றது. அக்டோபர் முதலாம் திகதி சீன மக்கள் குடியரசு உதயமானது.

**பொருளாதார வளம்:** சீனா அடிப்படையில் ஒரு விவசாய நாடாகும். இருப்பினும் மூல வளங்கள் அனைத்தையும் கொண்டமையினால் கைத்தொழில்கள் சிறப்பாக வளர்ச்சி கண்டன. இயந்திர சாதனங்களை அமைப்பதில் தன்னிறைவு கண்டு, பிற நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி



செய்யப்படுகின்றன.

அணு சக்தி உற்பத்தியிலும் சிறந்து விளங்கும் மக்கள் சீனம், விண்வெளி ஆய்வுகளிலும் காலெடுத்து வைத்துள்ளது.

**பார்க்கவேண்டிய இடங்கள்:** மிகப் பரந்த சீனாவில் யாத்திரீகரைக் கவரும் எண்ணற்ற அம்சங்களுடன் கூடிய பல இடங்கள் காணப்படுகின்றன. உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் இங்குதானுள்ளது.

தலைநகரான பெய்ஜிங்கில் சீன நாட்டின் வரலாற்றை எடுத்துரைக்கும் பல நூதனசாலைகள் உள்ளன. பண்டைய மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைகளை இன்றும் காணலாம். சொர்க்க ஆலயம், மக்கள் மண்டபம் போன்றவற்றுடன் தலைவர் மா சேதுங்கிற்கான நினைவு மண்டபமும் கலை அம்சங்களுடன் கூடியவை.

சீன நடனம் மற்றும் நாடகங்கள் சிறப்பான முறையில் நடாத்தப்படுகின்றன.

ஷங்காய் நகரம் நாட்டின் கிழக்கே அமைந்துள்ள துறைமுக நகரமாகும். இந்நகரை கிழக்கின் பரிஸ் நகர் என்று வர்ணிப்பார்கள். இங்குதான் பிரதானமான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. மேலைத் தேயங்களைப் போன்று இந்நகரில்தான் இரவு விடுதிகளும் கேளிக்கைக் கூடங்களும் உள்ளன.

## பாய்-பாய்-பாய்




01. காவலுக்குக் கெட்டிக்கார பாய் எந்தப் பாய்?
02. எண்ணைக் கடலில் குளிக்கும் பாய் எந்தப் பாய்?
03. தண்ணீராய்க் குடிக்கும் பாய் எந்தப் பாய்?
04. கஸ்டங்களைத் தீர்க்கும் பாய் எந்தப் பாய்?


**விடைகள்**

01. சிப்பாய். 02. துபாய்.
03. பீப்பாய். 04. உபாய்.

## அறிவோம் மனதில் பதிவோம்



**மி**ன் விசிறியைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த மின்பொறியியலாளரான வீலர். நியூயோர்க் நகரில் 1882ம் ஆண்டு வீலர் இதைக் கண்டு பிடித்தார்.



**உ**லகின் மிக நீளமான ஓவியம் 'பனோரமா ஒஃப் த மிசிசிப்பி' ஆகும். அமெரிக்காவில் உள்ள மிசிசிப்பி ஆற்றின் முழு வடிவமும் இதில் தீட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 5000அடி. உயரம் 12 அடி. 1846ல் ஜோன் போன்வேர்ட் என்பவரால் வரைந்து முடிக்கப்பட்ட இந்த ஓவியம், 1891ல் தீக்கு இரையானது



# 3 ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

திகில் கதை மன்னன்
ராஜேந்திரகுமார்

"குழந்தையைப் பிடிங்க" என்று அவசரமாக ஒப்படைத்து விட்டு எலுமிச்சம் பழத்தைத் தொடாமல் சாக்கடையில் உதிர்த்தாள்.

உள்ளே வந்து வெளிச்சத்தில் பார்த்த போது உள்ளங்கையில் ஊசி குத்திய இடத்தில் துளி இரத்தம் குபுக்கென்று வெளிவந்து உலர்ந்து மூடியது.

மெலிதாக வலித்த மாதிரியுமிருந்தது. சுகமாயிருப்பது போலவும் தோன்றியது.

அகல் விளக்கின் ஐந்து முகங்களையும் ஏற்றி விட்டு வாசலுக்கு வந்தாள். நான்கு பக்கங்களும் உயர்த்திக் காட்டி "தீபம் தீபம்" என்று சொன்னவள், நாலாவது திக்கில் காட்டிய போது-

ஐந்து திரிகளும் ஒரு சேர அணைந்து போயின. என்றுமில்லாமல் இன்று-அதுவும் பலத்த காற்று மழை கூட இன்னும் துவங்காத நிலையில்-

ஏமாற்றமாகத் திரும்பும் போது அவள் கண்களில் நீர் கோர்த்து நின்றது. "சந்திர கிரகணம் பார்க்கப் போகிறாயா? நாளைக்கு அமாவாசையில் சந்திரனே இருக்காது. அப்புறம் ஏது கிரகணம்? உள்ளே வா. நாளைக்கு சூரிய கிரகணம் தான்!

"விளக்கு அணைஞ்சு போச்சுங்க. அது ஏதோ துர்ச்சகுனம். எனக்கு ஏதோ நடக்கப் போகிறது. எண்டே பர்த்தாவே! ஏதோ நடக்கப் போகிறது."

சட்டென்று கேட்டாள். "கூப்பிட்டிங்களா?"

"இல்லையே"

"ஷோபா என்று கூப்பிட்ட மாதிரி இருந்ததே!"

சாப்பாடு பரிமாறும்போது "இதோ



வரேன்" என்று உரக்க கத்திவிட்டு வெளியே போய் நின்று யாருமில்லாமல் ஏமாந்து திரும்பினாள்.

"ஷோபா" என்றார் மாமா. "இதென்ன இலையைப் பார்த்து பரிமாறாம அடிக்கடி வெளியே போகிறே?"

"யாரோ கூப்பிட்ட மாதிரி இருந்தது." என்றாள் தடுமாற்றமாக.

படுக்கையில் திடீரென்று எழுந்திருக்கப் போனவளை அதட்டினான் சசீதரன். "என்ன உனக்குப் பைத்தியமா? ஏன் அடிக்கடி எழுந்து ஓடறே?"

"கூப்பிடறாங்க. யாரோ கூப்பிடறாங்க"

"முட்டாள் பெண்ணே! யாரும் கூப்பிடல்லே" அவளை இழுத்துப் படுக்க வைத்து அணைத்துக் கொண்ட போது-

விலகிப் போய் தரையில் படுத்தாள். "இன்றைக்கு தீட்டுப்படக் கூடாது."

"ஏன்?" என்றவனுக்கே தெரிந்தது. "ஓ..! நாளைக்கு அமாவாசை தர்ப்பணமிருக்கா?. சரி, சரி. அங்கேயே படு. எழுந்து ஓடாதே" என்று திரும்பிப் படுத்தவன் தூங்கிப் போய்விட்டான். குழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது.

வெளியே ஹாலில் மாமாவின் குறட்டையொலி, விட்டு விட்டுக்கேட்டுக் கொண்டிருந்தது.

"ஷோபா!"

திக்கென்று கண்களைத் திறந்தாள்.

"வா" என்ற அழைப்பு "வா... ஆ.. ஆ.... ஆ....என்று" எதிரொலித்துக் கொண்டே தேய்ந்து மறைந்தது.

"ஷோபா..... ஆ... ஆ.... ஆ..."

மெல்ல எழுந்தாள். முடியாத நிலையுடன் நடந்தாள். படுக்கையறைக் கதவைத் திறந்து வெளியேறினாள்.

ஹாலில் மாமாவைக் கடந்து போய் வராண்டா கதவைத் திறந்து வெளியேறி சாத்திய கதவைத் திறந்த போது தான்-

காற்றின் வேகமும் சூறாவளி மழையும் போட்டியிட்டு விளையாட-

தொலைவில் அவள் தெரிந்தாள்.

அதே பெண்!

இவளைப் பார்த்துச் சிரித்துக் கைகளை நீட்டினாள். "வா!"

மெல்ல மழையில் இறங்கி நடந்தாள் ஷோபா.

அவள் கையைப் பற்றிக் கொண்டு நடந்தாள். நடந்து கொண்டேயிருந்தாள்.

மறு நாள் வீட்டில் ஷோபாவைத் தேடினார்கள்.

உறவுக்காரர்களை விசாரித்தார்கள்.

**இதுவரை நடந்த கதை............**

**கிங்ஸ்லி ஒரு மனோதத்துவ நிபுணர். அவரது ஸ்டெனோ மெரிலீன். கிங்ஸ்லீயைச் சந்திக்க வருகிறாள் ஒரு பெண். அவள் பெயர் தேவி. அவள் ஆவியுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவள். ஒரு ஆளைக் கண்டுபிடிக்க உதவுமாறு கிங்ஸ்லீயிடம் உதவி கேட்கிறாள். அவள் கண்டுபிடிக்கச் சொன்னது நூறு வருஷமாகியும் இன்னமும் உயிரோடு உள்ள ஒரு நபரை! அவளது பிரச்சனையை அறிய மெஸ்மரிச தூக்கத்தில் அவளை ஆழ்த்துகிறான் கிங்ஸ்லீ. நூறு வருஷத்திற்கு முன் நடந்த கதையை சொல்லத் தொடங்குகிறாள் தேவி!**

**ஷோபா என்னும் பெண். ஒரு குழந்தையும் இருக்கிறது. கணவனோடு சந்தோசமாக இருந்த ஷோபாவின் வீட்டுக்கு வருகிறாள் ஒரு பெண். என்ன வேண்டும் என்று ஷோபா கேட்கிறாள். 'நீ' வேண்டும் என்கிறாள். அவள் பார்வையே அச்சம் தருகிறது. கோவிலுக்கு கணவனோடும், குழந்தையோடும் சென்றுவந்த ஷோபாவை அவள் பின்தொடர்கிறாள். அதனைக் கணவனுக்குச் சொல்ல அவன் கண்ணுக்கு அவள் தெரியவில்லை.**

**வீட்டுக்கு வந்த ஷோபாவிற்கு திண்ணையில் உள்ளங்கையில் ஊசியொன்று குத்துகிறது. அது எலுமிச்சம் பழத்தில் குத்திவைத்த ஊசி! இனி......**

ரொம்ப தொலைவுக்குப் போய் பொலிஸிலும் புகார் செய்தார்கள்.

நேரமாக ஆகத்தான் விபரீதமாகத் தோன்றியது அவள் கணவனுக்கு.

முதல்நாள் அவள் சொன்னவற்றை மீண்டும் மீண்டும் நினைத்து மிகவும் பயந்தான்.

அப்பாவிடம் பேசினான். அவரும் குழம்பினார்.

படுக்கையறையிலிருந்த பெண் காணாமல் போவதாவது? இந்த ஊரில் இப்படியொரு கேடா வருகிறது?

மாலை மயங்கப் போகும் நேரத்தில் தான் செய்தி வந்தது. காட்டில் வேட்டைக்குப் போன ஒரு வெள்ளைக்கார துரை வந்து 'யாரோ ஒரு பெண்ணைக் கழுத்து வரை புதைத்திருக்கிறார்கள்' என்றாராம்.

அவசரமாக போய்ப் பார்த்தவர்கள் அலறி விட்டார்கள்.

ஷோபா தூங்குவது போல கண்களை மூடி இருந்தாள்.

"ஷோபா" என்று தொட்டதும்-தலை மட்டும் உருண்டு வந்தது.

பள்ளம் தோண்டி உடலைத் தேடினார்கள்.

கடைசி வரை அந்த ஷோபாவின் உடம்பு கிடைக்கவேயில்லை என்று தேவி கதையை முடித்த போது.

பெரிதாக அலறினாள் மெரிலீன்.

"ய்யூ" அதட்டினேன். (நான் கிங்ஸ்லீ) எப்பவோ நூறு வருஷத்துக்கு முந்தி நடந்த கொலைக்கு இப்ப ஏன் அலர்றே?"

"இல்லே பாஸ். இவங்க கதை சொன்ன விதம் என்னை அலற வச்சுட்டது. அப்பா! என்ன ஒரு பயங்கரம்! கழுத்து வரை புதைச்சிருக்காங்கன்னு நினைச்சுத் தொட்டா தலை துண்டாக உருண்டு-யாவ் வ்வ்வ்" என்று நீளமாக அலற-

அதட்டினேன்.

"ஷட் அப். அவ சொன்னதைக் கேட்டே அலறினே. இப்ப ஏன் நீயே அதைச் சொல்லி அலர்றே?"

இரண்டு உள்ளங்கைகளாலும் கன்னத்தைத் தாங்கி தோள்களைக் குலுக்கினாள்.

"ஹா கமின்" என்றவன், திக்கென்று விழித்தவாறு தேவியைத் திரும்பிப் பார்த்தான். "தேவி-இதெல்லாம் உனக்கெப்படி தெரியும்? எல்லாம் நேரே இருந்து பார்த்த மாதிரியே சொல்றியே. ஒரு வேளை நீ-"

அந்த தேவியின் கால்களை ஆராய்ந்தான்.

"இல்லே. நீ அவளோட பேய் இல்லே. ஆனா அந்தப் பெண்ணோட ஆவிதான் உனக்கு இதெல்லாம் சொல்லிச்சு"

"ஆவ் ஆவ்....ஆவ்......"

"சீக்கிரம் ஆவின்னு சொல்லி முடி!" (மேலே கதை நகராமல் நிக்குது பாரு)

"எங்கே சந்திச்சே, அவ்வளவு பழைய ஆவியை?"

"ஆவியுலக ஆராய்ச்சியிலே எனக்கு ஆர்வம் அதிகம். நானும் என் சிநேகிதிகளும் அடிக்கடி பேசுவோம். சுவாரசியமான ஆவிகள் எல்லாம் குறுக்கே வரும். ஒரு தடவை லாரல் ஹார்டியோட கூட பேசினோம். அப்பப்பா! நல்ல காமெடி. நாலு நாளைக்கு விடாம சிரிச்சோம்."

"என்ன ஜோக் சொன்னார்?"

"மெக்ஸிகோ வண்ணாத்தி ஜோக்"

"ஐயோ சொல்லேன். ரொம்ப நாளாகவே கேட்க ஆசை-ப்ளீஸ்!"

"மெக்ஸிகோவில் ஒரு வண்ணாத்தி குனிஞ்ச நிலையில் துணி துவைச்சுக் கிட்டிருக்.... வேண்டாம். சுஜாதா வெளியிடாம பாதுகாப்பாக வைச்சிருக்கிற ஜோக். நான் சொன்னா திட்டுவாரு."

"அவர்கிட்டே சொல்லமாட்டேன்"

"ஆனா அவரு படிச்சுப் பார்த்துத் திட்டுவாரே"

"சரி, சரி. அரட்டை பேசாதே. கதை நகராம ஒரேயிடத்தில் நொண்டியடிக்கிறது பாரு. நீ சொல்லு என்ன நடந்ததாம்?"

மெரிலீன் இரண்டு விரல்களையும் காதில் பொருத்திக் கொண்டாள்.

"அவள் எதையும் சரியாகப் புரிஞ்சுக்கிற நிலையில இல்லையாம். கடைசி ஒரு நிமிஷத்திலே தான் அந்த ஆணழகன் தோற்றம் தெரிஞ்சுதாம். அதுக்குள்ளே கழுத்திலே வெட்டு விழுந்ததாம்.

தன் தலை துண்டாகி விழுந்ததையும், கழுத்து வழியாக பீறிட்ட இரத்தத்தை எதிரேயிருந்த பயங்கர காளி சிலைக்கு அபிஷேகம் செய்ததையும் காற்றில் மிதந்தபடியே பார்த்தாளாம்,"

சட்டென்று மெரிலீனை திரும்பிப் பார்த்தேன்.

மிகவும் சாதாரணமாகவே தெரிந்தாள். "ஆச்சா?"

"கொஞ்சமிருக்கு" என்று ஜாடையில் சொல்ல-மேலும் காதில் விரல்களை அழுத்திக் கொண்டாள்.

"தலையை மட்டும் அந்தப் பெண் தூக்கிக் கொண்டு போக உடம்பு அங்கேயே இருந்தது.

இரண்டு நாள் கழிச்சுத்தான் அந்த ஆண் அழகன் அதைத் தூக்கிப் போய் தன்னந்தனியாகப் புதைச்சான்.

கிரியை செய்ய உடம்பைத் தேடிப் பார்த்தவங்க கிடைக்காமல் போகவே,வெறும் தலையை வைச்சே தகனம் நடத்திட்டாங்க.

பொலிஸ் எவ்வளவோ முயற்சி செய்தும் எதுவும் செய்ய முடியலே. ஒரு வருஷம் கழிச்சு வேற வழியில்லாம கேஸ் ஃபைலை மூடி மூட்டைகட்டித் தூக்கி வைச்சுட்டாங்க."

"அப்புறம்?"

"சில வருஷங்கள் வரை எந்த அசம்பாவிதமுமில்லாம இருந்தது."

அப்புறம் ஒரு வருஷம்-

அதே கேரள கிராமத்தில்-

அதே மாதிரியான சூரிய கிரகணமும் அமாவாசையும் சேர்ந்து வந்த அபூர்வமான நாளில்தான்....."

"என்ன?"

"அந்த இரண்டாவது கொலை நிகழ்ந்தது-பயங்கரமாக."

"பாஸ்" மெரிலீன் கிளம்பினாள். "நான் போகட்டா?"

"ஏய் இரு. கதையைக் கேட்டுட்டுப் போயேன்."

"எல்லாம் நீங்க கேட்டாலே போதும். நாளைக்கு கதைச்சுருக்கம் சொல்லுங்க."

"நகராதே! மீறி நகர்ந்தே!.....?"

"நகர்ந்தா.....? என்னவாம்?"

"இன்ஸ்டண்ட்லி யூ ஆர் டிஸ்மிஸ்"

"ஓ! நோ. பாஸ்!"

"அப்ப உட்கார்ந்து கதையைக் கேளு. சிட்டவுன்"

"சொல்லும்மா, பேய்க்கதை மன்னியே" என்றாள் பொத்தென்று சோபாவில் அமர்ந்து. "ஒன்று மட்டும் நிச்சயம்!"

"என்ன?"

"கேளரத்தில் வயநாடான் தம்பான் என்கிற ஆள் இப்படித்தான் நிறையக் கொலை செய்ததாகக் கதையுண்டு. கேள்விப் பட்டிருக்கேன். அதைத்தான் சினிமாக்காரங்க மாதிரி உல்டா பண்ணினாயாக்கும்?"

"ஒரு வகையில ஒற்றுமையிருந்தாலும் இது வேறு கதை. அதில் அந்த வயநாடான் தம்பான் தோற்றுப் போனான். ஆனால் இதில் இந்த நபர் ஜெயித்து விட்டார். அவன் இப்போதும் உயிரோடு இருக்கிறான்."

"அவன்...?"

"அவளாகவும் இருக்கலாம்!"

"இருக்கலாம் அதனால்தான் கவனமாக பொதுவாக "நபர்" என்றே குறிப்பிடறேன். அதே வாலிபத்தோடு."

"இத பாரும்மா, இதுவரை ஏதோ சினிமாக்காரங்களுக்குக் கதை சொல்கிற மாதிரி சொன்னே. சரி. உன் மனநிலையை ஆராயத்தான் கேட்டேன். நீ என்ன நிஜமாகவே என்னை முட்டாளாக்கப் பார்க்கறே?"

"ஏன் சார்?"

"அந்தக் கொலைகாரன் உயிரோட இருக்கான்னு சொன்னே. சரி. இப்ப சொன்னே பாரு அதே இளமையோட அதைத்தான் என்னால சரியா ஜீரணிக்க முடியல!"

"அதுக்கு காரணமிருக்கு சார்."

"என்ன காரணம்?"

"குறிப்பிட்ட அமாவாசையும் சூரிய கிரகணமும் சேர்ந்து வருகிற நாளில் காளிக்கு நரபலி கொடுத்தால் இளமை நிரந்தரமாக இருக்குமாம்."

அதற்காகவே அவன் செய்த கொலைகளில் இரண்டாவது-லக்ஷ்மம்மா!

தெலுங்குப் பெண். கேரளத்து அப்புண்ணி என்கிற பணக்காரர் அவள் அழகில் மயங்கிப் போய் முதலில் கான்குபைனாக வைத்திருந்து மனைவி செத்ததும்-

அந்த மனைவி ஸ்தானத்தை இவளுக்குக் கொடுத்தார்.

திடீரென்று வந்த பகட்டான வாழ்க்கை.

தலைகால் புரியவில்லை அந்த லக்ஷ்மம்மாவுக்கு. அனேகமாக கேரளவிலிருந்து சென்னை வந்து பிளேன் ஏறி உலகத்தைச் சுற்றி வந்த முதல் பெண் அவளாகத் தானிருக்கும்.

துணிச்சல் மிக அதிகம்.

ஒரு தரம்-

சமையல் கட்டுக்குள் சரசரவென்று வந்த நாக பாம்பை சட்டென்று வாலைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றி அதன் எலும்புகளை நொறுங்க வைத்துத் தூக்கி எறிந்து சோப்பு போட்டுக் கையைக் கழுவியவள்.

அப்புண்ணிக்குச் சொந்தமான தோட்டங்களின் மேற்பார்வை இவள் கீழே வந்தது.

அவரை ஏமாற்றிய தொழிலாளர்கள் இப்போது ஏமாற்றப் பயந்தார்கள். அவளுக்குத் தெரியாமல் தோட்டத்திலிருந்து ஒரு பலாப் பிஞ்சோ, நேந்திரம் பழசீப்போ கூட வெளியே போக முடியாது.

அவ்வளவு தூரம் அவள் கண்களில் சக்தி அதிகம்

"நேந்திரம் பழம் வேணுமானால் கேள். பாதி விலைக்குத் தருகிறேன். இலவசமாகவும் தரமாட்டேன்; திருடிப் போகவும் விடமாட்டேன்" என்பாள் கறாராக.

அவ்வளவு கண்டிப்பும் கறாருமிருந்தும் அவளிடமும் ஒரு சிறு பலஹீனமிருந்தது.

□□

லக்ஷ்மம்மாவின் கூர்மையான பார்வைக்கு அந்த வாலிபன் நெளிந்தான்.

"கேள்விப்பட்டது நிஜமா? சொல்லு. ஒண்ணா, இரண்டா? பதினாலு மூட்டை அரிசி காணோம். நீ தான் திருடியிருக்கணும்னு மனேஜர் சொன்னர்!"

"இல்லேம்மா. நானில்லேம்மா"

"பொய்! அரிசியை வாங்கினவன் கொடுத்த பணம்கூட உன் மடியில தானிருக்கு"

"இல்லேம்மா."

"நம்ப மாட்டேன். சோதனை செய்ய வேண்டும்."

"தம்புராட்டி" என்று தீனமாக அலறினான். அவனுக்கே தெரியும். அவள் சோதனை செய்யும் விதம்.

உள்ளே கதவடைத்ததும்-

அவள் பார்வைபடுமிடத்திலிருக்கும் துணிகளையெல்லாம் கழற்றி எறிய வேண்டும். கடைசி துண்டுவரை இழந்து-

அந்நியப் பெண்ணின் முன்னால் பிறந்த மேனியாக நின்று ஆயிரம் ஊசிகள் குத்தியது போன்ற உணர்வுடன் கூசிக் குறுகி-

இப்போது இன்னொரு அதிர்ச்சி.

அவள் ஒன்று ஒன்றாக அவனை விட்டே நீக்கச் சொல்லிப் பிறந்த மேனி கோலத்துக்கு மாறி-

வெளியே வரும்போது சக்கையாகி வருவான்.

"ஜாக்கிரதை! நாலு சுவற்றுக்குள் நடந்தது மூன்றாவது மனிதனுக்குத் தெரிந்தால்? இரண்டில் ஒன்று தான் நடக்கும். ஒன்று போலிஸ் உன் தோலையுரிக்கும். இல்லே மண்ணுக்குள் புதைக்கப்படுவாய் உயிரோடு."

எந்த அடிமையும் வாய் திறக்க மாட்டான்.

உண்மைகள் சேற்றில் புதையும்.

*(தொடர்ந்து வரும்)*

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-பிரான்ஸின் அன்டனி
வயது:-20
முகவரி:-புனித லூசியாள் தேவாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
பொ.போ:-கதைப் புத்தகம், பேனாநட்பு, முத்திரை சேகரித்தல்.

பெயர்:-எம். இஸ்ஸதீன்
வயது:-24
முகவரி:-P.O.BOX.-41741, CODE NO-85 858, JALEEB AL SHUYOUKH, KUWAIT.
பொ.போ:-பேனா நண்பர் தொடர்பு.





பெயர்:-செல்வி.எம். வசந்தி
வயது:- 24
முகவரி:-பத்தலமலை, மஹாயவ, பிம்புவ.
பொழுது போக்கு:-பத்திரிகை, வானொலி கதைப்புத்தகம்.

பெயர்:-எம். இக்பால்
வயது: 20
முகவரி: 322, நீரல்ல பாடசாலை, அக்குறணை.
பொ.போ:- நண்பர் தொடர்பு, வானொலி, பத்திரிகை.





பெயர்:-கே. குசைமா
வயது:-18
முகவரி:-24 ஆர் .10. முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுது போக்கு:-பத்திரிகை,வானொலி.

பெயர்:-என், ரவிதரன்
வயது:-15
முகவரி:- பிரதான வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை.
பொ.போ:-பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி.

பெயர்:-எஸ். ஜாக்கீர்
வயது:-23
முகவரி:-16, பள்ளி வீதி, மாத்தளை.
பொழுது போக்கு:-பத்திரிகை, வானொலி, ஓவியம் வரைதல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 28

## மக்சீம் கார்க்கி

# தாய்

மடியிலே ஒரு ஜோல்னாப்பையோடு உட்கார்ந்திருந்த தொளதொளத்த முகம் படைத்த ஒரு தடித்த பெண்பிள்ளை பேசத் தொடங்கினாள்: "உங்களுக்குச் சங்கதி தெரியுமா? இன்றைக்குக் காலையில் தேவாலயத்தில் பிரார்த்தனை நடந்த போது, பாதிரியார் ஞானப் பாடல் பாடுகின்ற பையன் ஒருவனின் காதைத் திருகி னாராம்!"

"அந்தப் பையன்களும் சுத்தப் போக்கிரிப் பயல்கள்!" என்று ஒரு வயதான கனவான் பதில் சொன்னார். அவர் உடுத்தியிருந்த உடையைப் பார்த்தால், அவர் யாரோ ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மாதிரி இருந்தது.

குட்டைக் கால்களும், நெட்டைக் கைகளும், துருத்தி நீண்ட மோவாயும் வழுக்கைத் தலையும் கொண்ட சித்திரக் குள்ளப் பிறவியான ஒரு மனிதன் அந்த அறைக்குள் நிலைகொள்ளாமல் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். இடையிடையே உடைந்து கரகரத்த குரலில் ஏதேதோ உத்வேகத்தோடு பேசிக் கொண்டான்:

"விலைவாசியோ விஷம் போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. மனிதர்களோ வரவர மோசமாகிக்கொண்டே வருகிறார்கள். இரண்டாம் தரமான மாட்டுக் கறியின் விலைகூட பவுண்டுக்கு பதினான்கு கோபெக்காம்! ரொட்டி விலையோ இரண்டரைக் கோபெக்குக்கு ஏறிப்போய்விட்டது....."

இடையிடையே கைதிகள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக, சாம்பல் நிறமான ஆடையும் கனமான தோல் செருப்புக்களும் அணிந்திருந்தார்கள். மங்கிய ஒளி நிறைந்த அந்த அறைக்குள்ளே நுழைந்தவுடன் அவர்கள் திருகத்திருக விழித்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு காலில் விலங்குகள் பூட்டப்பட்டிருந்தன.

சிறையின் சகல சூழ்நிலையுமே, விபரீதமான அமைதியுடனும், விரும்பத்தகாத எளிமையுடனும் இருந்தது. தங்களது நிர்க்கதியான நிலைமையை அவர்கள் வெகுகாலத்துக்கு முன்பே ஏற்றுப் பழகி மரத்துப் போய்விட்டவர் போலவே தோன்றினர். சிலர் தங்கள் சிறைத்தண்டனையைப் பொறுமையோடு அனுபவித்தார்கள். சிலர் உற்சாகமே அற்று சோம்பியுறங்கிக் காத்து நின்றார்கள். இன்னும் சிலர் ஒழுங்காக வந்திருந்து, உற்சாகமோ விருப்பமோ அற்று, கைதிகளைப் பார்வையிட்டுக் கொண்டு சென்றார்கள். தாயின் உள்ளமோ பொறுமையிழந்து துடித்துத் தவித்தது. அவள் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை எதுவுமே புரியாமல் பார்த்துக் கொண்டாள். அங்கு நிலவிய சோகமயமான எளிமையைக் கண்டு வியந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் சுருங்கிய முகமும், இளமை ததும்பும் கண்களும் கொண்ட முதியவள் ஒருத்தி இருந்தாள். அவள் தனது மெலிந்த கழுத்தைத் திருப்பி, பிறர் பேசிக் கொள்வதையெல்லாம் காதுகொடுத்துக் கேட்டாள். கண்கள் படபடக்க அவள் ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் யாரைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்?" என்று பெலகேயா அவளை நோக்கி மெதுவாய்க் கேட்டாள்.

"என் மகனை! அவன் ஒரு கல்லூரி மாணவன்" என்று உரக்க பதில் அளித்தாள் அந்தக் கிழவி: "நீங்கள்"

"மகனைத்தான். அவன் ஒரு தொழிலாளி"

"அவன் பேரென்ன?"

"பாவெல் விலாசவ்."

"கேள்விப் பட்டதே இல்லை. உள்ளே வந்து ரொம்ப காலமாகிறதோ?

"சுமார் ஏழுவாரமிருக்கும்."

"என் மகன்-அவன் வந்து பத்து மாசமும் முடியப் போகிறது" என்றாள் அந்த முதியவள். அவளது குரலில் ஏதோ ஒரு பெருமிதம் தொனிப்பதாக பெலகேயாவுக்குத் தோன்றிற்று.

"ஆமாம், ஆமாம்" என்று அந்த வழுக்கைத் தலைக் கிழவன் சளசளக்கத் தொடங்கினான். "மனிதர்களுக்குப் பொறுமையே போய்விட்டது. எல்லோரும் எரிந்து பேசுகிறார்கள். ஒவ்வொருவரும் சத்தம் போடுகிறார்கள். விலைவாசியோ மேலே மேலே போகிறது. ஜனங்களோ அதற்குத் தக்கபடி நாளுக்கு நாள் நலிந்து வருகிறார்கள்; இவற்றுக்கு ஒரு முடிவுகாண எவனுமே முன்வரக் காணோம்!"

"நீங்கள் சொல்வது ரொம்பச் சரி" என்றான் அந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி; "ஒழுங்கீனம்!" கடைசி கடைசியாக 'போதும் நிறுத்து' என்று கத்தத்தான் வேண்டும். அந்தக் குரல், அந்தச் சக்திவாய்ந்த குரல்தான் இன்று நமக்குத் தேவை...."

ஒவ்வொருவரும் இந்த சம்பாஷணையில் கலந்து கொண்டார்கள். அவர்களது பேச்சு உயிர்பெற்று ஒலித்தது. எல்லோரும் வாழ்க்கையைப் பற்றிய தம் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டுமென்பதில் பேரார்வம் காட்டினார்கள்; எனினும் அவர்கள் அனைவருமே தணிந்த குரலில்தான் பேசிக்கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டது அனைத்தும் தனது கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதைத் தாய் உணர்ந்து கொண்டாள். வீட்டில் இருந்தவர்கள் அந்த மனிதர்களைவிட எவ்வளவு உரத்தும் தெளிவாகவும் எளிதாகவும் பேசிக்கொள்வார்கள்....

சதுரமாய்க் கத்தரித்து விடப்பெற்ற சிவந்த தாடியோடு கூடிய ஒரு கொழுத்த சிறையதிகாரி வந்தான். அவளது பேரைச்சொல்லிக் கூப்பிட்டான். அவளை அவன் ஏற இறங்கப் பார்த்தான். பிறகு கெந்திக் கெந்தி நடந்துகொண்டே சொன்னான்:

"என் பின்னால் வா."

அந்தச் சிறையதிகாரி முதுகைப் பிடித்துத் தள்ளி அவனைச் சீக்கிரம் முன்னேறி நடக்கச் செய்ய வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

பாவெல் ஒரு சின்ன அறையில் முகத்தில் புன்னகை தவழ, கைகளை நீட்டியவாறே நின்றான். அவள் அவன் கையைச் செல்லமாகப் பற்றிப் பிடித்தாள்; சிறுகச் சிரித்தாள்; படபடவென்று இமைகொட்டிப் பார்த்தாள்.

"நலமா? நன்றாயிருக்கிறாயா?" என்றாள் அவள். அவளுக்குப் பேச வார்த்தையே கிடைக்கவில்லை. தடுமாறிக் குழறினாள்.

"அம்மா, நிதானப் படுத்திக்கொள். பொறு" என்று அவளது கையைப்பற்றிப் பிடித்தவாறு சொன்னான் பாவெல்.

"இல்லை. நான் நன்றாய்த்தான் இருக்கிறேன்."

"உன் அம்மாவா?" என்று பெருமூச்சுடன் கேட்டான் சிறை அதிகாரி. பிறகு அவன் பலமாகக் கொட்டாவி விட்டு விட்டு, "நீங்கள் இரண்டு பேரும் கொஞ்சம் விலகி விலகி நில்லுங்கள். இடையிலே கொஞ்சம் இடம் இருக்கட்டும்" என்றான்.

பாவெல் அவளது ஆரோக்கியத்தைப் பற்றியும் வீட்டு விஷயங்களைப் பற்றியும் விசாரித்துக் கொண்டான். அவள் வேறு பல கேள்விகளை எதிர்பார்த்தாள். அந்தக் கேள்விகளை எதிர்நோக்கி அவன் கண்களையே வெறித்து நோக்கினாள். ஆனால் பயனில்லை. அவன் எப்போதும் போலவே அமைதியாக இருந்தான். கொஞ்சம் வெளுத்துப் போயிருந்தான். அவனது கண்கள் முன்னைவிடப் பெரிதாகியிருந்தன போலத் தோன்றின.

"சாஷா உன்னை விசாரித்தாள். தன்னை மறந்துவிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டாள்" என்றாள் தாய்.

பாவெலின் கண்ணிமைகள் துடித்தன; முகம் தளர்வுற்றது. அவன் புன்னகை செய்தான். தனது இதயத்தில் திடீரென ஒரு குத்தலான வேதனை ஏற்பட்டது போலத் தாய் உணர்ந்தாள்.

"அவர்கள் உன்னைச் சீக்கிரம் விட்டு விடுவார்கள் என்று கருதுகிறாயா?" என்று எரிச்சலோடும் துயரத்தோடும் கேட்டாள் அவள். "எதற்காக அவர்கள் உன்னைப் பூட்டிப் போட்டிருக்கிறார்கள்? அந்தப் பிரசுரங்கள் தான் மீண்டும் தொழிற்சாலையில் தலை காட்டித் திரிகின்றனவே!" என்றாள்.

பாவெலின் கண்கள் பிரகாசமடைந்தன.

"உண்மையாகவா?" என்று உடனே கேட்டான்.

"ஏய்! இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் இங்கே பேசக்கூடாது. உங்கள் குடும்ப விஷயம் ஒன்றை மட்டும் தான் நீங்கள் பேசலாம்" என்று தூங்கிவழியும் குரலில் சொன்னான் சிறையதிகாரி.

"இது குடும்ப விஷயமில்லையா?" என்று எதிர்த்துக் கேட்டாள் தாய்.

"இதற்கு பதில் ஒன்றும் சொல்ல முடியாது. அதை இங்கு பேசக்கூடாது, அவ்வளவுதான்" என்று அலட்சியமாகச் சொன்னான் அவன்.

"சரி, நீ வீட்டு விஷயங்களையே சொல்" என்றான் பாவெல். "நீ என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

அவள் தனது கண்களில் இளமையின் குறுகுறுப்பு பளிச்சிட்டு மின்ன, அவனுக்குப்பதில் சொன்னாள்:

"நானா? நான்தான் அந்தச் சாமான்களை யெல்லாம் தொழிற்சாலைக்கு கொண்டுபோய்க் கொடுக்கிறேன்..."

அவள் பேச்சை நிறுத்தினாள். பிறகு சிறு சிரிப்புடன் மீண்டும் பேசினாள்:

"முட்டைகோஸ் சூப்பு, சேமியா-இந்த மாதிரிச் சாமான்களையெல்லாம் மரியா செய்து தருகிறாள். மற்றசரக்குகளும்...."

பாவெல் புரிந்துகொண்டுவிட்டான்; அவன் தன் கையால் தலைமயிரைக் கோதிவிட்டுக்கொண்டான். பொங்கிவந்த சிரிப்பை உள்ளடக்கிக் கொண்டான்.

"பரவாயில்லை. நீ சும்மா இராமல் சுறுசுறுப்போடு வேலை செய்வதற்கு இது ஒரு அருமையான உத்தியோகம்தான். 'அப்படியென்றால், உனக்குத் தனியாயிருக்கவே நேரமிராதே" என்று அவன் அன்பு ததும்பச் சொன்னான். அந்தப் பரிவு நிறைந்த குரலை அவள் அதற்குமுன் அவனிடம் கேட்டதே இல்லை.

"அந்தப் பிரசுரங்கள் மீண்டும் தலைகாட்டியவுடன், அவர்கள் என்னைக் கூடச் சோதனை போட்டுவிட்டார்கள்" என்று கொஞ்சம் தற்பெருமையுடனேயே அவள் சொல்லிக்கொண்டாள்.

"ஏய்! மீண்டும் அதையா பேசுகிறாய்?" சினந்துபோய்ச் சொன்னான் சிறை அதிகாரி. "அதைத்தான் பேசக்கூடாது என்று ஒரு முறை சொல்லிவிட்டேனே. ஒரு மனிதனை எதற்காகச் சிறையில் அடைக்கிறார்கள்? வெளியில் நடப்பது என்ன என்பது அவனுக்குத் தெரியக்கூடாது என்பதற்குத்தானே. நீயோ அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய். ம்...? எது எதைப் பேசக்கூடாது என்பது இன்னுமா தெரியவில்லை?"

"போதும் அம்மா" என்றான் பாவெல். "மத்வேய் இவானவிச் மிகவும் நல்லவர். அவரைக் கோபமூட்டுவதில் அர்த்தமே இல்லை. நாங்கள் நெருங்கிய நண்பர்கள். நீ வந்த சமயத்தில் இவர் இருந்ததே ஒரு நல்லகாலம். வழக்கமாக, இவருடைய மேலதிகாரிதான் இருப்பான்."

"சரி நேரமாய்விட்டது" என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தவாறே சொன்னான் சிறையதிகாரி.

"ரொம்ப வந்தனம், அம்மா. கவலைப்படாதே. என்னைச் சீக்கிரம் விடுதலை செய்துவிடுவார்கள்" என்றான் பாவெல்.

அவன் அவளை ஆர்வத்தோடு அணைத்து முத்தமிட்டான். அவனது அரவணைப்பினால் உள்ளம் நெகிழ்ந்து ஆனந்தப் பரவசமாகி வாய்திறந்து கத்திவிட்டாள் தாய்.

"சரி போதும், புறப்படு" என்று சொன்னான் சிறையதிகாரி. பிறகு அவளை வெளியே அழைத்துவரும்போது அவளிடம் லேசாய் முணுமுணுத்தான்: "அழாதே, அவர்கள் அவனை விட்டுவிடுவார்கள். எல்லோரையுமே விட்டுவிடுவார்கள். வரவர இங்கே கூட்டம் தான் பெருத்துப் போயிற்று."

வீட்டுக்கு வந்தவுடன் அவள் ஹஹோலிடம் எல்லாவற்றையும் சொன்னாள். சொல்லும்போது அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது, புருவங்கள் துடிதுடித்தன.

"நான் அவனிடம் அதை எவ்வளவு சாமர்த்தியமாகச் சொன்னேன், தெரியுமா? அவன் அதைப் புரிந்து கொண்டு விட்டான். அவனுக்குப் புரிந்திருக்கத்தான் வேண்டும்" என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தாள். "இல்லையென்றால் அவன் என்னிடம் அத்தனை அன்பு காட்டியிருக்க மாட்டான். அவன் அப்படிக் காட்டிக் கொண்டதே இல்லை."

(தொடர்ந்து வரும்.)



"விலைவாசியோ விஷம்போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. மனிதர்களோ வர வர மோசமாகிக்கோண்டே வருகிறார்கள்......"

---

# ஆரம்பம் முடிவுவரை

யுத்தம் அவனை அனாதையாக்கிய பொழுதுகளில் அவனது பத்து வயதுப் பருவம் கூட நிரம்பவில்லை. இனிய மாலையும் இரவும் கழிய இருளாய் விடிந்த கரிய நாளது. உறவுகளும் உறைவிடமும் விலகிப் போக பாரிய உலகத்தில் தனித்து விடப்பட்டான் ரகு.

அகதி முகாம்களுள் ஆயிரமாய் சனக் கூட்டம். நெஞ்சு நிறைந்த சோகமும் ஏக்கமும் வேதனையும் சுமந்து அலைந்து திரிந்தான்; அல்லாடினான். ஜீவிதம் சிரமமாயிருந்தது. 'சொந்தங்களையெல்லாம் தின்று தீர்த்த யுத்தம் என்னையும் தொலைத்திருக்கலாம்' என எண்ணி புலம்பல்களோடு நாட்களைக் கழித்தான்.

நிவாரணம் தர வந்திருந்த பெரிய மனிதர்களுள் ஒருவர் அவனை அடையாளம் பிடித்தார். "என்னோடு வர்றியா? சாப்பாடெல்லாம் தந்து நல்லா கவனிச்சுக்குவேன்." அவனைப் பார்த்துக் கூறினார். ஏற்றுக்கொண்டான். 'சாப்பாடு மட்டுந்தானா? நான் தொலைத்த கல்வி- அதைத் தொடரும் பாக்கியம் கிட்டாதா?' மனதுக்குள் வினாவோடு போனான். நப்பாசை தான். நிறைவேறவில்லை.

பெரிய மனிதர் உண்மையில் எண்ணத்தாலும் உயர்ந்தவர் போல்தான். கவனித்துக்கொண்டார் கரிசனையோடு. விடியல் முதல் அந்தி மாலை வரை அவரின் மளிகைக் கடையில் வேலை.



செய்தான். சில நாட்களில் பெரியவரின் வீட்டு வேலைகளும் செய்ய நேரிடும். தோட்டத்தை சீர்படுத்தல், இத்யாதிகள். நாட்கள் உருண்டோட வருடங்களும் வந்து போயின.

பெரியவரின் மனைவி அவருக்கு நேர்மாறான குணம். ஒரே மகள். அவனின் வயதிருக்கும். திமிர் அதிகம். பணத்திமிர்! அழகென்ற கர்வம். ஓடிய வருடங்களில் இவர்களைப் பற்றி நிறையவே தெரிந்து கொண்டான்.

"மூஞ்சி மொகறையப் பாரு. ஆந்த முழி" என பெரியவர் மகளும் மனைவியும் எள்ளி நகையாடுவர். சிரிப்பார்கள். பொறுத்துக்கொள்வான்.

இப்போதெல்லாம் பெரியவருக்கு ரகுவை ரொம்பவும் பிடித்துப் போனது. கடை வேலை விடுத்து வீட்டு வேலைகளை-அதுவும் முக்கிய அலுவல்களை அவனைக் கவனிக்கச் சொன்னார். அதிலும் அவரது செல்ல மகளை அவதானிப்பது அவனுக்கு இரகசியமாக ஒப்படைக்கப்பட்ட வேலை.

பொண்ணுக்குரிய அச்சம், மடம், நாணம் எதுவுமே கொண்டிராது அவள் இளைஞர்களோடு ஆடிக் களிக்கும் விதம் பெரியவரின் காதுகளை வந்தடைய கொதித்துப் போனார். அதன் விளைவே அப்பணி. இது அவளுக்குத் தெரிய வர, பத்ரகாளியானாள். "ஒண்டிப் பிழைக்க வந்த எச்சில் நாய் நீ. என்னை வேவு பார்க்கிறியா?" அவன் ஒரு ஆண்மகன் என்பதையே கருத்திற் கொள்ளாது வார்த்தைகளைப் பிரயோகித்தாள்.

வார்த்தைகள் தன்மானத்தை சீண்டிவிட அவன் பொறுமையின் எல்லையைக் கடந்தான். பெரியவரிடம் மட்டும் சொல்லிக் கொண்டு மீண்டும் பாதையிலிறங்கினான். வானமே கூரை. பூமியே வீடு. பெரியவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். கெஞ்சினார். "உன்னை என் மகனாகவே நெனச்சிருந்தேன் ரகு. அவ ஏதோ தெரியாத் தனமாக சொல்லிட்டான்னு நீ இப்படி என்னை அனாதையாக்கிட்டு போறியேப்பா....ஒண்ணா ரெண்டா? பத்து வருஷமா என் பக்கத்தில் வைச்சிருந்தேனே..." என புலம்பினார். மனமுருகினார். அவனும் கூட அழுதான்-இரகசியமாக!

இடைநின்ற யுத்தம் மீண்டும் தொடங்கிற்று. மீண்டும் அகதிகள், அனாதைகள், ஊனமுற்றோர் என மனிதம் இழிவடையலாயிற்று. ரகு அதற்கு பழகிப் போனான். பெரியவரை விட்டு விலகிப் போனானே தவிர அவ்வூரை விட்டுப் போகவில்லை அவன். யுத்தம் அங்கும் பரவிற்று. இழப்புகள் ஆரம்பமாயின. உயிர்களும், உடமைகளும் அழிந்தன. ஊரே உருக்குலைந்து போயிற்று. மாதங்கள் எட்டு உருண்டோடின.

அகதி முகாம். அருகே ஒரு மாமரம். ரகு சாய்ந்திருந்தான். "ரகு...." யாரோ வேதனையின் விளிம்பில் அழைப்பது புரிந்தது. அருகிருந்த பற்றைகளில் சலசலப்பு. எழும்பித் தேடினான்; புரிந்ததும் அதிர்ந்தான்.

பெரியவரின் செல்ல மகள்-முகத்தில்-சிராய்ப்புகளும் உடலில் காயங்களும் சுமந்தும், முனகிக் கொண்டவாறே உட்கார்ந்திருந்தாள். வயிறு பெருத்து வீங்கியிருந்தது. "என்னைத் தெரியுதா?" என்று கேட்டபோது "ம்" என்றான்.

"அப்பா, அம்மா எல்லாருமே செத்துப் போயிட்டாங்க ரகு. நான் மட்டும்...நான்....மட்டும் அனாதையாகிட்டேன்." ரகு மௌனமாயிருந்தான். அவளே தொடர்ந்தாள். "நான் நம்பியிருந்த..காதலிச்ச மனோவும் என்னை ஏமாத்திட்டு...இந்த சுமைய தந்திட்டு....போயிட்டார்..."

"அழாதீங்க. எல்லாம் இறைவன் செயல்....." ரகு தத்துவம் பேசினான். மனதுக்குள் "ஒண்டிப் பிழைக்க வந்த எச்சில் நாய் நீ...." என்ற வார்த்தைகள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தன.

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புதிய அவதாரம்

**ஜெயந்தி ஜெய்சங்கர்**

**கா**யத்திரி வழமை போல் வீட்டு வேலைகளை முடித்து விட்டு தையல் வகுப்புக்கு வெளிக்கிட்டவள் வாசலில் எதிர் வீட்டு வசந்தி நின்றதைப் பார்த்ததும் "வா வசந்தி! என்ன புன்சிரிப்போடை என்ன விசயம்?" கேட்டுக் கொண்டே புடவையை சரிசெய்து கொள்கிறாள்.

கதிரையை தன் அருகே இழுத்து அமர்ந்தவள் "ம் உனக்கென்ன இனிக் கொண்டாட்டம் தான்!" பெருமூச்சோடு சொன்னபோது காயத்திரி எதுவும் புரியாமல் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தாள்.

காயத்திரிக்கு அவள் சொன்னது ஆச்சரியத்தைத்தான் ஏற்படுத்தியது. நாலு பெண் சகோதரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வயதுக்கு வந்து நின்ற போது தந்தையை இழந்த அந்தக் குடும்பம் சீவிப்பதே இவளது பெருமுயற்சியால் தான். தையல் வகுப்பு நடத்தி அதில் வரும் சொற்ப பணத்தில் மிச்சம் பிடித்து தனது முயற்சியால் தங்கைகளைப் படிப்பித்தும் வருகிறவள் அவள். தாய் நோய்வாய்ப்பட்டவள். எதையும் எழுந்து செய்ய இயலாதவள். இந்நிலையில் இவளுக்கு கொண்டாட்டம் என்றதும் சந்தோசப்படவா முடியும்?

"புதிர் போடாமல் சொல்லு! நான் போக வேணும்." சலன்மின்றி கேட்டாள்.

"பவளமக்காவின் மகன் சுகுமார் வெளிநட்டிலை இருந்து வந்திட்டான், காலையில கடைக்குப் போகேக்கை கண்டனான்." வசந்தியின் வார்த்தையை கேட்டதும் ஆயிரமாயிரம் பூக்கள் உள்ளத்தில் மலர்ந்து. சொற்ப வினாடியில் அவை அப்படியே உதிர்ந்து விட்டன.

"இதைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகை போட்டனியாக்கும்!" அவள் விருட்டென்று வாசலுக்கு வெளியேறி "நான் வாறன் நீ அம்மாவோடு இருந்து கதைத்து விட்டுப்போ." காயத்திரி கூறிக்கொண்டே வீதியில் நடக்க ஆரம்பித்தாள்.

தான் கொண்டு வந்த செய்திக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தோடு வசந்தி தோளைக்குலுக்கி விட்டு விறு விறு என்று வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

என்னதான் அகத்லை முகத்தில் காட்டாமல் சலனமற்றவள் போல் பதில் சொல்லிவிட்டு வந்த போதும் காயத்திரியால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடக்க முடியவில்லை.

மனம் எதை எதையோ அசைபோட கால்கள் இடற ஆரம்பித்தன.. தன்னைத் தான் சுதாகரித்துக்கொண்டு நிமிர்ந்த போது "ஏன் காயத்திரி என்ன செய்யுது? தலையை சுத்துதா இந்தாரும் இதில இருந்து இதைக் குடிச்சிட்டுப் போம்" அவன் தேநீர் வார்த்து நீட்டியபோது மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் குடித்தவள் "நான் வாறன் கண்ணன் உமக்குச் சரியாக கடமைப்பட்டிருக்கிறன் அந்தக் கடன் எல்லாம் எந்த ஜென்மத்திலை அடைப் பேனோ தெரியாது" அவள் சொல்லிவிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நடந்தாள்.

"காயத்திரி" ஏதோ சொல்ல முனைந்தவன் அவள் திரும்பிப் பார்த்ததும் "ஒன்றும் இல்லை நீ போ காயத்திரி" என்றான்.

காயத்திரி இருக்கும் தெருவில் சில்லறைக் கடை வைத்திருப்பவன் அவன். சிறிய வயதில் விளையாடும் போது விழுந்து ஒரு காலை உடைத்துக் கொண்டதால் பொய்க்கால் போட்டுள்ளான். தாய் தந்தைக்கு ஒரே



மகன். வசதியான குடும்பத்தவன் என்றாலும் தான் ஊனமானவன் என்ற தாழ்வு மனப்பான்மையால் எதையும் வெளிப்படுத்த முடியாமல் உள்ளூர பொருமிக்கொண்டிருப்பவன்.

காயத்திரியின் குடும்பத்தின் மேல் கண்ணனுக்கு கரிசனை ஏற்படக் காரணமே காயத்திரி மேல் ஏற்பட்ட காதல்தான். அவளது அடக்கமான குணம், பிறரை மதித்து நடக்கும் பண்பு, சிறிய வயதில் இருந்து குடும்ப சுமையை சுமந்து நடக்கும் பொறுப்பு எல்லாமே அவள்மீது அன்பை ஏற்படுத்தியபோதும் தன் அன்பை அவள் ஏற்பாளோ என்று தயங்கியே தன் எண்ணத்தை வெளிப்படுத்தாமல் இருந்தான்.

காயத்திரி சென்று மறையும்வரை நோக்கியவன் கடைவேலையில் மூழ்கலானான்.

தையல் வகுப்பு எடுத்து விட்டு வீடு வந்த காயத்திரியை வாசலில் வைத்து வழிமறித்த மூன்றாவது தங்கை சுபத்ரா, "அக்கா அக்கா சுகுமார் அம்மாவோடை வீட்டுக்கு வந்திருக்கிறார். உன்னைப் பார்த்துக் கொண்டு நிக்கினம். ஏதோ கதைக்க வேணுமாம்."

காயத்திரிக்கு இதயம் ஒரு கணம் நின்று மீண்டும் இயங்கியது. 'ஏன்? எதற்காக? ஒருவேளை என்னை மறக்காமல் இப்பவும் நினைத்துக் கொண்டு...' எதையெதையெல்லாமோ நினைத்துக்கொண்டாள். முகத்தில் சோகத்தின் ரேகைகள் படர ஆரம்பித்தன.

'பாலைவனமான கற்பனைகள் மீண்டும் சோலையாகுமா? தரிசான மனதில் ஆசைப் பயிர் வளருமா? கருகிப் போன காதல் சாம்ராஜ்யத்தில் ஆட்சி ஆரம்பிக்குமா?'

அவள் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

'எட்டு வருடங்கள் அவன் முகம் பார்த்து எப்படியிருப்பானோ?' ஏதோ ஒரு மூலையில் மனம் அவனைப் பற்றி ஆவலாய் விசாரித்தபோது விழிகளுக்குள் நீர் திரையிட்டது.

கல்லூரி நாட்களில் கனவை விதைத்தவன். 'அம்மாவிடம் கேட்டு மணம் முடிப்பேன்' என்று உறுதி உரைத்தவன் எட்டு வருடங்களின் பின் இவளைத் தேடி வந்தபோது இதயம் குளிர்ந்தாலும் எதையும் காட்டிக்கொள்ளாதவளாய் கதவைத் திறந்த போது எதிரே சுகுமார் மெல்லிய புன்சிரிப்புடன் அவளை நோக்கினான்.

பதிலுக்கு சிரித்தவள் அருகில் இருந்த அவனது தாயைப் பார்த்ததும் கைகளைக் கூப்பி வணக்கம் சொன்னாள். தாய் பவளத்தின் முகத்தில் சந்தோசப் பூக்கள் மலர்ந்தன.

தேநீர் கலந்து குடிக்க கொடுத்து விட்டு தன் தாயின் அருகில் சென்று அமர்ந்தாள் காயத்திரி. சுகுமார் இடையிடையே காயத்திரியைப் பார்த்து மெல்லச் சிரித்துக்கொண்டான். ஏதாவது கதை கேட்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது. தலையைக் குனிந்தபடி மௌனமாயக இருந்தாள்.

சுகுமாரின் அம்மா அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தாள். "இங்கை பெரியவங்க என்று யாரும் இல்லாததனால் உங்களிடமே சொல்லலாம்" என்று பீடிகை போட்டபோது ஒரு கணம் என்ன சொல்லப் போகிறர்ளோ என்று ஆவலுடன் நிமிர்ந்து நோக்கினாள் காயத்திரி. "தம்பி சுகுமார் காயத்திரியை கல்யாணம் பண்ணித்தர வேணும் என்று வற்புறுத்தி சொன்னதாலை கூட்டிக்கொண்டு வந்தனான். எனக்கும் இரண்டு பொம்பிளைப் பிள்ளைகள் இருக்கு. அதுகளுக்கும் கல்யாணம் எண்டு வரேக்கை தம்பிதானே செய்ய வேணும்! அதாலை சீர் என்ன? எவ்வளவு செய்வீங்க? எண்டு சொன்னால் நல்லது." அவள் சொன்னதைக் கேட்டதும் இருவர் மனதும் உடைந்து போய்விட்டது.

காயத்திரியின் அம்மா அழாக்குறையாக "எங்கடை குடும்பத்தைப் பற்றி நல்லாத் தெரிந்து கொண்டு நீங்கள் கேட்கிறது அவ்வளவு நல்லது இல்லை. பழகின பிள்ளை மறக்காமல் வந்து வாழ்வு கொடுக்கும் என்று மனம் மகிழ்ந்து இருந்த எனக்கு இப்படி அதிர்ச்சியைத் தந்திட்டீங்களே அம்மா. அவர் இருந்தால் கட்டாயம் பிள்ளைகளுக்குக் கொடுத்திருப்பார். நானும் ஏலாதவள். எங்களிட்டை சீர் என்று செய்ய எதுவும் இல்யைம்மா" கூறியபோது சுகுமாரின் தாயின் முகம் சுருங்கி விட்டது.

வேறு இடத்திலை நிறைய சீர் சிறப்போட கேட்டு வந்தவை. எல்லாத்தையும் வேண்டாம் என்று விட்டு இவன் கரைச்சல் படுத்துகிறான் எண்டதுக்காக இங்கை கூட்டிக்கொண்டு வந்தனான். நீங்கள் இப்படி சொன்னால் என்ன முடிவு? உங்கட பிள்ளைக்குத் தானே கொடுக்கப் போகிறியள்."

தாய் கதைத்துக் கொண்டிருந்தபோது சுகுமார் எதாவது மறுத்துச் சொல்வான் என்ற எதிர்பார்ப்பில் இருந்தவள், அவன் எதுவும் கூறாமல் தலை குனிந்தபடி இருந்ததைப் பார்த்ததும் காயத்திரிக்கு கோபம் வந்தது.

"சுகுமார் நீங்கள் படிக்கும் போது என்னை விரும்பி அம்மாவிடம் கேட்டுவிட்டு என்னையே திருமணம் முடிப்பதாய் உறுதி கூறிவிட்டு இத்தனை வருடம் இவள் இருக்கிறாளா இல்லையா என்று கூட பார்க்காமல் இருந்தபோது கூட நான் வருத்தப்படவில்லை. என்னுடைய குடும்ப நிலை உங்களுக்கு நல்லாகவே தெரியும். செலவு செய்து படிப்பிக்க ஆளில்லாததால படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு வீட்டோட இருந்தனான், எத்தனை வருடமானாலும் என்னைத் தேடி வருவீங்க என்ற நம்பிக்கையோட இருந்தனான். நீங்கள் வெளிநாட்டுக்குப் போயும் ஒரு கடிதம் கூட போடாமல் இருந்தபோது என் கனவுகளையும் துடைச்சுப் போட்டு, வீட்டு நினைப்போடயே வாழ்ந்திட்டன். எட்டு வருடத்திற்குப் பின்பு வந்து எனக்கு வாழ்வு தராட்டியும் என்னை வேதனைப்படுத்தாதீங்க சுகுமார்!"

அவள் அழுதபோது "காயத்திரி அழாதை காயத்திரி எனக்கு இரண்டு தங்கச்சி இருக்கு. வெளிநாட்டுக்குப்போய் உழைச் சாலும் பெரிசாய் மிச்சம் ஒன்றும் இல்லை. தங்கைச்சிகளுக்கு கலியாணம் செய்து வைத்து நானும் கல்யாணம் கட்டுவதென்றால் நிறைய பணம் தேவைப்படும். அதாலை தான் அம்மா கேட்டவ. நான் நல்லாயிருக்க வேணும் என்றுதான் அவவுக்கு விருப்பம். ஒண்டுமில்லாமல் செய்திட்டு கஸ்டப்படுகிறதைப் பார்த்தும் அவதானே அழவேணும்."

சுகுமார் சொன்னபோது அருவருப்பாய் அவனை நோக்கியவள், "வேண்டாம் சுகுமார் இனி எதுவும் கதைக்காதீங்க உங்கடை எதிர்பார்ப்புக்கு ஏற்ற மாதிரி குடும்பத்திலை பெண்ணைப் பார்த்து கட்டிக்கொள்ளுங்க. நீங்க நல்லாயிருங்க அது போதும்!" அழுதபடியே அவள் அறைக்குள் ஓடி கதவைச் சாத்திக் கொண்டாள்.

**வி**ஷயம் அறிந்த கண்ணன் துடித்துப் போனான். 'எவ்வளவு வசதி இருந்தும் தாய் தகப்பன் யாரும் இல்லாமல் வாழும் எனக்கு இவ்வளவு பணம் இருந்தும் என்ன பிரயோசனம். வறுமைப்பட்ட குடும்பத்தில் பிறந்த ஒரே குறையைத் தவர வேறு என்ன குறை அவள் மீது போட முடியும்? வறுமையில் பிறந்தவர்கள் வாழத் தகுதி இல்லாதவர்களா? இல்லை என் சொத்து அனைத்தையும் கொடுத்து நான் காயத்திரிக்கு மணம் செய்து வைப்பேன், ஒரு முடிவுடன் எழுந்து காயத்திரி வீடு நோக்கி நடந்தான்.

கண்ணனைக் கண்டதும் கண்களைத் துடைத்துக் கொண்டவள் "வாங்கோ கண்ணன்" என்று வரவேற்று தேநீர் ஊற்றிக் கொடுத்தாள். காயத்திரி நீட்டிய தேநீர் கோப்பையை கையில் வாங்கியவனாய் தான் வந்த விடயத்தை தெரிவித்த போது காயத்திரி அதிர்ந்து விட்டாள்.

"வேண்டாம் கண்ணன். அது முடிஞ்சு போன கதை. தொடர வேண்டாம். அதைக் கனவா மறக்க நினைக்கிறன்." சொல்லிவிட்டு காயத்திரி அழுதபோது கண்ணனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டவன் விழிகளில் திரையிட்ட நீரை மறைக்க மிகச் சிரமப்பட்டான்.

"கண்ணன்! உம்மிடம் கேட்கிற அளவுக்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. நான் கேட்கிறது தப்பென்றால் அதை இந்த இடத்திலேயே மறந்து விடுங்கோ. உங்களுக்கு விருப்பமென்றால் பவித்திராவை....." என்று ஆரம்பித்த போது கண்ணன் ஒரு கணம் நிலை குலைந்து போனான்.

"வேண்டாம் காயத்திரி. நான் உண்மையைச் சொல்கிறேன். நான் உன்னைத்தான் மனமார நேசித்தேன். உன்னையே தெய்வமாகப் பூஜித்தேன். நீ இருந்த இடத்தில் இன்னொருத்தியை-அதுவும் உன் தங்கையை என்னால் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க ஏலாது. காயத்திரி. நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது. இந்த வலது குறைந்தவனை நீ மணக்கச் சம்மதிக்க மாட்டாய் என்றுதான் நான் எதுவுமே கேட்கவில்லை. உன் குடும்பத்தில் ஒருத்தனாக இருந்து எல்லோரையும் வாழ வைப்பன். என்னை நீ மணக்கச் சம்மதிப்பாயா...?"

அவன் கேட்டபோது அகமும் முகமும் மலர அவள் புன்சிரிப்போடு சம்மதித்ததும் கண்ணன் புதிய அவதாரம் எடுத்துக் கொண்டவனாய் மகிழ்ந்து போனான்.

# ★ மணிரத்தின மார்க் காதல்

**ஆதர்ஷணா**



**கா**லை ஆறுமணிக்கு எழும்பி காலைக்கடன்களை முடித்துவிட்டு முக்கால் மணிநேரம் கண்ணாடி முன்னர் செலவழித்த கௌரி சங்கர் ஹாலில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். 'ம்... இப்பதான் மணி 7.15. இன்னும் அவ பஸ் ஸ்டாண்டிற்கு வந்திருக்க மாட்டா. 7.30 தானே வருவா. சாப்பிட்டுப் போவம்.' என்று மனத்திற்குள் பேசியவாறே சாப்பாட்டு மேசையை நோக்கி நடந்தான்.

சப்பிட்டு விட்டு எழுந்தவன் 'போயிட்டு வர்றேன்' என அம்மாவிடம் சொல்லி 'பைலை' எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினான். பஸ் ஸ்டாண்டை அடைந்தவன் முகம் மலர்ந்தான்.

கௌரி சங்கர்:- வயது - 28. க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து விட்டு கம்பியூட்டர் வகுப்புக்கு சென்று கொண்டிருப்பவன். 9.00 மணிக்குத் தொடங்கும் வகுப்புக்கு 'பிரக்டிகல் கிளாஸ்' என்று பொய் சொல்லிவிட்டு 7.30க்கே புறப்படுவதை கடந்த ஒரு மாதமாக பின்பற்றி வருபவன். 'அவளை' கண்டது முதல் அவள் ஏறும் பஸ்ஸில் ஏறி 'அவள்' படிக்கும் பாடசாலை வாசல் வரை சென்று வழி அனுப்பி விட்டு (அவளுக்குத் தெரியாமல் தான்) கம்பியூட்டர் கிளாஸுக்குப் போய் மீண்டும் 2.00 மணிக்கு பாடசாலைக்கு எதிரேயுள்ள பஸ் ஸ்டாண்டில் காத்திருப்பவன்-ஒரு வார்த்தையும் பேசாமலே.

இன்று எப்படியாவது அவளோடு கதைத்து விடுவது என்ற முடிவை நேற்று இரவு பகலாக யோசித்து எடுத்திருந்தான். பஸ் வந்தது. ஏறிக் கொண்டார்கள். பஸ்ஸைவிட்டு இறங்கி 5 நிமிடமளவில் பாடசாலைக்கு நடந்து செல்லும் தூரத்தை பயன்படுத்திக் கொண்டான் கௌரி சங்கர்.

"ஹலோ" என்றவனின் குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தாள்.

"உங்களிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும். நான் கடந்த ஒரு மாதமா உங்க பின்னால சுத்திக்கிட்டிருக்கேன். உங்கள முதன் முதல்ல பார்த்தவுடனேயே 'ஐ லவ் யூ' சொல்லிவிட்டேன்; மனசுல. நீங்க சரின்னு சொன்னா உங்கள......." என்றவனை "முடிஞ்சிருச்சா இல்ல இன்னும் இருக்கா? இதென்ன சிவாஜி கணேசன் பட ஸ்டைலில் நீட்டி முழக்கிட்டு போறீங்க. இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. மணிரதனம் ஸ்டைலில் ரொம்ப சுருக்கமா பேசப் பழகுங்க. அதுக்கு பிறகு தான் 'லவ்' எல்லாம்" என்றவள் பதிலுக்கு காத்திராமல் விரைந்தாள்.

குழம்பிப் போனான் கௌரி சங்கர். ரஜனி ஸ்டைல், கமல் ஸ்டைல் தெரியும்; பார்த்திருக்கிறேன். அதென்ன புதுசா மணிரத்ன ஸ்டைல்? புது நடிகராக்கும் என நினைத்தவன், மாலையில் நண்பர்களின் புண்ணியத்தால் அவர் ஒரு டைரக்டர் என்பதை தெரிந்துகொண்டு அவர் இயக்கிய படங்களை பல தடவை பார்த்து, ஏறக்குறைய வசனங்களை பாடமாக்கி ஒத்திகை பார்த்து இரண்டு கிழமைக்குப் பின்பு அவளை சந்திக்கச் சென்றான்.

"உங்க பேரென்ன?"

"செல்வி.... தமிழ்ச் செல்வி"

"என்ன கிளாஸ்ல படிக்கிறீங்க?"

"க.பொ.த. (உ/த)..... விஞ்ஞானம்"

"உங்க வீட்ல எத்தனை பேர்?"

"அப்பா, அம்மா, தம்பி 2, தங்கை."

"எனக்கு உங்களப் பிடிச்சிருக்கு. உங்களுக்கு!?"

"பிடிச்சிருக்கு.... ரொம்பப் பிடிச்சிருக்கு"

"முக்கியமான விஷயம் பேசணும். மாலையில எங்காவது மீட் பண்ணலாமா?"

"எங்கே?..... எப்போது?"

"பாடசாலைக்கு பக்கத்தில இருக்கிற கோயில்ல. 2.00 மணிக்கு வருவீங்க தானே?"

"வர்றன்... நிச்சயமா வர்றேன். பை" என்றவாறே சென்று விட்டாள். மாலையில் என்ன விதமாக பேசுவதென்று மனத்திற்குள் ஒத்திகை பார்த்தபடியே நடக்கத் தொடங்கினான் கௌரி சங்கர்.

# ஆதாரம்

**நாக பத்மநாதன்**

**உருவகக் கதை**



**அ**து கட்டுக்குலையாத காடு.

அங்கு அத்தனையும் சுதந்திரமாய் நின்றன. மலர இருந்த சிறு அரும்பு முதல் வானளாவ நின்ற முழு விருட்சம் வரை, எங்கும் எதிலும் அந்தச் சுதந்திர அழகே செறிந்திருந்தது.

அங்கு வானோர் விளையாடினர்!

அது விசேட நாளாகையால் அவர்களது அரசனும் அன்று வந்திருந்தான். காட்சியைக் கண்டு களித்த அரசனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. வேண்டியதை அள்ளிக் கொடுத்துவிட்டுச் செல்ல விரும்பி, விருட்சங்களை கனிவோடு பார்த்தான்.

"இந்த அழகான காட்டை அமைத்து நிற்பதே நீங்கள் தான். உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்; தருகிறேன்" என்றான் அவன்.

மரங்கள் பேசாது நின்றன.

"நிறைந்த நீர்ச்சுனைகளை அமைத்துத் தரட்டுமா? அல்லது மழையைத் தவறாது பொழியச் செய்யட்டுமா?" இவ்விதம் வினவினான் மன்னன்.

"வேண்டாம்" என்பது போல மரங்கள் மௌனம் சாதித்தன.

"உங்கள் வேருக்கு தகுந்த உரத்தை ஊட்டிச் செல்லட்டுமா?"

அதற்கும் மரங்களிடமிருந்து விடை வரவில்லை.

"சூரிய ஒளி போதாதிருந்தால் சொல்லுங்கள். மேகத்தை அவ்வேளை விலகச்செய்யவோ, வெய்யிலை கூடுதலாய் எறிக்கச் செய்யவோ என்னால் முடியும்." இவ்விதம் கனிவுடன் பெருமையும் தொனிக்க கூறி நின்றான், வருகை தந்திருந்த அந்த வானவர்கோன்.

மரங்கள் அசையவே இல்லை!

"நிறைந்த நீர், சிறந்த உரம், சூரிய ஒளி-இவற்றை விட இங்குள்ள உங்களுக்கு எதுதான் தேவை?" எனக் குரல்கொடுத்தான் வேந்தன்.

மரங்கள் சிறிது தலைசரித்துப் பார்த்தன. அவற்றுள் முது விருட்சம் ஒன்று அழுத்தம் திருத்தமாகக் கூறிற்று.

"நீங்கள் குறிப்பிட்டதையெல்லாம் எம்மால் பெற்றிட முடியும். எம் வாழ்வுக்கு வேண்டியது வேறு ஒன்றே ஒன்றுதான்."

"என்ன அது?" வேந்தன் ஆவலோடு கேட்டான்.

"அது தான் என் சொந்த நிலம். எம் நிலத்தை பாதுகாப்பின் நாம் அனைத்தையும் பெற்றவரா வோம்; நீடூழி வாழ்வோம்", எனக் கூறி நின்றது அப்பெருவிருட்சம்.

சுதந்திர வாழ்வையுணர்ந்த முழுக் காடும் அதனையே எதிரொலித்து நின்றது.

# நானுமிருப்பேன் நாமில்!

தருவது ரசிகன்

இலக்கிய நயம்

மன்னன் வல்லவராஜனின் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன. நெஞ்சில் புயல்! புயலுக்குக் காரணம், சக்கரவர்த்தி சாளுக்கிய பூபதி கப்பம் செலுத்துமாறும் தம் ஆதிக்கத்திற்கு ஆலவட்டம் பிடிக்குமாறும் விடுத்த செய்தி.

செய்தியோடு வந்த தூதன் முகத்திலும் ஆதிக்கத்திமிர் ஆசனம் போட்டு அமர்ந்திருப்பதாகத் தெரிந்தது வல்லவராஜனுக்கு.

வல்லவராஜன் யோகா பயின்றவன். கோபத்தை-கொந்தளிக்கும் உணர்ச்சிகளை உடைப்பெடுத்த வெள்ளமாய் பாயவிடாது நெஞ்சுக்குள் கட்டிப்போடக் கற்றவன்.

கோபம் சுலபம். மன்னனின் கோபம் யுத்தமாகும். யுத்தம் குடிமக்களையும் பாதிக்கும். வல்லவ்ராஜன் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டான். புயலாய் மையம் கொண்ட கோபத்தைக் கடக்க வைத்துவிட்டு, நிதானமாய் தூதனை நோக்கினான்,

"தூதனே! சாளுக்கியரோடு நட்பாய் இருக்கவே நாம் விருப்பமாய் உள்ளோம்!"

தூதன் சற்றுத் துடுக்காகவே பேசினான்:

"சக்கரவர்த்தி தன் இதய நட்பை தங்கள்மீது உதயமாக்க வேண்டுமானால் சம்மதிக்க வேண்டும் கப்பம் கட்டவும், கட்டுப்பட்டு நடக்கவும்!"

"தூதனே! வல்லவராஜனை நட்புக் கரங்கள் கட்டியணைக்கலாமே தவிர, ஆதிக்கக் கரங்கள் கட்டிப்போட முடியாது!"

"நம் பலம் புரியாமல் பேசாதீர்கள்!"

வல்லவராஜன் நினைத்தால் தூதனை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டிருக்க முடியும். ஆனால் தனது கோபத்தை வெட்டிப் போட்டான்.

"தூதனே! சாளுக்கிய படை பலம் வான்வரை உயர்ந்ததாக இருக்கலாம்; நாடுகள் பல வென்று வெற்றிக் கானம் இசைத்ததாக இருக்கலாம்; சூறைக்காற்றாய் வீசி சுற்றியுள்ள நாடுகளின் சுதந்திரத்தை சுருட்டி விழுங்கி ஆதிக்கம் பூத்துக்குலுங்கும் சாம்ராஜ்யமாக சாளுக்கியம் விளங்கலாம்; ஆனால் அவை அனைத்தையும் விட உயர்ந்தது, ஒரு தரம் இழந்தால் திரும்பவராதது-உறுதியானது-நம் உயிரானது ஒன்று இருக்கிறது தூதனே! அதுதான் தன்மானம்!"

தூதன் திமிரோடு மன்னனை நோக்கினான்.

"வெறும் பேச்சு!"

"தகுதிக்கு மீறித்தூதன் துள்ளக்கூடாது! என் தகுதிக்கு நானும் உன் பேச்சுக்கு பதில் சொல்லக்கூடாது! ஆனாலும் சொல்கிறேன் கேள், தன்மானம் என்பது நமக்கு பேச்சல்ல, அதுதான் மூச்சு! போய்வா!"

"இறுதியாக என்ன சொல்கிறீர்கள்?"

"அன்புக்குக் கைகொடுப்போம்; ஆதிக்கத்திற்கு கையில் இருப்பது எதுவோ அதனால் எல்லாம் கொடுப்போம்! நேசம் கொள்ள வந்தால் வருக என்போம்! நம் தேசம் கொள்ளை கொள்ள வருவோர் என்றால் பெறுக என்போம் தோல்வியை!"

தூதன் வெளியேறினான். வெளியேறும்போது சொன்னான்:

"செங்களத்தில் நீர் சந்திக்கப்போகிறீர் சாளுக்கியரின் சினத்தை!"

வல்லவராஜன் நிதானமாய் ஆசனம் விட்டு எழுந்தான். தூதனை உற்று நோக்கினான்.

"எங்கள் மண், சொந்தமண், இதை சுருட்ட திட்டமிடும் உங்களுக்கு வருவது



சினமல்ல தூதா, சின்னத்தனம்! போய்விடு. தூதனைப் பிணமாய் திருப்பி அனுப்பிய அவப்பெயர் வல்லவராஜனுக்கு வர வேண்டாம்!"

□□

**போ**ர் முரசு வானை அதிரவைத்தது. போர் உடை பூண்டான் மன்னன் வல்லவராஜன்.

மன்னனின் மனைவி மாணிக்கச்சிலை, இன்ப வீணையில் மீட்டிய ராகம் போன்ற குரலில் இன்று சோகத்தை நிரப்பிக் கொண்டு,

"படைபலம் பெரிதாமே?"

என்றாள்.

"உன்னிடம் இருப்பவற்றை விடவா எதிரியிடம் இருக்கப் போகிறது படைபலம்? வாளாக, வலையாக உன் விழிகள், என்றும் வாடாத கனியாக உன் இதழ்கள், நெருங்கிப் பருத்திருக்கும் இரு மலைகள், அவை போதும் முகம் பதுங்கி இன்பப் போர் தொடுக்க! படைக்கலம், பழக்கனி, பதுங்க ஓர் இடம்!"

வல்லவராஜன் தன் தேவியை மார்போடு அணைத்துக்கொண்டான்.

மார்போடு மார்பு சேர வேறொரு பொழுது என்றால் இன்பமென்னும் தேரேறி இருப்பர் இருவரும்! தந்தக் கட்டிலில் இரு சுந்தர மேனிகள் மோதி எழும் சத்தம் கேட்டிருக்கும்.

"என் தேவி நீ தொட்ட இடமெல்லாம் உலாவும் தென்றல் பட்டதுபோல் குளிருதடி! தொடாத இடமெல்லாம் உச்சிச் சூரியன் சுட்டதுபோல் கொதிக்குதடி!"

என்பான் வல்லவராஜன்.

"மன்னவர் பேசும் பேச்சோ இது?"

என்பாள் அவள்.

"மன்னவன் என்றால் மனம் கல்லோ? தவிர, கல்லும் கனியுமன்றே இந்தக் கட்டழகின் தரிசன ஒளி கண்டால்!"

"வணங்காமுடி வல்லவராஜன் இப்படி வளைகிறார் என்றால் நாடு நகைக்கும்."

"சிரசுக்கு முடி ஆளும் பொறுப்பால் சுமப்பது, சரசத்தில் சிரசு ம்டி தேடுவது உன்னால் ஆளப்படவேண்டும் என்ற விருப்பால் வருவது!"

"தமிழ் விளையாடுகிறது தங்களிடம்!"

"கொவ்வை இதழில் பசியாறியதால் பேசும் தமிழும் சுவையாக இருக்கிறது"

"தழுவும் ஆசையால் தமிழைத் தரம் குறைக்கலாமா மன்னவரே? தமிழைப் பேசுவதால்தான் என் இதழ்கள் இனிதாக இருக்கின்றன."

"அப்படியா சேதி? அந்த இனிமை எப்படி என்று இன்னுமொரு தடவை அறியலாமா தேவி?"

என்பான்; இதழ் உண்பான்! ஆனால் இப்போது போர் அழைக்கும் வேளையன்றோ; அதனால்தான் அணைப்பில் விடைபெறும் நோக்கம் இருந்ததே தவிர, விரகதாபம் இருக்கவில்லை.

□□

**போ**ர்க்களம்! சாளுக்கிய படைகள் கடலாய் விரிந்திருந்தன கண் எதிரே!

தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என்று நாற்படையும் அணிவகுத்து நின்றன.

எதிரே நோக்கிவிட்டு தன் படை நோக்கி விழிகளைத் திருப்பினான் வல்லவராஜன்.

சிறிய படை. சாளுக்கிய படைகள் மலை என்றால், தன் படையோ கடுகளவு என்று கண்டான்.

எனினும் மனம் தளர்ந்தானில்லை. 'சிறு உளிதான், எனினும் இறுதியில் அந்த மலை தகரும்' என்று மன உறுதி செய்தான்.

நிலம் அதிர போர் ஆரம்பித்து சிரசுகள் உருள, உதிரம் கடலாய்ப் பெருக மாலை வரை தொடர்ந்தது.

போரின் உக்கிரம் தாங்காமல் உச்சிச் சூரியனும் ஒளிந்துகொள்ள இடம் தேடினான்.

சாளுக்கியப் படையில் பாதி அழிந்தது. வல்லவராஜன் படைகளின் வீரம் கண்டு சக்கரவர்த்தி சாளுக்கிய பூபதி ஆச்சரியத்தால் உறைந்து நின்றான்.

எனினும் போரின் முடிவில் மன்னன் வல்லவராஜன் மார்பில் அம்பு தைத்தது.

மரணம் மடிவிரித்து அழைத்தது.

சாளுக்கியனின் தூதனாக முன்னர் வந்தவன் இப்போது வல்லவராஜனின் அருகில் வந்தான்.

"விட்டுக்கொடுத்திருந்தால் நீ வீழ்ந்திருக்க மாட்டாய் மன்னவா!" என்றான்.

உயிர்பிரியப் போகும் நேரத்திலும் வல்லவராஜன் உதட்டில் புன்னகை உதித்தது.

"விட்டுக்கொடுத்திருந்தால் நான் மட்டும் தான் வாழ்ந்திருப்பேன்; எனக்குப்பின் வரும் தலைமுறை முழுவதும் அடிமைத் தனத்தில் வீழ்ந்து கிடந்திருக்கும்! விட்டுக் கொடுப்பதே விதி என்று மாறியிருக்கும்!"

"இப்போது நீ வீழ்ந்ததால்...?"

"இனிவரும் தலைமுறை போராட உரம் கிடைக்கும்! ஆதிக்கத்திமிருக்கு அடிபணியும் வரலாறு நம்மவர்க்கு சொந்தமில்லை என்று சொல்லி ஆர்த்தெழும் வீரர்கள் சுட்டிக்காட்ட சாட்சி இருக்கும்!"

"ஆனால் இனி நாடிருக்காதே?"

"நானிருக்கமாட்டேன், நாமிருப்போம்!



நாமிருக்கும்வரை நமது நாடிருக்கும்!"

"ஆனால் நீயிருக்க மாட்டாயே!"

"முட்டாள்-! அந்த நாமில் நானுமிருப்பேன்!"

வல்லவராஜன் இறுதியாய் மண் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். அடுத்த நொடியே உயிர் விட்டான்.

தன் பகைவன் என்றும் நினைக்காமல் வல்லவராஜனின் வீரம் நினைத்து தூதன் தலை வணங்கினான். சாளுக்கிய படைகள் மெளனம் காத்து மரியாதை செய்தன.

இக் காட்சியை விளக்க திருவள்ளுவர் குறள் ஒன்று உதவிக்கு வருகிறது.

**"இளியவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளி தொழுது ஏத்தும் உலகு"**

அதிகாரம் 97. குறள் 970.

**"தமக்கு ஒரு இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள்"** என்பது அக் குறளின் அர்த்தம்.

---

**கூட்டணி அரசுடன் 2 மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியது. அது போல் புலிகளுடனும் பேசுமா?**

எம்.என்.எம். நவ்ராஜி-அக்குறனை.

*ஒரு மணிநேரத்தை ஏன் குறைத்தீர்கள்? கவலைப்படப்போகிறார்கள். என்ன, பேச்சா? பேசிப் பட்ட புண் ஆறவில்லை-சிவ சிவா. மீண்டுமா?*

□□

**புலிகளும் அரசும் பாரிய யுத்தம் ஒன்றை நடத்த இருக்கிறார்களாமே? முடிவு என்னவாக இருக்கும்?**

எஸ்.எச்.வஹாப்தீன்-ஹொரவப்பொதானை.

*இருக்கிறார்களாமேயா? இப்போது மட்டும் பட்டும் படாமல் குட்டி யுத்தம் நடப்பதாக நினைப்போ வஹாப்தீன்! இது யாரும் சுலபத்தில் வெல்லமுடியாத யுத்தம்.*

□□

**ஏனுங்க சிந்தி! நம்ம எதிர்க்கட்சி சத்தமே இல்லியே? இன்னா பண்ணுது?**

எம். வை. ஆனந்த்-நுவரெலியா.

*ஏனுங்க ஆனந்த்! பத்திரிகையே ஒழுங்கா படிக்கிறதில்லையா? சத்தம் தாங்காமல் சபையே ஒத்திவைக்கப்பட்டது தெரியாதா? வெளியே சத்தம் இல்லையே என்று கேட்கிறீங்களா? சுவரொட்டிகள் தயாரிக்கும் போது வாய்க்கு வேலை இல்லையல்லவா?*

□□

**நம் நாட்டில் விலை உயர்ந்தது எது?**

பொபி திருச்செல்வம்-அக்கரப்பத்தனை.

*சமாதானம்! அதனால்தானே எவராலுமே அதைப் பெற முடியாமல் இருக்கிறது.*

□□

**'மனிஷா கொய்ராலா' தேடும் ஆண் மகன் நானாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

க. சுதர்சன்-செங்கலடி.

*ஆழ்ந்த அனுதாபங்களை முன்கூட்டியே தெரிவிப்பேன்.*

□□

**காதலுக்கு கண்கள் இல்லை என் பார்களே ஏன் அது?**

எம்.ஐ.தாஹா பய்றூஸ்-அக்கரைப்பற்று-06.

*பார்க்கும் வேலையை மறந்துவிட்டு பற்றி இழுக்கும் கொக்கிகளாக மாறி விடுகின்றன என்பதால் அப்படிச் சொன்னார்களோ..!*

□□

**மனிதன் எப்போது முட்டாளாகிறான்?**

செல்வி நஸீராஜ் சம்சுதீன்-கந்தளாய்.

*இன்னொரு மனிதனை முட்டாளாக்க நினைக்கும்போது.*

□□

**சிந்தியா, பணம் படைத்தவனுக்கு இதயம் இல்லை என்பது சரியா?**

ச.ராமஜெயம்-அட்/எல்கொள்ள எஸ்டேட்.

*பிழை! இதயம் இல்லாவர்கள் உயிர் வாழக் கூடிய அதிசயம் இன்னமும் ஏற்படவில்லை.*

□□

**மறக்க முடியாத இன்பம் எது?**

யோ.விஜேந்தினி-மட்டக்களப்பு.

*அது....வந்து....முதன் முதலில் வாங்கிய முத்தம் அம்மாவிடமிருந்து.*

□□

**டியர் சிந்து! காதலியிடம் சீதனம் கேட்கலாமா?**

எஸ்.ஏ.ராகுலன்-மட்டுநகர்.

*கேட்கலாமே, சீதனமாக அவளையே!*

□□

**பெண்களுக்கு விடுதலை அவசியமானால் நம் நிலை என்ன? தாங்க முடியுமா?**

வி.ரவிகரன்-கண்டி.

*தவறான முகவரிக்கு எழுதிவிட்டீர்கள் ரவிகரன். கருத்துக்களின் கனம் தெரியாமல் கிண்டலடிப்பதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்! பெண்கள் கையில் விலங்கு இருந்தால்தான் தாங்கள் பேச வசதி என்று நினைப்பவர்கள் கையாலாகாதவர்கள் என்று அர்த்தம் மிஸ்டர் ரவிகரன்.*

□□

**தியேட்டரில் காதலர்கள் ஏன் 'பல்கனியை' நாடுகிறார்கள்?**

ஏ.எச்.ராஸீன் மொகமட்-ஏத்தாலை.

*அவர்களிடமே கேட்டுப்பாரும். அவர்கள் பிஸியாக இருந்தாலும் 'எக்ஸ்கியூஸ்மீ' சொல்லிவிட்டு!*

□□

**வாழும் வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும்?**

எஸ்.பத்மாவதி-கொழும்பு-10

*வாழ்ந்தபின்னரும் வியக்கப்படுவதாக!*

□□

**இன்றைய அரசியலில் அமைதியான அரசியல்வாதி என்று யாரைக் குறிப்பிட முடியும்?**

முகமட் சதாத்-மண்முனை.

*முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை.*

□□

**இம்ரான்கானின் திருமணத்தால் ஏற்பட்டுள்ள சர்ச்சை பற்றி என்ன நினைக்கிறீர்?**

ஏ.பாலாஜி-ஹட்டன்.

*வாழப்போவது அவர்கள்தானே; இதில் அடுத்தவர்கள் ஏன் வம்பு வளர்க்கிறார்கள் என்று!*

□□

**உண்மையைச் சொல்லி துன்பப் படுவதைவிட, பொய் சொல்லி பரிசு பெறும் மனிதர்கள் பற்றி?**

ஜெயந்தி சிதம்பரம்-புத்தளம்.

*இன்றைய தேதியில் அவர்களுக்குள்ள பெயர் 'பிழைக்கத் தெரிந்தவர்கள்'.*

□□

---

## குறுக்கெழுத்துப் போட்டி இல—104

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | 4 | | | 5 | |
| 6 | | | | ■ | | |
| | ■ | | ■ | 7 | | |
| ■ | 8 | ■ | 9 | ■ | | |
| 10 | | | | | ■ | ■ |
| ■ | | ■ | 11 | | | |

### இடமிருந்து வலம்

01. போட்டி என்றும் சொல்லலாம்.
04. இவர்கள் சகல பழக்க வழக்கங்களிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டியவர்கள்.
06. இது இலங்கையில் போர் புரிவதற்கும் பயன்படுத்தப் படுகிறது.
07. போரிலே காயப்பட்ட பீஷ்மருக்கு படுக்கை அமைக்க பயன்பட்டது.
10. அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிவது.
11. மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக இதனைச் செய்வார்கள்.

### மேலிருந்து கீழ்

01. கணவனுக்கு மனைவி செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று..
02. கிறிஸ்தவர்கள்,இறந்தவர்களை இப்படிச் செய்வதில்லை.
03. இந்தியாவில் புடவைகளுக்குப் பேர் போன இடங்களில் ஒன்று.
05. ஆசிரியரின் கையிலும் இருக்கும்.
08. சிப்பிக்கு இதனால் பெருமை.
09. நமது நாட்டில் இவர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 17.06.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-104
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-102ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தா | ர | 2 கை | ■ | 3 க | ஞ் | 4 சி |
| 5 வ | ல | ம் | பு | ரி | ■ | லை |
| ணி | ■ | 6 மா | ரீ | ச | ன் | ■ |
| ■ | 7 சோ | று | ■ | ன | ■ | 8 கு |
| 9 கு | ழி | ■ | 10 செ | ம் | ம | றி |
| ரு | ■ | ■ | தி | ■ | ■ | ஞ் |
| 11 வி | ட் | டி | ல் | பூ | ச் | சி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.102இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. ஜி. சிறீமுருகன், பம்பலப்பிட்டி.
2. பாத்திமா ஷிபானா, கொழும்பு-12.
3. செல்வி.ரி. ரஸா, திருகோணமலை.
4. எம். ஜவ்பர், சிலாபம்.
5. திருமதி.ஏ. நெலோமி, செட்டிகுளம்.
6. கே. தில்லைராஜ், கல்முனை.
7. என். ஷாம்ஸ், களுத்துறை.
8. ஹரீஸா எம்.ஏ. காதர், மருதமுனை-01.
9. செல்வி. பவித்ரா சின்னத்தம்பி, அப்புத்தளை.
10. எஸ். மனோகரன், மடக்கொம்புர.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**இவ்வாரம் (18.06.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 82

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
துரியோதனனவன் அரிய வீரன்தான்....!
பெருமைக்குரிய பேராற்றல் மிக்கவன்,
இருப்பினும் போரில் வெறுப்பினையூட்டும்
இகழ்வுகளையே இதமென ஏற்றனன்!
யுதிஷ்டமாமன்னனை உயிருடன் பிடித்தால்
உறுபோரதனை முடித்திடுவேனென
உரைத்தனனோர் பொய் குருதுரோணரிடம்;
பெருவீரனாம் சுசர்மனிடம் பொய்யே புகன்றனன்!
சூதும் வாதும் சூழ்ச்சியும் சேர்த்தே
மோதும் படைகளின் மாண்பு சீரழிந்தே
குருச்சேத்திரத்தின் குணந்தனைக் கெடுத்திட
அருவெறுப்பான அதர்மங்கள் ஏற்றனன்!

**—காட்சி மாற்றம்—**

**துரியோதனனின் பாசறை- துரியோதனனும் துச்சாதனனும்.**

**துச்சா:** அண்ணா....! யுதிஷ்டிரரை கைது செய்தால், அவரை விடுவித்து விடுவதாக சுசர்மனிடம் ஏன் சொன்னீர்கள்?

**துரி:** நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத்தான் வேண்டுமா? யுதிஷ்டிரரிடமிருந்து அர்ச்சுனனைப் பிரிப்பதற்குச் சபதமேற்றுப் போய்க் கொண்டிருக்கும் சுசர்மன், உயிருடன் திரும்பி வரத்தான் முடியுமா? அவன் திரும்பி உயிருடன் வந்தால் அல்லவா நான் கொடுத்த வாக்குக் காப்பாற்றப்படுவது பற்றிய சிந்தனை ஏற்படுவதற்கு! தம்பி, அது நடக்கப் போவதில்லை. அர்ச்சுனன் நிச்சயமாக சுசர்மனை உயிருடன் விடவே மாட்டான்; பொறுத்திருந்துபார்.

-காட்சி மாற்றம்-

**அம்புப் படுக்கையில் உள்ள பீஷ்மரைப் பார்ப்பதற்காக துரியோதனனும் துச்சாதனனும் வருகின்றனர்.**

**துரி,துச்சா:** வணக்கம் பிதாமகர் அவர்களே....!

**பீஷ்மர்:** வாருங்கள் மக்காள்.....இன்று போர்க்களத்தில் என்ன நடந்தது?

**துரி:** போர்தான்....! கடும் யுத்தம்தான் நடந்தது... ஆனால் நாளை இப்போர் நிச்சயமாக முடிந்துவிடும் பிதாமகர் அவர்களே....! ஆச்சாரியார் அவர்கள் நாளை சக்கரவியூகத்தை அமைக்கப் போகிறார்...!

**பிஷ்ம:** சக்கரவியூகமா? வாசுதேவ கிருஷ்ணனும் அர்ச்சுனனும் சக்கர வியூகத்தை ஊடறுக்கும் இரகசியத்தை அறிவார்களே....?

**துரி:** அவர்கள் இருவரும்தான் அந்தப் பக்கத்தில் தலைகாட்டப்போவதில்லையே.....!கிருஷ்ணனையும் அர்ச்சுனனையும் போர்க்களத்திலிருந்து அப்பால் வெகு தூரம்வரை அனுப்பிவிட ஏற்பாடுகள் செய்துவிட்டோமே..! அவர்கள் திரும்பி வருவதற்கிடையில் யுதிஷ்டிரரைக் கைதுசெய்து போரையும் முடிவுக்குக் கொண்டு வந்துவிடுவோமே.....! பிதாமகர் அவர்களே! தங்களுக்கு இந்த மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவிக்கவே நாங்கள் இங்கு வந்தோம்.....!

**பீஷ்ம:** கடவுளே....! இவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கப்படாதா...? அப்பால் போய்விடு! எனது காயங்களுடன் என்னை அமைதியாக இருக்க விட்டுவிட்டு அப்பால் போய் விடுங்கள்...!

**துரி:** அப்போ இதன் அர்த்தம்-நான் தோல்வி காண வேண்டும் என்பதுதானே? அதுதானே உங்கள் விருப்பம்?

**பீஷ்ம:** இல்லை மகனே...இல்லை....நீ தோல்வி அடைவதையும் நான் விரும்பவில்லை....அதே போல் யுதிஷ்டிரனும் தோல்வி அடைவதை நான் விரும்பமாட்டேன். அஸ்தினாபுரம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது ஒரே நோக்கம்! அந்நாட்டில் என்றும் அமைதி நிலவ வேண்டும்....அமைதியும் சுபீட்சமும் அந்நாட்டில் நிலவவேண்டும்! இது மட்டும்தான் என் விருப்பம் மகனே...!

-காட்சி மாற்றம்-

**விதுரரின் இல்லம்—திருதராட்டிரர் வருகிறார்.**

**காவலன்:** மாமன்னன் திருதராட்டிரர் அவர்கள் தங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார்.

**விதுரர்:** அப்படியா...? வணக்கம் அண்ணா..! வாருங்கள்...!இப்படி அமருங்கள்!

**திருத:** என்றும் மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக!

**விதுர:** துரதிஷ்டவசமாக, மகிழ்ச்சியை கடையில் வாங்க முடியாது..வயலில் விளையும் பயிருமல்ல மகிழ்ச்சி...கடையில் கிடைக்கும் பொருளானாலோ அல்லது விளையும் பயிரானாலோ, அது எங்கிருந்தாலும் அதனைப் பெற்றுக் கொண்டு அஸ்தினாபுரம் சேர்த்துவிடுவேன். மகிழ்ச்சியே எங்களை மறந்துவிடலாகாது என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வேன். அது ஒரு புறமிருக்கட்டும் அண்ணா...!தாங்கள் தற்போது இங்கு வந்ததற்கான காரணத்தை அறியலாமோ...?

**திருத:** என்னிடம் அரண்மனைக்கு வரும்படி உன்னை அழைத்தாலும் நீ அங்கு வர மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நானே உன்னைத் தேடி இங்கு வந்தேன்.

**விதுர:** என்னுடைய மூத்த அண்ணன் என்ற நிலையில் தாங்கள் என்னை அழைத்திருந்தால் நான் நிச்சயமாக வந்திருப்பேன்.

**திருத:** அதே வேளை...அஸ்தினாபுரத்தின் மன்னன் என்ற நிலையில் அழைத்திருந்தேனானால்..?

**விதுர:** இதற்கான விடை எத்தகையது என்பது தாங்கள் அறிந்ததுதானே...? அரசருடன் எனக்கு எந்தவிதமான தொடர்பும் கிடையாது அல்லவா....?

**விதுரர் மனைவி வருகிறார்.**

**விது.மனைவி:** வணக்கம் மைத்துனர் அவர்களே!

**திருத:** ஆண்டவன் அருள்பாலிப்பானாக.... விதுரா! என்னுடைய புதல்வர்கள் அனைவரையும் நான் ஒவ்வொருத்தராக இழந்து கொண்டு வருகிறேன். எனக்கு நூறு மருமகள்கள் இருந்தார்கள் என்று இறுமாப்புற்றிருந்தேன். ஆனால் இன்று விதவைகளைத்தான் காணக்கூடியதாக இருக்கிறது. இறுதியாக முழுதாக விதவைகள் தான் மிஞ்சுவார்கள் போல் தெரிகிறது!

**விதுர:** நான் சிலவற்றைக் கூறட்டுமா அண்ணா..?

இறந்தவர்களைப் பற்றி இனிமேல் யோசிக்காமல், ஏனையோரையாவது காப்பாற்றிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்....!


**திருத:** இல்லை விதுரா..அது நடக்காது...சமாதானத்திற்கான அத்தனை சந்தர்ப்பங்களும் கடந்துபோய் விட்டன. இனிமேல் அதில் பின் வாங்குவதற்கான வாய்ப்புகள் எதுவுமே கிடையாது. போரை இடைநிறுத்திவிட முற்பட்டால் என்அன்புக்குப் பாத்திரமான மகன் துரியோதனன் தற்கொலை செய்துவிடுவான்...!

**விதுர:** துரியோதனன் எப்போதோ தற்கொலை செய்து கொண்டானே..! ஆமாம்... அண்ணா..! போர் தொடங்குவதற்கு முன்னர் அவன் தன்னைத் தானே அழித்துக்கொண்டு விட்டானே..!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரப் போர் முனை—கவுரவர் அணி.

**துரி:** ஆச்சாரியார் அவர்களே..! இப்பொழுது அர்ச்சுனனுடைய கொடியோ சின்னமோ காணப்படவில்லை. அவன் வெகு தூரம் சென்றுவிட்டான்..!



**சக்கரவியூகத்துள் புகுந்த அபிமன்யு**

**திருத:** வேண்டாம்...வேண்டாம்...இது உனது அரசியலாற்றலுக்கு அப்பாற்பட்டது. இது கண்பார்வையற்ற..ஆனால் ஒரு சிறந்த தந்தையின் சோகம்! என் கண்கள் ஏன் கண்ணீர் சிந்துகின்றன? என் புதல்வர்கள் எவரையும் கண்களால் பார்க்கும் பாக்கியம் அற்ற நான் இன்று அவர்களுக்காக ஏன் கண்ணீர் வடிக்கின்றேன் என்பதற்கான காரணத்தை உன்னால் கூற முடியுமா...? என் புதல்வர்கள் மடிந்தமைக்காக உன்னால் கண்ணீர் சிந்த முடிந்ததா...?

**விதுர:** ஆமாம்! அழத்தான் செய்தேன் அண்ணா...ஆனால் என்னுடைய சோகத்தை விட எனக்குக் கோபம்தான் அதிகமாக ஏற்பட்டது. அதுவும் தங்கள் மீது தான் நான் கோபப்பட்டேன். தாங்கள் மனம் வைத்திருந்தால் அவர்கள் எவருமே மரணமடைந்திருக்க மாட்டார்கள். தாங்கள் தங்களுடைய பிள்ளைகளை விட அரியாசனத்திலும் மணிமுடியிலுமே அதிக அக்கறை கொண்டிருந்தீர்கள்!

**விதுர.மனை:** தாங்கள் என்ன கூறுகிறீர்கள்..?

**திருத:** அவன் பேசட்டும். அவன் கூறுவது உண்மைதான். எனக்குக் கசப்பான உண்மைதான். இருப்பினும் விதுரர் அதனைக் கூறத்தான் வேண்டும். பேசு விதுரா! பேசிக் கொண்டே இரு..! தம்பி..! என் மகன்கள் திரியோதனனும் துச்சாதனனும் மடிந்தால் அதற்காகத் துக்கம் விசாரிக்கவாவது என்னிடம் வருவாயா...?

**விதுர:** அண்ணா..! தாங்கள் என்ன கருதினாலும் தங்களைப் பற்றி மிகுந்த கவலைகொண்டிருக்கிறேன்..அதுமட்டுமல்லாமல் தங்கள்பால் நான் மகிழ்ச்சியற்றவனாகவும் இருக்கிறேன் என்பதைச் சொல்லித் தான் ஆக வேண்டும். நான் தான் என்ன செய்ய முடியும்? தங்களுடைய நன்மை கருதி நான் தங்களை அறிவுறுத்த வரும் போதெல்லாம் தாங்கள் என் வாயை அடைத்து விடுவீர்கள்! தங்களுக்கு உதவுவதற்கு நான் என் கரங்களை நீட்டும்போதெல்லாம் என் கைகளை அப்பால் தள்ளிவிடுவீர்கள்! இப்போதாவது என் சொல்லுக்கு சற்று மதிப்பினைத் தருவீர்களானால் சொல்லுகிறேன்...சஞ்சயனையும் அழைத்துக் கொண்டு உடனடியாக குருச்சேத்திரம் புறப்படுங்கள். பாத ணிகள் எதுவுமின்றி தங்கள் இரதத்தின் பின்னால் நான் ஓடி வருகிறேன்....! அங்கு சென்றதும் கிருஷ்ணனை அணுகி யுத்தத்தை உடனடியாக நிறுத்தி விடும்படி கோருங்கள்... அண்ணா...! இதுவரை

**சகுனி:** ஆமாம் மருமகனே..! சுசர்மன் அர்ச்சுனனை வெகுதூரம் அழைத்துச் சென்றுவிட்டான். நீ சொன்னது போல் அர்ச்சுனனின் அடையாளமே கண்களுக்குத் தென்படவில்லை!

**கர்ண:** ஆச்சாரியார் அவர்களே! அதோ சுசர்மன் பின்வாங்கி ஓடுவது தெரிகிறதே... கோழையைப்போல் அல்லவோ அவன் ஓடுகிறான்..!

**துரோ:** உம்முடைய கண்களை அதிகம் வருத்துதல் அழகல்ல.... அங்கத்துக் கதிபனே..!

**துரி:** அதனை மறந்துவிடு நண்பனே.. சிந்து நாட்டு மன்னன் என் மைத்துனன் அல்லவா..? ஆச்சாரியார் அவர்களே.. இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்...?

**துரோ:** சுசர்மன் தொடர்ந்து போகட்டும்..அவனைத் தொடர்ந்து அர்ச்சுனனும் கிருஷ்ணனும் போகட்டும்..உடனடியாகத் திரும்பிவராத அளவு தூரம் அவர்கள் போகட்டும்!

**கர்ண:** நீங்கள் எல்லாம் அந்த அர்ச்சுனனைப் பற்றி ஏன் இவ்வளவு பயந்து சாகுறீர்களோ தெரியவில்லை எனக்கு..!

**துரோ:** நான் ஒன்றும் அர்ச்சுனனுக்கு பயந்துவிடவில்லை அங்க நாட்டதிபனே..! அவனை நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். சக்கர வியூகம் அமைக்கப்போகிறோம் என்று அர்ச்சுனன் சிறிதேனும் சந்தேகப் பட்டுவிடக்கூடாது என்பதுதான் என் கருத்தெல்லாம்.

-காட்சி மாற்றம்-

**குருச்சேத்திரம்—கவுரவரின் பாசறையில் ஒரு கூடாரத்துள் கட்டிவைக்கப்பட்டிருந்த வீரன் கட்டை அவிழ்க்க முனைகிறான். இருவீரர்கள் உரையாடுகின்றனர்.**

**முதல் வீரன்:** தம்பி..! நீ என்னோடு மாறுபடலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அவர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது. பாண்டவர்கள் பொறியில் அகப்பட்டுக்கொண்டு விட்டனர் என்றே எனக்குப் படுகிறது.

**இரண்.வீரன்:** இந்தப் போரில் நீதி அநீதிகளைப் பற்றிய கவலை நமக்கேன்? நம்மைப் பொறுத்தவரை நாம் இந்தப் போரில் வெறும் கருவிகளே..! போராட வேண்டியது தான் நமது கடமை! நாம் வாழ்ந்தாலும் மாண்டாலும் எம்மைப் பற்றிக் கவலை எவருக்குமே இல்லை!

**முதல் வீர:** நீ சொல்வதும் சரிதான்..!

(கூடாரத்துக்குள்ளிருந்த வீரன் தப்பியோடுகிறான்)

**இரண்.வீர:** அதோ பார்த்தாயா....அவன் தப்பித்துக்கொண்டான்..! ஓடி வாருங்கள். ஒற்றன் தப்பிவிட்டான்!

**முதல்.வீர:** வா வா வந்துவிடு நாமும் அவனை விடாது தொடர்வோம்.

(பல வீரர்கள் ஓடி வருகின்றனர்.)

-காட்சி மாற்றம்-

**குருச்சேத்திரம்—பாண்டவர் அணி.. யுதிஷ்டிரரை நோக்கி—கட்டிவைக்கப்பட்டிருந்த கவுரவர் படை வீரன் ஓடி வருகிறான். பல பக்கங்களிலுமிருந்து பாயும் அம்புகளால் அவன் காயம் பட்டு வேதனையுடனேயே தடுமாறுகிறான்.**

**வீரன்:** மகாராஜா....மகாராஜா....! அர்ச்சுனரை தங்கள் அருகிலேயே வைத்திருங்கள். தங்களை விட்டு அவர் எங்கும் செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.... ஆச்சாரியார்..!

(இவ்வாறு கூறிய வீரன் கீழே சரிகின்றான்)

**யுதிஷ்:** வீரனே..! ஆச்சாரியாருக்கு என்ன..? என்ன செய்து விட்டார் அவர்..? எங்கள் மீது விசுவாசம் கொண்டவனானால் கண்களைத் திற..என்ன நடந்தது என்று கூறு...!

**வீரன்:** (முனகிய வண்ணம்) சக்கரவியூகம்..!

**வீரன் இறந்துவிடுகிறான்-அவனுடைய சடலத்துக்கு யுதிஷ்டிரர் வணங்கி மரியாதை செய்கிறார்.**

**பீமன்:** எனக்கு நன்றாகவே தெரியும்! உண்மையில் சுசர்மன் கவுரவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட போலி வீரன்! ஆனால் நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அர்ச்சுனன் கேட்காமல் அவன் பின்னால் போய்விட்டானே.

**யுதிஷ்:** கோபப்படாதே தம்பி பீமா! ஆச்சாரியார் சக்கரவியூம் அமைக்கத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்து விட்டது, ஆனால் அதனை ஊடறுக்கும் மார்க்கம் எவருக்கும் தெரியாதே தம்பி..!

**நகுல:** சக்கரவியூகத்தை ஊடறுத்துச் சென்று திரும்பும் வித்தை அண்ணன் அர்ச்சுனனுக்கு நன்றாகவே தெரியும்..ஆனால் சுசர்மன் அண்ணனை எங்கோ இழுத்தடித்துக்கொண்டுபோய் விட்டானே!

**யுதிஷ்:** தம்பி! அர்ச்சுனனின் தேர்ப் பாகனாகச் செல்பவன் முற்றும் உணர்ந்த கிருஷ்ணன் அல்லவா? சுசர்மனை இருவரும் விரட்டிக்கொண்டு செல்வதற்கும் கிருஷ்ணன் ஏதோ ஒரு காரணம் வைத்துத்தான் இருப்பார்.

இதே வேளை **அங்கு அபிமன்யுவந்துசேர்கிறான்.**

**யுதிஷ்:** என்ன மகனே! இந்த வேளையில் இங்குவரக்காரணம் என்ன..?

**அபிம:** கவலையை விடுங்கள் பெரியப்பா... சக்கரவியூகத்தைப் பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். தந்தை இல்லாவிட்டால் என்ன..? அந்த இரகசியங்களைத் தெரிந்துள்ள அவர் மகன் இங்கேதானே இருக்கிறேன். அந்தச் சக்கரவியூகத்தை ஊடறுக்கும் வித்தை எனக்கு நன்றாகவே தெரியும்! ஆனால்...

**யுதிஷ்:** ஆனால் என்ன மகனே..?

**அபிம:** உள்ளே ஊடறுத்துச் செல்லும் மார்க்கம் மட்டும்தான் எனக்குத் தெரியும். வெளிவரும்முறை எனக்குத் தெரியாது பெரியப்பா..!

**யுதிஷ்:** கவலைப்படாதே மகனே..! உனக்குப் பின்னால் நாங்கள் தொடர்ந்து வருவோம். சக்கரவியூத்தை நீ ஊடுருவிச் செல்லும் போது நாங்கள் உன் பின்னால்- அதிக தூரமல்லாமல் தொடர்ந்து வந்துகொண்டிருப்போம்!

-காட்சி மாற்றம்-

**குருச்சேத்திரம்—கவுரவர் அணி—காலை புலர்வதைப் பார்த்த துரியோதனன் துரோனாச்சாரியாரை அணுகுகிறான்.**

**துரி:** குருசிரேஷ்டரே! இன்னும் என்ன தாமதம்? சூரியன் அஸ்தமிக்கும்வரை காத்திருக்கப் போகிறீர்களோ..?

**குருச்சேத்திரம்-பாண்டவர் அணி. போர் தொடங்குவதற்கான சங்கொலி முளங்குகிறது.**

**யுதிஷ்:** அதோ...போர் தொடங்குவதற்கான சங்கொலி கேட்கிறது...மகனே போய்வா! வெற்றியுடன் திரும்புவாயாக..!

**பீமன்:** மகனே அபிமன்யு...! சக்கரவியூகத்தை எங்கிருந்து ஊடறுத்துப் போகப் போகிறாய்?

**அபிம:** முதலில் சக்கரவியூகத்தின் அமைப்பினை நோட்டமிடுவேன். எந்த இடத்தில் உட்புக முடியும் என்பதைக் கண்டறிந்ததன் பின்னர் அதே இடத்தினூடாக உள்ளே புகுந்து விடுவேன் பெரியப்பா!

**யுதிஷ்:** சரி மகனே....! உன்னைத் தொடர்ந்து நாங்கள் வந்து கொண்டிருப்போம்! தள்பதி யாரே! அபிமன்யு சக்கர வியூகத்துள் புகுந்ததும் அவனைத் தொடர்ந்து உள்ளே செல்வதற்கான வீரர்கள் சகலரையும் தாங்கள் நிரைப்படுத்திக் கொள்ளுங்கள்! போய் வா மகனே... ஆண்டவன் உனக்கு அருள்பாலிப்பானாக....!

**அபிமன்யுவின் இரதம் விரைந்து சக்கரவியூக அமைப்பை அணுகுகிறது. குரு துரோணாச்சாரியார் முதற் கொண்டு சகல வீரர்களையும் அபிமன்யு கண்ணோட்டம் விடுகிறான். ஒவ்வொருவர் முன் வந்ததும் அவர்களுக்கு வணக்கம் கூறுகிறான். தனது இரதத்தை வியூகத்துள் செலுத்தியதும் ஜயத்ரதன் வழியை அடைத்து விடுகிறான்.**

**அபிம:** ஆச்சாரியார் அவர்களே.....! மதுரா நாட்டரசர் அவர்களே....! குலகுரு அவர்களே! அங்கத்துக்கதிபர் கர்ண மன்னர் அவர்களே...! அஸ்வத்தாமன் அவர்களே....! பெரியப்பா துரி யோதனன் அவர்களே....!உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைக் கூறுவதுடன் உங்கள் அனைவரையும் எச்சரிக்கிறேன்....!

**துரி:** ஆச்சாரியார் அவர்களே...!குலகுரு அவர்களே..! துச்சாதனா..! நண்பனே கர்ணா..! இவன் சாகடிப்பட வேண்டும் இதுவே என் ஆசை!

**அபிம:** குருசிரேஷ்டர் அவர்களே..! பாரத்துவஜரின் புதல்வரே..! தங்களுடைய பிரதான அபிமான மாணாக்கனாகிய வில்லுக்கு விஜயனின் மகனான அபிமன்யுதான் தங்கள் முன் நிற்கிறேன். மாவீரர்களான தாங்கள் எல்லோரும் போருக்கான தர்மம் மற்றும் கோட்பாடுகளை முற்றாக மறந்துவிட் டீர்களா..? உங்கள் படைத்தளபதியாக இருந்த பிதாமகர் பீஷ்மர் அவர்களால் வகுக்கப்பட்டு உங்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகளை துச்சமென மதித்துவிட்டீர்களா..? ஒரு போர் வீரனை மற்றுமொரு வீரன்தான் எதிர்த்துப்போராட வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு மதிப்பளிக்கப்போவதில்லையா நீங்கள்?

**துரி:** வீண் பேச்சை விடுத்து தைரியம் இருக்குமானால் எம்முடன் சண்டை போடடா சிறுவனே! உன்னுடைய சாவு உறுதியாகிவிட்டது... ஏன் என்றால் இந்தச் சக்கரவியூத்தினுள்ளிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது...!

**அபிம:** தப்பி ஓடுவது என்பது வீரனின் அகராதியில் இடம்பெறாத வார்த்தை என்பதை தாங்கள் அறியமாட்டீர்கள் போலும் பெரியப்பா!

**சக்கரவியூகத்தை ஊடுருவிய அபிமன்யுவை கவுரவர் படையின் முக்கியமான வீரர்கள் அனைவரும் தாக்குகின்றனர். துரோணர், துரியோதனன், கர்ணன், துச்சாதனன், ஜெயத்ரதன் ஆகியோர் தனியாக நிற்கும் அபிமன்யுவுடன் பொருதும்போதும் அவன் தயங்காமல் அவர்களைத் தாக்கிக் காயப்படுத்துகிறான். கவுரவ வீரர்கள் அபிமன்யுவின் தேரை உடைத்து அவனுடைய ஒவ்வொரு ஆயுதங்களையும் களைந்து நிராயுதபாணியாக்கிவிடுகின்றனர்.**

**அபிம:** நீங்கள் அனைவரும் கோழைகள் அல்லவென்றால், ஒவ்வொருவராக என்னுடன் வந்து மோதிப்பாருங்கள்! ஸ்ரீ கிருஷ்ணனின் மாணாக்கன் நான்.... நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தனியாக நிற்கும் என்னிடம் மோதுவதானாலும் நான் பயந்து ஓடிவிடுவேன் என்று கருதிவிட வேண்டாம்! நான் போராடத் தயார்....! நீங்கள் அனைவரும் பேர் பெற்ற பெரு வீரர்கள்! தனியாக நின்ற வீரனை இத்தகைய வீரர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தாக்கினார்களே என்று எதிர்கால வரலாறு உங்களனைவரையும் தூற்றலாகாதே என்பது தான் எனது கவலை! ஏனெனில், என் தந்தையின் குருமார், சகோதரர்கள், உடன் மாணாக்கர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் தான் நீங்கள் எல்லோரும்....! உங்கள் எல்லோருக்கும் கெட்ட பெயர் ஏற்படக் கூடாது என்பதுதான் என் எண்ணம்...!

**கவுரவ வீரர்கள் அனைவரும் ஒன்றாக நின்று அபிமன்யுவைத் தாக்குகின்றனர்.**

-காட்சி மாற்றம்-

**சக்கரவியூகத்துக்கு வெளியே அந்த அமைப்பினை ஊடறுத்துச் செல்ல முடியாது யுதிஷ்டிரரும் ஏனையோரும் தவித்துக் கொண்டுள்ளனர்.**

**யுதிஷ்:** கடவுளே...! சக்கரவியூகத்துக்குள் அபிமன்யு தனியாக அகப்பட்டுக் கொண்டு விட்டானே! அதனுள் மா பெரும் வீரர்கள் அன்றோ நிற்கின்றனர்...? அவர்கள் ஒவ்வொருவரும் பெரும் படைக்குச் சமமானவர்களே...! போர்த்தந்திரங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர்கள் அவர்கள் அனைவரும்... அபிமன்யுவுக்கு ஏதாவதானால் நான் எவ்வாறு அர்ச்சுனனை எதிர்கொள்ளப் போகிறேன்....?

-காட்சி மாற்றம்-

**கவுரவ வீரர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அபிமன்யுவைத் தாக்கி அவனைக் குற்றுயிராக வீழ்த்திவிடுகின்றனர்.**

**அபிம:** இத்தகைய கோழைகளுடன் சண்டையிட்டு சாகவேண்டிய துர்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டு விட்டதே...! என்னருமைத் தந்தையே.....! சூரியன் மறைந்த பின்னர் இங்கு வந்து பாருங்கள்....! உங்கள் மகன் தனி ஒருத்தனாக நின்று, கோழைகளான இந்த மதிப்பிழந்த வீரர்களுடன் நான் எவ்வாறு போரிட்டேன் என்பதை இந்த மண்மாதா தங்களுக்குக் கூறுவாள்! ஓ ஆச்சாரியார் அவர்களே...! பாரத்துவஜரின் மகனே...! பரசுராமாரின் மாணாக்கரே! இதைத்தானா உங்கள் தர்மம் கூறுகிறது? தங்களைப் போன்ற பார் புகழும் வீரரின் தீரச் செயல் இதுதானா....? எனதருமைத் தந்தையே..! தங்கள் அன்பு மகன் அபிமன்யுவின் இறுதி வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்....! எனதருமைத் தாய் நாடே....! இதோ உனக்கு என் இறுதி வணக்கம்....!

(அபிமன்யுவின் ஆவி பிரிகிறது.)

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



436331

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# தருவது-வியோடெ

புலிகளிடம் என்ன விமானம் இருக்குது என்பது தான் இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்களின் பெறுமதியான கேள்வி.

மென்ரக விமானங்களே புலிகளிடம் இருப்பதாக நூற்றுக்கு 85 வீதமான நம்பிக்கை பரவலாக இருக்கிறது.

மென்ரக விமானங்கள் பற்றி அதிகம் பேசப்படுவதால் எமது வாசகர்களுக்கு அவற்றில் சிலவற்றை அறிமுகம் செய்ய ஆசை.

பணக்கார நாடுகளில் உள்ள பலத்த பணக்காரர்கள் தமது பண்ணைகளுக்கு காற்றோட்ட வசதியாக பயணம் செய்வதற்கு மென்ரக விமானங்களை சொந்தமாகவே வாங்கி வைத்திருக்கிறார்கள்.

விளையாட்டாகப் பொழுது போக்க விரும்பும் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் ஜாலியாக பயணம் செய்யவும் இங்கே கார் வாங்குவது மாதிரி அங்கே கிளைடர் விமானம் வாங்கி வைத்திருப்பார்கள்.

விமானிகளுக்கு முதல் கட்ட பயிற்சி கொடுக்கவும் கிளைடர் விமானம் உபயோகமாகும்.


Kala JEWELLERY



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு


61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686



## விளையாடலாம்-வினையுமாகலாம்



'அமெரிக்கன் ஸ்பிரிட்' கிளைடர் விமானம் இது. தரையில் நிற்கும் தோற்றம். ஒருவர் மட்டுமே செல்ல முடியும்.



முன்னால் பறப்பது 'அமெரிக்கன் ஸ்பிரிட்' பின்னால் தொடர்வதுதான் 'ஃபால்கன்'



மிகநவீன கிளைடர் விமானத்தின் உள்தோற்றம். →

கையால் பிடித்தபடி தொங்கிச் செல்லும் ஹாங் கிளைடர் ரொம்பப் பழசு. ஒரு நபர் வசதியாக இருந்து பயணம் செய்யக் கூடிய கிளைடரில் விதம் விதமான ரகங்கள் இப்போது வந்துவிட்டன.

சமீபத்தில் சந்தைக்கு வந்துள்ள கிளைடர் விமானம் மிக நவீனமானது. அங்கம் அங்கமாகப் பிரித்து வைத்து தேவையானபோது வீட்டில் வைத்தே பொருத்தி 'சொய்ங்' என்று கிளம்பிப் பறக்கலாம்.

கம்பங்கள், மரங்கள் போன்றவற்றில் மோதினால் கூட விமானம் ஓட்டிச் செல்பவரின் உயிருக்கு ஆபத்து இல்லாத வகையில் விமான ஓட்டியின் இருக்கைக்கு மேலதிக பாதுகாப்பு அமைப்போடு 'அமெரிக்கன் ஸ்பிரிட்' என்னும் கிளைடர் உருவாக்கப்பட்டுள்ளது.

'அமெரிக்கன் ஸ்பிரிட்' ரக கிளைடர் விமானத்துக்கு சரியான போட்டியாக ஒரு கிளைடர் உற்பத்தியாகியுள்ளது. அதன் பெயர் 'ஃபால்கன்'. தரை இறங்கும் போது கூடுதல் வசதிகள்தான் 'ஃபால்கனின்' சிறப்புத் தகுதி.

## குறிவைத்துச் சீறும்



தினமுரசு வாரமலர்

படத்தில் இருப்பவை பொல்லாத சண்டித்தன விமானங்கள். ஏவுகணைகளிடம் இருந்து தப்புவது மட்டுமல்ல ஏவுகணைகளையே தடுத்து தகர்த்து விட வல்லவை. அது மட்டுமல்ல இன்னொரு சண்டை விமானம் வந்தால் அதனைக் குறிவைத்தும் கணைகளை வீசி அழிக்கக் கூடியவை. இலங்கை போன்ற பரம ஏழை நாடுகள் இவற்றை வாங்கினால் கடன் சுமை கழுத்தை நெரிக்கும்.

## இனி உன் முறை




புதுமாப்பிள்ளை டெண்டுல்கருக்கு கவாஸ்கரை மட்டுமல்ல கபில் தேவையும் பிடிக்கும்.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் கபில் ஒரு சாதனைச் சின்னம். திருமணமான பின்னரும் அட்டகாசப்படுத்திக் கொண்டிருந்தவர் கபில்.

கபிலுக்குப் பின்னர் பந்துவீச்சில் சாதனை படைக்க இந்தியாவில் தற்போதைக்கு யார் என்பது கேள்விதான். ஆனால் மட்டை வீச்சில் சாதனை படைத்துக் காட்ட டெண்டுல்கரால் முடியும் என்று இரசிகர்கள் நம்புகிறார்கள். மணமுடித்த சந்தோச 'மூட்' இனி மட்டையை உற்சாகமாக வீசி நாலுபுறமும் பந்தை விரட்டி ஜாலம் செய்ய டெண்டுல்கருக்கு உதவுமா? பார்க்கலாமே.

பந்து வீச்சுக்கு கபில். மட்டை வீச்சுக்கு சச்சின் என்றாக வேண்டுமானால் சச்சின் இன்னும் நிரம்ப முயல வேண்டும்.

## இரட்டைச் சாதனை




நீரும் நெருப்பும் படத்தில் எம்.ஜி. ஆருக்கு இரட்டை வேடம், இருவரில் ஒருவர் காதலியை கட்டியணைத்தாலும் சரி எதிரியை புரட்டியெடுத்தாலும் சரி மற்றவருக்கும் அந்த மாதிரி உணர்ச்சிகள் வந்துவிடும்.

நிஜத்திலும் அது போல இரட்டையர் ஸ்டீவ் வோவ், மார்க் வோவ். இந்த இரட்டையர் தான் கிளப்புவது கிரிக்கெட்டில். அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் இந்த இரட்டையர்கள் மேற்கிந்திய தீவு அணிக்கெதிராக ஆடி, புதிய சாதனை படைத்திருக்கிறார்கள்.

1877இல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி ஆரம்பித்த பின்னர், முதன் முதலாக ஒரே இன்னிங்சில் இருவருமே சதம் அடித்த இரட்டையர்கள் இவர்கள் மட்டுமே. ஸ்டீவ் அடித்தது 200. மார்க் அடித்தது 126. இருவரில் ஒருவர் புகுந்து பின்னி கட்டத் தொடங்கிவிட்டால் மற்றவருக்கும் ஆவேசம் வந்து விடுமாம். பந்து வீச்சும்-களமும் வாய்த்து விட்டால் இருவருமே சளைக்காமல் ஆடி அசத்திவிடுவார்கள். அமர்கள இரட்டையர்